# இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்

## ஆண்டறிக்கை - 2018

**நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு**

# ஆண்டறிக்கை
# 2018

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்

## நோக்கு

**“இலங்கையின் தொழில்நுட்பக் கல்வித் துறையின் சிறந்த நிலையமாக மாற்றியமைத்தல்”**

## செயற்பணி

**“வலுவாதார அபிவிருத்தியின் நிமித்தம் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய உயர் தேசிய டிப்ளோமாதாரர்களை உருவாக்குதல்”**

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாக 2018 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை எமது நிறுவனத்தின் மற்றுமொரு வெற்றிகரமான முன்னேற்றம் ஒன்றாக மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது இலங்கையில் சிறந்த தொழில்நுட்ப நிறுவனமாக நன்மதிப்பினைப் பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் குறிக்கோளாக அமைவது, தொழில்நுட்பத் துறையின் ஊடாக மிகவும் இலகுவான முறையில் ஊழியச் சந்தையில் பிரவேலசிக்கக் கூடிய திறமையினை எம்மால் உருவாக்குகின்ற டிப்ளோமாதாரர்களுக்கு பெற்றுக் கொடுப்பதாகும். இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் உருவாக்குகின்ற உயர் தேசிய டிப்ளோமாதாரிகளில் பொறியியலாளர்கள், நில அளவையாளர்கள், முகாமையாளர்கள், கணக்காளர்கள், விவசாயம், உணவு தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலாத்துறை என்பவற்றில் அதிகம் பணியாற்றுகின்றனர் என்பதனை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் தற்போது எமது நிறுவனத்தினால் அனைத்து பாடநெறிகளுக்கும் **SLQF** மற்றும் **NVQ** சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாம் வருடத்தை ஆரம்பித்தது மிகுந்த எதிர்பார்ப்புக்கள் பலவற்றினை அடைந்து கொள்ளும் நோக்கத்தினை முதன்மைப்படுத்திய வண்ணமாகும். அதிலே எமது நிறுவன முறைமையினை ஐந்து விதமான இலக்குகளை மையமாகக் கொண்டு எமது நிறுவனத்தைக் கட்டியெழுப்பி வலுப்படுத்திக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அவையாவன, உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, நாடளாவிய கிளை வலையமைப்பினை விஸ்தரித்தல், நிறுவனம் பற்றிய சமூக நன்மதிப்பினை விருத்தி செய்தல், ஆராய்ச்சிக் கலாசாரத்தை இற்றைப்படுத்தல் மற்றும் பதவியணியின் இயலுமையினை விருத்தி செய்தல் என்பனவாகும்.

**2018** ஆம் ஆண்டிற்கான பிரதான பெறுமதிகளாக இந்த அடிப்படை துறைகள் ஐந்தும் நிறுவப்பட்டுள்ளதுடன், இந்த ஆண்டினை இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவன வரலாற்றிலே உயர் முன்னேற்றத்தினை பெற்றுக் கொண்ட ஆண்டாக குறிப்பிடக் கூடியதாக உள்ளது.

நாடு முழுவதிலும் தற்போது இயங்கி வருகின்ற கிளை வலையமைப்பானது மேலும் சில பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் உதவியின் கீழ் இயங்கிவருகின்ற **AHEAD** கருத்திட்டத்தின் ஊடாக கிடைக்கப் பெறுகின்ற நிதியத்தினைப் பயன்படுத்தி புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்குத் தேவையான காணிகளைப் பெற்றுக்கொள்வதின் ஊடாக கிளை வலையமைப்பினைப் பலப்படுத்துவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் நிருவாகமானது பொது துறைகளிலும் அதே போன்று அவர்களுடன் சம்பந்தப்பட்ட விடயத் துறையினுள் பதவியணியின் இயலுமை விருத்திக்காக தொடர்ச்சியாக அர்ப்பணித்து வருகின்றது.

அதன் பிரகாரம் நிறுவனத்தின் கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியின் அறிவு மற்றும் திறன் என்பவற்றினை விருத்தி செய்யும் நோக்கில் பதவியணிக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் பல இந்த ஆண்டிலே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

நிறுவனசார் அபிவிருத்தி, குழுசார் பணிகள், புதிய உற்பத்திகள் மற்றும் வினைத்திறன் என்பவற்றிற்கு உதவும் பொருட்டு இது அடித்தாளம் ஒன்றினை அமைத்துக் கொடுப்பதுடன், உயர் தேசிய டிப்ளோமாக்களின் நற்தன்மையினை விருத்தி செய்வதற்கும் நிறுவனமானது நேரடியாக வசதியளித்து வருகின்றது.

கடந்த சில ஆண்டுகளிலே வருடாந்தம் பதிவு செய்துகொள்வோரின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று இருந்த போதிலும் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற நிதி ஏற்பாடுகள் மிகவும் வரையறுக்கப்பட்டே காணப்பட்டன. எனினும், டிப்ளோமாதாரிகளின் நற்தன்மை மற்றும் தொடர்பு என்பவற்றினை மேம்படுத்துதல் மற்றும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லல் என்பவற்றிற்காக ஆற்றிய பணி பற்றிய இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனமானது பெரிதும் பெருமையடைகின்றது.

அரசாங்கமும் மற்றும் நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் அமைச்சு, எமது நிறுவனம் என்பன இணைந்து கடந்த சில ஆண்டு காலப் பகுதியினுள் அடைந்து கொண்ட சிறப்பான வெற்றிகள் தொடர்பான விடயங்களையும் அவதானத்திற் கொள்ளுமெனவும், உபாய முறைகள் முகாமைத்துவத் திட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு தொழில்நுட்பக் கல்வியின் மத்திய நிலையமாக மாறுவதற்கான நோக்கினை அடைந்து கொள்வதற்காக தலையீடு மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றினை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**பேராசிரியர் கே.ரீ.எம்.யூ. ஹேமபால**
பணிப்பாளர் நாயகம்
இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம்

# உள்ளடக்கம்


| | பக்க இலக்கம் |
|---|---|
| ஆரம்பம் மற்றும் பரிணாமம் | 06 |
| நிறுவனசார் தகவல்கள் - 2018 ஆம் ஆண்டு | 07 |
| முகாமைத்துவம் | 10 |
| பதவியணி பற்றிய தகவல்கள் | 11 |
| இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஒழுங்குக் கட்டமைப்பு | 13 |
| உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஒழுங்குக் கட்டமைப்பு | 14 |
| இலங்கை உயர் தொழில்நுட்பக் கற்கை நிறுவனத்தின் கிளைகள் வலையமைப்பு | 15 |
| கல்விப் பணிகள்/ திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | 16 |
| மாணவர் அனுமதி | 17 |
| மாணவர் சேர்ப்பு | 20 |
| பாடத்திட்ட அபிவிருத்தி | 21 |
| வெளிக்கள பயணங்கள் | 23 |
| டிப்ளோமா வழங்கல் விழா | 29 |
| கல்விக் குழுவின் தீர்மானங்கள் | 35 |
| திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | 43 |
| ஆராய்ச்சிக் கொடுப்பனவுகள் | 43 |
| பதவியணி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 48 |
| NVQ 6 மட்டத்தை அடைந்து கொள்ளல் | 50 |
| மஹபொல புலமைப் பரிசில் | 50 |
| நூலகப் பணிகளின் முன்னேற்றம் | 52 |
| பரீட்சைகள் பிரிவு | 53 |
| பரீட்சைகள் நிருவாகம் | 53 |
| பரீட்சை பெறுபேறுகளின் சுருக்கம் | 54 |
| முகாமைத்துவ தகவல் முறைமைப் பிரிவு | 57 |
| 2018 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள் | 58 |
| முகாமைத்துவ தகவல் முறைமைகள் பிரிவில் தற்போது இடம்பெற்று வருகின்ற செயற்பாடுகள் | 60 |
| நிருவாகப் பிரிவு | 61 |
| கல்விப் பதவியணி பற்றிய தகவல்கள் | 62 |
| கல்விசாரா பதவியணி பற்றிய தகவல்கள் | 65 |
| பெறுகைப் பணிகள் | 67 |
| பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 67 |
| பொறியியல் பிரிவு | 69 |
| சிவில் நிர்மாணப் பணிகள் | 69 |
| சட்டப் பிரிவு | 71 |
| நிருவாக சபையினால் மேற்கொள்ளப்பட்ட மிகவும் முக்கிய தீர்மானங்கள் | 71 |
| கணக்குப் பிரிவு | 73 |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 86 |
| 2018 ஆம் ஆண்டிலே உள்ளகக் கணக்காய்வுப் பொறுப்புக்கள் | 86 |
| 2018 வெளிக்கள கணக்காய்வுத் திட்டம் | 87 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் | 88 |
| *கணக்காய்வாளர் தலைமையதியின் அறிக்கை*யும் அதற்கான பதில்களும் | 105 |
| **சூழல் நிலைத்திருப்பதற்கான எதிர்கால திட்டம்** | 114 |

## சுருக்கம்

| | | |
|---|---|---|
| பி. ப. நா | - | பிரதி பணிப்பாளர் நாயகம் |
| உ. தொ. நி. | - | உயர் தொழில்நுட்ப நிறுவனம் |
| உ. தொ. நி. பி. | - | உயர் தொழில்நுட்ப நிறுவன பிரிவு |
| க. பொ . த. உ/ த | - | கல்வி பொது தராதர பத்திரம் (உயர் தரம்) |
| ரூ. | - | ரூபா |

# ஆரம்பம்

இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனமானது, 1995 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க உயர் தொழில்நுட்ப நிறுவன சட்டத்தின் ஊடாக நிறுவப்பட்ட இலங்கையின் உயர் கல்வி நிறுவனங்களில் முன்னணி வகிக்கின்ற ஒரு நிறுவனமாகும். நாட்டின் பல்லாயிரக் கணக்கான பிள்ளைகளின் உயர் கல்வி கனவை நனவாக்கிக் கொள்ளும் ஒரே நோக்கினை முதன்மைப்படுத்திக் கொண்ட இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது தற்போது நாடளாவிய ரீதியில் கிளை வலையமைப்பினைக் கொண்ட தலை சிறந்த நிறுவனமாகும்.

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் தலைவராக பணிப்பாளர் நாயகம் அவர்கள் பணியாற்றுவதுடன், உயர் தொழில்நுட்ப நிறுவனங்களின் பணிப்பாளர் மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவன பிரிவுகளின் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்ட குழுவொன்றினையும் நிறுவன முறைமை கொண்டுள்ளது.

# பரிணாமம்

அதன் போது இலங்கையின் அனைத்து மாகாணங்களும் உள்ளடக்கப்படும் வகையில் 11 உயர் தொழில்நுட்ப நிறுவனங்களையும் மற்றும் 8 உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரிவுகளையும் கொண்டுள்ள இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிகளின் ஊடாக அறிவார்ந்த மற்றும் திறன்மிக்க ஊழியப் படையணி ஒன்றினை சமூகமயப்படுத்தும் மகத்தான பணியில் ஈடுபட்டுள்ளது.

**<u>உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள்</u>**

* அம்பாறை
* பதுளை
* கொழும்பு
* தெஹிவலை
* கம்பஹா
* காலி
* யாழ்ப்பாணம்
* கண்டி
* கேகாலை
* குருநாகல்
* திருகோணமலை

**<u>உயர் தொழில்நுட்ப நிறுவன அலகுகள்</u>**

* அநுராதபுரம்
* மட்டக்களப்பு
* மன்னார்
* இரத்தினபுரி
* சம்மாந்துரை
* தங்காலை
* வவுனியா
* நாவலப்பிட்டிய

## நிறுவனசார் தகவல்கள் - 2018 ஆம் ஆண்டு

2018 ஆம் ஆண்டினுள் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது அமைச்சுக்கள் பலவற்றின் கீழ் இயங்கி வந்ததுடன், அந்த ஒவ்வொரு அமைச்சு பற்றிய தகவல்கள் சுருக்கமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல அவர்கள் - உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்

கௌரவ மொஹான் லால் கிரேரூ அவர்கள் - உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

திரு. டீ. சீ. திசாநாயக்க அவர்கள் - உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர்

---

கௌரவ கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ அவர்கள் - உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

கௌரவ மொஹான் லால் கிரேரூ அவர்கள் - உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

திரு. ஜே. ஜே. ரத்னசிறி அவர்கள் - உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர்

---

கௌரவ கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ அவர்கள் - கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர்

திரு. பத்மசிறி ஜயமான்ன அவர்கள் - கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர்

---

கௌரவ ரவூப் ஹக்கீம் அவர்கள் - நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்

திரு. எம். எம். பீ. கே. மாயாதுன்ன அவர்கள் - நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர்

**பணிப்பாளர் சபை - இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்**

கலாநிதி ஹிலரி ஈ சில்வா அவர்கள் - பணிப்பாளர் நாயகம்

திருமதி ஜே. எம். சீ. ஜயந்தி விஜேதுங்க - பணிப்பாளர் நாயகம் - பதில்

திரு. என். எம். கே. கே. நவரத்ன - பணிப்பாளர் நாயகம் - பதில்

திரு. என். எம். கே. கே. நவரத்ன - பிரதிப் பணிப்பாளர் நாயகம் - (நிருவாகம் மற்றும் நிதி)

கலாநிதி எஸ். ஜே. எம். சஹாயன் அவர்கள் - பிரதிப் பணிப்பாளர் நாயகம் - (கற்கை அலுவல்கள்/ திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி)

திருமதி ஜே. எச். குணரத்ன - பணிப்பாளர் (பரீட்சைகள்)

பேராசிரியர் (திருமதி) டப். பி. கே. பண்டார - பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி)

திரு. பி. எம். ரீ. சந்திக்க - பணிப்பாளர் (முகாமைத்துவ தகவல் முறைமை)

**அட்டவணை 1 : நிருவாக சபை 2018**

| | நிருவாக சபை உறுப்பினரின் பெயர் | நிறுவனம் |
|---|---|---|
| 1 | திரு. டீ. சீ. திசாநாயக்க | செயலாளர், உயர் கல்வி அமைச்சு, இலக்கம் 216, மகநெகும மஹ மெதுர, கொஸ்வத்த, பத்தரமுல்ல. |
| 2 | திரு. ஜே. ஜே. ரத்னசிறி | செயலாளர், உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, செத்சிறிபாய, பத்தரமுல்ல. |
| 3 | திரு. பத்மசிறி ஜயமான்ன | செயலாளர், உயர் கல்வி மற்றும் கல்வி அமைச்சு, இசுருபாய, பெலவத்த, பத்தரமுல்ல. |
| 4 | கலாநிதி டப். ஹிலரி ஈ. சில்வா | பணிப்பாளர் நாயகம், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம், " ஜனவத்து பியச" , இலக்கம் 320, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10. |
| 5 | திருமதி. ஜே. எம். சீ. ஜே. விஜேதுங்க | பணிப்பாளர் நாயகம் (பதில்), இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம், " ஜனவத்து பியச, இலக்கம் 320, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10. |
| 6 | திரு. என். எம். கே. கே. நவரத்ன | பணிப்பாளர் நாயகம் (பதில்), இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம், " ஜனவத்து பியச, இலக்கம் 320, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10. |
| 7 | திரு. எல். பி. எஸ். பி. தயாரத்ன | உதவிச் செயலாளர் (காணி), காணி அமைச்சு, மிரிகத்த மெதுர, காணி செயலகம், 1200/6, ரஜமல்வத்த மாவத்தை, பத்தரமுல்ல. |
| 8 | திரு. ஏ. எஸ். ஹேவகே | மேலதிகச் செயலாளர், (பாடசாலை அலுவல்கள்), கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல. |
| 9 | பேராசிரியர் கபில சீ. கே. பெரேரா | உப வேந்தர், மொரட்டுவ பல்கலைக்கழகம், கட்டுபெத்த, மொடரட்டுவ. |
| 10 | பேராசிரியர் எம். எஸ். ரூபசிங்க | முன்னாள் உப வேந்தர், சப்ரகமுவ பல்கலைக்கழகம், 96/11, விமல் வீதி, ஹோகந்தர. |
| 11 | திரு. எஸ். எச். ஹரிஸ்சந்திர | பணிப்பாளர் நாயகம், தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம், நிதி அமைச்சு, பொது திறைசேரி, கொழும்பு 01. |
| 12 | செல்வி அப்சரா கல்தேரா | பணிப்பாளர் (அபிவிருத்தி), விளையாட்டுத்துறை அமைச்சு, இலக்கம் 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07. |
| 13 | திரு. லசந்த விக்கிரமசிங்க | தலைவர், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், 30A, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07. |
| 14 | திருமதி சீதா சேனாரத்ன | மேலதிகச் செயலாளர், வர்த்தக மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு, காலி வீதி, கொழும்பு 02. |

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

| | | |
|---|---|---|
| திரு. எஸ். எச். ஹரிஸ்சந்திர | - | தலைவர் |
| திரு. லசந்த விக்கிரமசிங்க | - | உறுப்பினர் |
| திரு. யூ. எல். அத்துகோரல | - | கணக்காய்வு அத்தியட்சகர் |
| திரு. திலக் முனசிங்க | - | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் |

**கணக்காய்வு**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி அலுவலகம்
இலக்கம் 306/ 72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை.

**பதிவு முகவரி மற்றும் தலைமை அலுவலகம்**

இலக்கம் 320, "ஜனவத்து பியச"
ரீ. பி. ஜாயா மாவத்தை
கொழும்பு 10

**பிரதான வங்கியாளர்**
மக்கள் வங்கி

**நிதி நாட்காட்டி**
சனவரி 01 முதல் திசெம்பர் 31 வரை

தொலைபேசி இலக்கம் : **+94112691307/ +94112691319**

**இணையத்தளம் : [www.sliate.ac.lk](http://www.sliate.ac.lk)**

# முகாமைத்துவம்
## (இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், உயர் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் பிரிவு)

### பணிப்பாளர் நாயகம்

| | |
|---|---|
| கலாநிதி. திரு. டப். ஹிலரி ஈ சில்வா | **PhD** |
| திருமதி. ஜே. எம். சீ. ஜயந்தி விஜேதுங்க (பதில்) | **MPA** |
| திரு. என். எம். கே. கே. நவரத்ன (பதில்) | **MSc.** |

### பிரதி பணிப்பாளர் நாயகம் மார்

| | | |
|---|---|---|
| பி. ப. நா. (நிருவாகம் மற்றும் நிதி) | : திரு. என். எம். கே. கே. நவரத்ன | **MSc.** |
| பி. ப. நா. (கல்வி அ. / தி மற்றும் ஆராய்ச்சி) | : கலாநிதி. எஸ். ஜே. எம். சஹாயன் | **PhD** |
| பி. ப. நா. (கல்வி அ. /தி மற்றும் ஆ.) அ.பொ. | : கலா. திருமதி. டப். பி. கே. பண்டார | **PhD** |

### பணிப்பாளர்கள்

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் (பரீட்சைகள்) | : திருமதி. ஜே. எச். குணரத்ன | **MSc.** |
| பணிப்பாளர் (நிருவாகம்) | : திரு. என். எம். கே. கே. நவரத்ன | **MSc.** |
| பணிப்பாளர் (திட்டமிடல மற்றும் ஆராய்ச்சி | : கலா. திருமதி. டப். பி. கே. பண்டார | **PhD** |
| பணிப்பாளர் (II) | : திரு. பி. எம். ரி. சந்திக்க | **MSc.** |
| உள்ளகக் கணக்காய்வாளர் (பதில்) | : திரு. எச். பீ. எஸ். பிரியங்க | **B. Com** |
| கணக்காளர் | : திரு. டீ. டக்ளஸ் | **PGD** |
| கணக்காளர் | : திருமதி எல். கே. லங்காதிலக்க | **BSc.** |

### உயர் தொழில்நுட்ப நிறுவனம்

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் (II) உ. தொ. நி. - அம்பாறை | : திரு. வீ. எஸ். ரோஹித்த | **MSc.** |
| பணிப்பாளர் (II) உ. தொ. நி. - பதுளை | : திரு. பீ. கஜசிங்க | **MSc.** |
| பணிப்பாளர் (I) உ. தொ. நி. - தெஹிவலை | : திருமதி. என். என். பீ. டயஸ் | **MBA** |
| பணிப்பாளர் (I) உ. தொ. நி. - காலி | : பொறி. என். கே. ஏ. ரூபசிங்க | **MSc.** |
| பணிப்பாளர் (II) உ. தொ. நி. - யாழ்ப்பாணம் | : திரு. கே. கொஹிலன் | **MSc.** |
| பணிப்பாளர் (I) உ. தொ. நி. - கண்டி | : திருமதி. எம். பி. கே. ரத்நாயக்க | **M.Phil.** |
| பணிப்பாளர் (I) உ. தொ. நி. - குருநாகல் | : திரு. ஆர். கே. பீ. குமார | **MSc.** |
| பணிப்பாளர் (II) உ.தொ.நி. - கொழும்பு (பதில்) | : திரு. என். ஜே. பி. இல்லகொல்ல | **PGD.** |
| பணிப்பாளர் (II) உ. தொ. நி. - கம்பஹா | : திரு. ஏ. ஜீ. ஜயதிலக்க குமார | **MBA** |
| பணிப்பாளர் (II) உ.தொ.நி. - தி. மலை (பதில) | : திரு. ஜே. பிரதீபன் | **MSc.** |
| பணிப்பாளர் (I) உ. தொ. நி. - கேகாலை | : திரு. ஜீ. ஏ. கே. சிறிசுமன | **MSc.** |

### உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரிவு

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் உ. தொ. நி. பி - அநுராதபுரம் | : திருமதி. ஜீ. ஏ. எஸ். எம். கனேபொல | **MSc.** |
| பணிப்பாளர் உ. தொ. நி. பி - நாவலப்பிட்டி | : திருமதி. ரீ. எச். எஸ். எஸ். பண்டார | **MBA** |
| பணிப்பாளர் உ. தொ. நி. பி - இரத்தினபுரி | : திரு. எஸ். ரத்நாயக்க | **MSc.** |
| கல்வி ஒருங்கிணைப்பாளர் உ. தொ. நி. பி - மட்டக்களப்பு | : திரு. எஸ். ஜயபாலன் | **MSc.** |
| கல்வி ஒருங்கிணைப்பாளர் உ. தொ. நி. பி - தங்காலை | : திருமதி பீ.பீ.ஜீ.ரீ. புஷ்பிகா | **MBA.** |
| கல்வி ஒருங்கிணைப்பாளர் உ. தொ. நி. பி - சம்மாந்துரை | : திரு. எஸ். எல். முஸ்தாபா | **MBA.** |
| கல்வி ஒருங்கிணைப்பாளர் உ. தொ. நி. பி - வவுனியா | : திரு. பீ. இலங்ககுமாரன் | **M.Phil.** |
| கல்வி ஒருங்கிணைப்பாளர் உ. தொ. நி. பி - மன்னார் | : திரு. ஆர். ஜே. எம். குரூஸ் | **MSc.** |

## பதவியணி பற்றிய தகவல்கள் - 2018 திசெம்பர் 31 திகதியன்று

அட்டவணை 2 : பதவியணி பற்றிய தகவல்கள்

| | பதவிப் பெயர் | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 30 இன் பிரகாரம் வகைப்படுத்தல் | அனுமதிக்கப்பட்ட பதவிகள் | தற்போதுள்ள | நிலவும் வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|
| | **முகாமைத்துவ பதவியணி** | | | | |
| 1 | பணிப்பாளர் நாயகம் | HM | 1 | 0 | 1 |
| 2 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | HM | 2 | 1 | 1 |
| 3 | பணிப்பாளர் I | HM | 12 | 7 | 5 |
| 4 | பணிப்பாளர் II | HM | 8 | 8 | 0 |
| | முகாமைத்துவ பதவியணியின் மொத்தம் | | **23** | **16** | **7** |
| | **கல்வி பதவியணி** | | | | |
| 5 | சிரேஷ்ட விரிவுரையாளர் | AR | 267 | 64 | 0 |
| | விரிவுரையாளர் | | 0 | 18 | 0 |
| | உதவி விரிவுரையாளர் | | 0 | 169 | 16 |
| 6 | ஆங்கில ஆலோசகர் | MA | 4 | 0 | 4 |
| | கல்வி பதவியணியின் மொத்தம் | | 271 | 251 | 20 |
| 7 | அருங்கலை செய்முறையாளர் | MA | 97 | 67 | 30 |
| | கல்வி துணை பதவியணியின் மொத்தம் | | **97** | **67** | **30** |
| | **கல்விசாரா பதவியணி** | | | | |
| 8 | பொறியியலாளர் (சிவில்) | MM | 1 | 1 | 0 |
| 9 | தகவல் தொழில்நுட்பமுகாமையாளர் | MM | 1 | 0 | 1 |
| 10 | பதிவாளர் | MM | 7 | 6 | 1 |
| 11 | உதவிப் பதிவாளர் | JM | 14 | 11 | 3 |
| 12 | நிருவாக உதவியாளர் | MA | 4 | 4 | 0 |
| 13 | கணக்காளர் | MM | 17 | 15 | 2 |
| 14 | நிதி உதவியாளர் * | MA | 1 | 0 | 1 |
| 15 | உள்ளக கணக்காய்வாளர் | MM | 1 | 0 | 1 |
| 16 | பண்ணை முகாமையாளர் | MA | 3 | 2 | 1 |
| 17 | சட்ட அலுவலர் / நிருவாக சபையின் செயலாளர் | MM | 1 | 0 | 1 |
| 18 | முகாமைத்துவ உதவியாளர் | MA | 138 | 124 | 14 |
| 19 | தொழில்நுட்ப அலுவலர் | MA | 1 | 1 | 0 |

| | பதவிப் பெயர் | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 30 இன் பிரகாரம் வகைப்படுத்தல் | அனுமதிக்க ப்பட்ட பதவிகள் | தற்போது ள்ள | நிலவும் வெற்றிட ங்கள் |
|---|---|---|---|---|---|
| 20 | களஞ்சியவாலை பொறுப்பாளர் | MA | 12 | 10 | 2 |
| 21 | விடுதி பொறுப்பாளர் (பெண்)/ விடுதி பொறுப்பாளர் (ஆண்) | MA | 10 | 4 | 6 |
| 22 | விடுதி பொறுப்பாளர் * | PL | 1 | 1 | 0 |
| 23 | தொழில்நுட்பவியலாளர் | PL | 17 | 8 | 9 |
| 24 | நூலகர் | JM | 14 | 10 | 4 |
| 25 | நூலக உதவியாளர் | MA | 10 | 10 | 0 |
| 26 | நூலக துணையாளர் * | PL [11] | 10 | 10 | 0 |
| 27 | கணனிகூட உதவியாளர் * | MA | 2 | 1 | 1 |
| 28 | கணனிகூட துணையாளர் * | PL | 1 | 0 | 1 |
| 29 | செயலமர்வு துணையாளர் * | PL | 6 | 5 | 1 |
| 30 | ரோனியோ அச்சீட்டு இயந்திர இயக்குநர் | PL | 2 | 2 | 0 |
| 31 | அலுவலக உதவியாளர் / தூதுவன் | PL | 3 | 2 | 1 |
| 32 | சமயற்காரர் | PL | 1 | 0 | 1 |
| 33 | சாரதி | PL | 18 | 16 | 2 |
| 34 | காவற்காரர்* | PL [7] | 7 | 0 | 7 |
| 35 | ஆய்வுகூட உதவியாளர் * | MA | 4 | 2 | 2 |
| 36 | ஆய்வுகூட துணையாளர் * | PL | 4 | 2 | 2 |
| 37 | தச்சன்/நீர் குழாய் தொழில்நுட்பவியலாளர் | PL | 3 | 3 | 0 |
| 38 | தொழிலாளர் | PL | 49 | 37 | 12 |
| 39 | சுகநல தொழிலாளர்* | PL [6] | 4 | 3 | 1 |
| | **கல்விசாரா துணை பதவியணி** | | **367** | **290** | **77** |
| | **முழு மொத்தம்** | | **758** | **624** | **134** |

## இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் ஒழுங்குக் கட்டமைப்பு



## உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஒழுங்குக் கட்டமைப்பு



## இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் கிளைகள் வலையமைப்பு



## கல்விப் பணிகள் / திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

### அறிமுகம்

இப்பிரிவின் செயற்பணியாக அமைவது, புதிய உயர் கல்வி கலாசாரம் ஒன்றினுள் மாணவர் மற்றும் தாபனச் செயற்பாடுகளை விருத்தி செய்கின்ற தொடர்புப் பின்னணி ஒன்றினை உருவாக்குவதாகும். அவ்வாறே, இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட நானாவித பாடநெறிகள் மற்றும் இலக்காகக் கொள்ளப்பட்ட துறைகள் என்பவற்றின் ஊடாக மாணவர்களினதும் நிறுவனத்தினதும் தனிப்பட்ட மற்றும் தொழில்சார் முன்னேற்றத்தின் பொருட்டு ஒத்துழைப்பு வழங்குதலும் உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் நிறுவனப் பிரிவுகளின் பதவியணியுடன் ஒத்துழைத்து கல்வி, மாணவர் அலுவல்கள் என்பவற்றினை முன்னெடுத்துச் செல்லல் மற்றும் அதன் வெற்றித் தன்மையினை உறுதிப்படுத்தல் என்பன இப்பிரிவின் பணிகளில் அடங்கும்.

**அட்டவணை 3 : உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளில் செயற்படுத்தப்படுகின்ற பாடநெறிகள்**

| ***தொழில்நுட்ப பாடநெறிகள்*** | | |
|---|---|---|
| **தொடர் இல.** | **பாடநெறியின் பெயர்** | **பாடநெறியின் காலம் (ஆண்டு)** |
| 1 | உயர் தேசிய கட்டிட சேவைகள் பொறியியலாளர் டிப்ளோமா | வருடங்கள் 3 $^{1}/_{2}$ |
| 2 | உயர் தேசிய பொறியியலாளர் (சிவில்) டிப்ளோமா | வருடங்கள் 3 $^{1}/_{2}$ |
| 3 | உயர் தேசிய பொறியியலாளர் (மின் மற்றும் இலத்திரனியல்) டிப்ளோமா | வருடங்கள் 3 $^{1}/_{2}$ |
| 4 | உயர் தேசிய பொறியியலாளர் (இயந்திரவியல்) டிப்ளோமா | வருடங்கள் 3 $^{1}/_{2}$ |
| 5 | உயர் தேசிய பொறியியலாளர் (உணவு தொழில்நுடபம்) டிப்ளோமா | வருடங்கள் 2 $^{1}/_{2}$ |
| 6 | உயர் தேசிய பொறியியலாளர் (தகவல் தொழில்நுடபம்) டிப்ளோமா | வருடங்கள் 2 $^{1}/_{2}$ |
| 7 | உயர் தேசிய பொறியியலாளர் (அளவீட்டியல்) டிப்ளோமா | வருடங்கள் 2 $^{1}/_{2}$ |
| 8 | உயர் தேசிய பொறியியலாளர் (விவசாயம்) டிப்ளோமா | வருடங்கள் 3 |

| ***தொழில்நுட்பம் சாராத பாடநெறிகள்*** | | |
|---|---|---|
| **தொடர் இல.** | **பாடநெறியின் பெயர்** | **பாடநெறியின் காலம் (ஆண்டு)** |
| 9 | உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா | வருடங்கள் 4 |
| 10 | உயர் தேசிய தொழில்முயற்சி நிருவாக டிப்ளோமா | வருடங்கள் 2 $^{1}/_{2}$ |
| 11 | உயர் தேசிய தொழில்முயற்சி நிதிசார் டிப்ளோமா | வருடங்கள் 2 $^{1}/_{2}$ |
| 12 | உயர் தேசிய நுகர்வியல் மற்றும் உற்பத்தி தொழில்நுட்ப டிப்ளோமா | வருடங்கள் 3 |
| 13 | உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா | வருடங்கள் 2 $^{1}/_{2}$ |
| 14 | உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா | வருடங்கள் 3 |
| 15 | உயர் தேசிய கருத்திட்ட முகாமைத்துவ டிப்ளோமா | வருடங்கள் 2 $^{1}/_{2}$ |
| 16 | உயர் தேசிய சுற்றுலா மற்றும் நலனோம்புகை டிப்ளோமா | வருடங்கள் 3 |

## அட்டவணை 4 : மாணவர்களை அனுமதித்தல் - 2018

| பாடநெறி | | அம்பாறை | அநுராதபுரம் | பதுளை | மட்டக்களப்பு | கொழும்பு | தெஹிவளை | காலி | கம்பஹா | யாழ்ப்பாணம் | கண்டி | கேகாலை | குருநாகல் | மன்னார் | நாவலப்பிட்டி | இரத்தினபுரி | சம்மாந்துறை | தங்காலை | திருகோணமலை | வவுனியா | முழு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உயர் தேசிய தொழில்நுட்ப கணக்கியல் டிப்ளோமா (முழு நேர) | 1 வருடம் | 122 | 80 | 99 | 104 | 0 | 119 | 137 | 128 | 117 | 123 | 90 | 119 | 0 | 0 | 84 | 50 | 86 | 75 | 75 | 1608 |
| | 2 வருடம் | 120 | 130 | 99 | 220 | 0 | 140 | 115 | 86 | 180 | 92 | 108 | 127 | 0 | 0 | 108 | 70 | 81 | 126 | 53 | 1855 |
| | 3 வருடம் | 64 | 42 | 53 | 111 | 0 | 150 | 115 | 86 | 108 | 76 | 45 | 105 | 0 | 0 | 46 | 21 | 57 | 45 | 31 | 1155 |
| | 4 வருடம் | 49 | 27 | 35 | 97 | 0 | 140 | 125 | 64 | 37 | 66 | 36 | 52 | 0 | 0 | 35 | 17 | 27 | 36 | 25 | 868 |
| உயர் தேசிய தொழில்நுட்ப கணக்கியல் டிப்ளோமா (பகுதி நேர) | 1 வருடம் | 0 | 81 | 108 | 100 | 0 | 106 | 87 | 97 | 140 | 135 | 68 | 120 | 0 | 0 | 67 | 111 | 0 | 94 | 72 | 1386 |
| | 2 வருடம் | 85 | 41 | 60 | 129 | 0 | 145 | 87 | 81 | 103 | 96 | 79 | 123 | 0 | 0 | 86 | 51 | 0 | 115 | 51 | 1332 |
| | 3 வருடம் | 0 | 16 | 25 | 74 | 0 | 98 | 69 | 56 | 74 | 71 | 0 | 89 | 0 | 0 | 42 | 18 | 0 | 86 | 0 | 718 |
| | 4 வருடம் | 0 | 15 | 22 | 57 | 0 | 74 | 0 | 15 | 35 | 26 | 0 | 59 | 0 | 0 | 0 | 7 | 0 | 49 | 0 | 359 |
| உயர் தேசிய தொழில் முயற்சி நிருவாக டிப்ளோமா | 1 வருடம் | 0 | 0 | 0 | 0 | 0 | 109 | 64 | 0 | 0 | 77 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 250 |
| | 2 வருடம் | 0 | 0 | 0 | 0 | 0 | 90 | 62 | 0 | 0 | 57 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 209 |
| | 3 வருடம் | 0 | 0 | 0 | 0 | 0 | 62 | 56 | 0 | 0 | 31 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 149 |
| உயர் தேசிய தொழில்முயற்சி நிதிசார் டிப்ளோமா | 1 வருடம் | 0 | 0 | 0 | 0 | 0 | 115 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 115 |
| | 2 வருடம் | 0 | 0 | 0 | 0 | 0 | 97 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 97 |
| | 3 வருடம் | 0 | 0 | 0 | 0 | 0 | 64 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 64 |
| உயர் தேசிய கட்டிட சேவைகள் பொறியியல் டிப்ளோமா | 1 வருடம் | 0 | 0 | 0 | 0 | 36 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 36 |
| | 2 வருடம் | 0 | 0 | 0 | 0 | 54 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 54 |
| | 3 வருடம் | 0 | 0 | 0 | 0 | 50 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 50 |
| | 4 வருடம் | 0 | 0 | 0 | 0 | 40 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 40 |

| பாடநெறி | | அம்பாறை | அநுராதபுரம் | பதுளை | மட்டக்களப்பு | கொழும்பு | தெஹிவளை | காலி | கம்பஹா | யாழ்ப்பாணம் | கண்டி | கேகாலை | குருநாகல் | மன்னார் | நாவலப்பிட்டி | இரத்தினபுரி | சம்மாந்துறை | தங்காலை | திருகோணமலை | வவுனியா | முழு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உயர் தேசிய நுகர்வியல் மற்றும் உற்பத்தி தொழில்நுட்ப டிப்ளோமா | 1 வருடம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 106 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 106 |
| | 2 வருடம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 48 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 48 |
| | 3 வருடம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| உயர் தேசிய பொறியியல் (சிவில்) டிப்ளோமா | 1 வருடம் | 0 | 0 | 0 | 0 | 94 | 0 | 103 | 0 | 79 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 276 |
| | 2 வருடம் | 0 | 0 | 0 | 0 | 101 | 0 | 99 | 0 | 87 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 287 |
| | 3 வருடம் | 0 | 0 | 0 | 0 | 109 | 0 | 84 | 0 | 52 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 245 |
| | 4 வருடம் | 0 | 0 | 0 | 0 | 104 | 0 | 99 | 0 | 64 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 267 |
| உயர் தேசிய பொறியியல் (இயந்திரவியல்) டிப்ளோமா | 1 வருடம் | 0 | 0 | 0 | 0 | 85 | 0 | 97 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 182 |
| | 2 வருடம் | 0 | 0 | 0 | 0 | 99 | 0 | 105 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 204 |
| | 3 வருடம் | 0 | 0 | 0 | 0 | 68 | 0 | 78 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 146 |
| | 4 வருடம் | 0 | 0 | 0 | 0 | 75 | 0 | 92 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 167 |
| உயர் தேசிய பொறியியல் (மின் மற்றும் இலத்திரனியல்) டிப்ளோமா | 1 வருடம் | 0 | 0 | 0 | 0 | 104 | 0 | 94 | 0 | 80 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 278 |
| | 2 வருடம் | 0 | 0 | 0 | 0 | 104 | 0 | 70 | 0 | 73 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 247 |
| | 3 வருடம் | 0 | 0 | 0 | 0 | 105 | 0 | 65 | 0 | 39 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 209 |
| | 4 வருடம் | 0 | 0 | 0 | 0 | 111 | 0 | 90 | 0 | 44 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 245 |
| உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (முழு நேர) | 1 வருடம் | 119 | 90 | 133 | 114 | 0 | 102 | 83 | 0 | 80 | 114 | 101 | 100 | 39 | 109 | 78 | 77 | 70 | 86 | 70 | 1565 |
| | 2 வருடம் | 130 | 191 | 117 | 126 | 0 | 95 | 57 | 0 | 74 | 90 | 116 | 209 | 35 | 89 | 145 | 94 | 75 | 128 | 37 | 1808 |
| | 3 வருடம் | 79 | 56 | 0 | 50 | 0 | 72 | 40 | 0 | 33 | 142 | 55 | 144 | 0 | 0 | 49 | 21 | 0 | 61 | 0 | 802 |
| உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (பகுதி நேர) | 1 வருடம் | 104 | 71 | 140 | 121 | 0 | 110 | 0 | 0 | 88 | 107 | 100 | 100 | 0 | 91 | 92 | 78 | 0 | 84 | 52 | 1338 |
| | 2 வருடம் | 120 | 86 | 99 | 153 | 0 | 116 | 0 | 0 | 81 | 63 | 140 | 147 | 0 | 73 | 119 | 92 | 0 | 74 | 32 | 1395 |
| | 3 வருடம் | 0 | 20 | 0 | 56 | 0 | 60 | 0 | 0 | 35 | 90 | 0 | 89 | 0 | 0 | 49 | 61 | 0 | 46 | 0 | 506 |

| பாடநெறி | | அம்பாறை | அநுராதபுரம் | பதுளை | மட்டக்களப்பு | கொழும்பு | தெஹிவலை | காலி | கம்பஹா | யாழ்ப்பாணம் | கண்டி | கேகாலை | குருநாகல் | மன்னார் | நாவலப்பிட்டி | இரத்தினபுரி | சம்மாந்துறை | தங்காலை | திருகோணமலை | வவுனியா | முழு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உயர் தேசிய உணவு தொழில்நுட்ப டிப்ளோமா | 1 வருடம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 98 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 98 |
| | 2 வருடம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 133 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 133 |
| | 3 வருடம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 129 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 129 |
| உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா (முழு நேர) | 1 வருடம் | 122 | 91 | 60 | 80 | 0 | 109 | 135 | 101 | 91 | 63 | 94 | 100 | 56 | 0 | 78 | 57 | 83 | 94 | 60 | 1474 |
| | 2 வருடம் | 100 | 65 | 61 | 116 | 0 | 103 | 98 | 121 | 66 | 46 | 120 | 137 | 0 | 0 | 83 | 43 | 81 | 82 | 72 | 1394 |
| | 3 வருடம் | 65 | 26 | 0 | 73 | 0 | 79 | 81 | 63 | 58 | 42 | 37 | 87 | 0 | 0 | 42 | 16 | 0 | 31 | 0 | 700 |
| உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா (பகுதி நேர) | 1 வருடம் | 0 | 61 | 69 | 78 | 0 | 0 | 0 | 80 | 67 | 0 | 0 | 87 | 0 | 0 | 0 | 0 | 0 | 54 | 0 | 496 |
| | 2 வருடம் | 0 | 32 | 40 | 105 | 0 | 0 | 56 | 57 | 38 | 0 | 0 | 55 | 0 | 0 | 77 | 0 | 0 | 48 | 0 | 508 |
| | 3 வருடம் | 0 | 0 | 0 | 37 | 0 | 0 | 0 | 0 | 32 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 15 | 0 | 84 |
| உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா | 1 வருடம் | 92 | 0 | 102 | 0 | 0 | 106 | 118 | 0 | 77 | 122 | 0 | 120 | 0 | 67 | 0 | 0 | 0 | 0 | 0 | 804 |
| | 2 வருடம் | 87 | 0 | 78 | 0 | 0 | 130 | 89 | 0 | 63 | 127 | 0 | 139 | 0 | 83 | 0 | 0 | 0 | 0 | 0 | 796 |
| | 3 வருடம் | 50 | 0 | 37 | 0 | 0 | 132 | 84 | 0 | 26 | 73 | 0 | 58 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 460 |
| உயர் தேசிய கருத்திட்ட முகாமைத்துவ டிப்ளோமா | 1 வருடம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 69 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 69 |
| | 2 வருடம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| உயர் தேசிய அளவையியல் டிப்ளோமா | 1 வருடம் | 0 | 0 | 0 | 0 | 43 | 0 | 72 | 0 | 72 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 187 |
| | 2 வருடம் | 0 | 0 | 0 | 0 | 45 | 0 | 91 | 0 | 56 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 192 |
| | 3 வருடம் | 0 | 0 | 0 | 0 | 57 | 0 | 60 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 117 |
| உயர் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (விவசாயம்) | 1 வருடம் | 116 | 0 | 0 | 0 | 0 | 0 | 109 | 108 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 333 |
| | 2 வருடம் | 169 | 0 | 0 | 0 | 0 | 0 | 108 | 168 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 445 |
| | 3 வருடம் | 78 | 0 | 0 | 0 | 0 | 0 | 48 | 65 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 191 |
| உயர் தேசிய சுற்றுலா மற்றும் நலனோம்பல் முகாமைத்துவ டிப்ளோமா | 1 வருடம் | 49 | 52 | 60 | 74 | 0 | 105 | 102 | 0 | 38 | 115 | 0 | 85 | 14 | 49 | 0 | 0 | 0 | 55 | 0 | 798 |
| | 2 வருடம் | 83 | 30 | 38 | 80 | 0 | 92 | 63 | 0 | 28 | 92 | 0 | 63 | 0 | 30 | 0 | 0 | 0 | 38 | 0 | 637 |
| | 3 வருடம் | 31 | 0 | 0 | 0 | 0 | 72 | 66 | 0 | 16 | 26 | 0 | 0 | 0 | 12 | 0 | 0 | 0 | 0 | 0 | 223 |
| முழு மொத்தம் | | **2034** | **1303** | **1535** | **2155** | **1484** | **2992** | **3553** | **1890** | **2431** | **2162** | **1258** | **2514** | **144** | **603** | **1280** | **884** | **560** | **1522** | **630** | **30934** |

## மாணவர் சேர்ப்பு மற்றும் பதிவு வெய்துகொள்வதன் முன்னேற்றம்

**மாணவர் சேர்ப்பு - 2017 மற்றும் 2018 புதிய கல்வி ஆண்டிற்கான**
ஆட்சேர்ப்புக்களின் போது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டிலே குறிப்பிடத்தக்க குறைவொன்றைக் காணக் கூடியதாக இருந்தது.

முன்னைய ஆண்டுகளில் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திற்கு மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்கையில் 2 வருடங்களுக்கு முன்னர் க.பொ.த. உ/த பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் உட்பட அதற்கு முன்னைய ஆண்டுகளில் க.பொ.த. உ/த பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கு தகுதியானவர்களாக கருதப்பட்டனர்.

எனினும் பணிப்பாளர் நாயகத்தின் எண்ணக்கரு ஒன்றின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டு முதல் அமுலுக்குவரும் வகையில் 2017 ஆம் ஆண்டிலெ 2016 மற்றும் அதற்கு முன்னைய ஆடிண்டுகளில் க.பொ.த. உ/த பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதனால் 2017 ஆம் ஆண்டிலே 2 குழுக்கள் பாடநெறிகளுக்கு தேர்ந்தெடுத்த போதிலும் 2018 அம் ஆண்டிலே ஒரு குழுவைச் சேர்ந்த மாணவர்கள் மாத்திரமே அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு மேற்கொண்டமைக்கான காரணம் உயர் கல்விக்காக மாணவர்கள் தங்கியிருக்க வேண்டிய கால இடைவெளியை குறைத்து அதற்குப் பொருத்தமான தீர்வொன்றினை வழங்குவதாகும்.

**அட்டவணை 5 : 2018 இல் மாணவர் சேர்ப்பு**

| பாடநெறி | 2017 | 2018 |
|---|---|---|
| உயர் தேசிய கணக்கயல் டிப்ளோமா (பகுதி நேர) | 1,567 | 1,360 |
| உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (முழு நேர) | 2,097 | 1,611 |
| உயர் தேசிய தொழில்முயற்சி நிருவாக டிப்ளோமா | 244 | 258 |
| உயர் தேசிய தொழில்முயற்சி நிதிசார் டிப்ளோமா | 103 | 115 |
| உயர் தேசிய கட்டிட சேவைகள் பொறியியல் டிப்ளோமா | 41 | 40 |
| உயர் தேசிய நுகர்வியல் மற்றும் உற்பத்தித் தொழில்நுட்ப டிப்ளோமா | 50 | 106 |
| உயர் தேசிய பொறியயல் டிப்ளோமா | 797 | 777 |
| உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (பகுதி நேர) | 1,589 | 1,326 |
| உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (முழு நேர) | 2,168 | 1,581 |
| உயர் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா | 106 | 98 |
| உயர் தேசிய தகவல் தொழிலுநுட்ப டிப்ளோமா (பகுதி நேர) | 502 | 492 |
| உயர் தேசிய தகவல் தொழிலுநுட்ப டிப்ளோமா (முழு நேர) | 1,719 | 1,490 |
| உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா | 994 | 808 |
| உயர் தேசிய கருத்திட்ட முகாமைத்துவ டிப்ளோமா | - | 80 |
| உயர் தேசிய அளவீட்டியல் டிப்ளோமா | 206 | 201 |
| உயர் தேசிய தொழிலுநுட்ப (விவசாய) டிப்ளோமா | 435 | 342 |
| உயர் தேசிய சுற்றுலா மற்றும் நலனோம்பல் முகாமைத்துவ டிப்ளோமா | 818 | 789 |
| மொத்தம் | 13,436 | 11,474 |

## பாடத்திட்ட அபிவிருத்தி

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கற்கை பாடநெறிகள் சிலவற்றின் பாடத்திட்ட அபிவிருத்திக்கும் மற்றும் கல்விசார் பதவியணியினரின் இயலுமையை விருத்தி செய்வதற்கும் 2018 ஆம் ஆண்டிலே நடாத்தப்பட்ட செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

**அட்டவணை 6 : 2018 இல் கல்வி பதவியணிக்காக நடாத்தப்பட்ட செயலமர்வுகள்**

| | பாடத் துறை | திகதி மற்றும் இடம் | இலக்காகக் கொள்ளப்பட்டுள்ள குழுக்கள் |
|---|---|---|---|
| 1 | பிரிவுத் தலைவர் மற்றும் பாடத்திட்ட திருத்தம் பற்றிய கூட்டம் - உ. தே. பொறியியல் டி. | 04/01/2018 தலைமை அலுவலகம் | பொறியியல் பாடநெறி பிரிவுத் தலைவர்கள் |
| 2 | பாடத்திட்ட திருத்தம் - உ. தே. பொறியியல் டி. - தொழில்நுட்ப பாடத்திட்டங்களுக்கான ஆங்கிலம் | 22/01/2018 தலைமை அலுவலகம் | தெரிவு செய்யப்பட்ட பொறியியல் விரிவுரையாளர்கள் மற்றும் ஆங்கில விரிவுரையாளர்கள் |
| 3 | உ. தே. ஆங்கில டி. மற்றும் பிரிவுத் தலைவர் கூடட்டம் | 06/02/2018 தலைமை அலுவலகம் | ஆங்கில பாடநெறி பிரிவுத் தலைவர்கள் |
| 4 | பிரிவுத் தலைவர் மற்றும் பாடத்திட்ட திருத்தம் பற்றிய கூட்டம் - உ. தே. தொழில்முயற்சி நி. டி. / உ. தே. தொ. மு. நிதிசார் டி. / உ. தே. மு. டி. | 07/03/2018 தலைமை அலுவலகம் | தொழில் முயற்சி நிருவாகம் / தொழில் முயற்சி நிதி / முகாமைத்துவ பாடநெறிகளின் பிரிவுத் தலைவர்கள் |
| 5 | உ. தே. ஆங்கில டி. பாடத்திட்ட திருத்தம் - பிராந்திய கூட்டம் | 28/03/2018 அம்பாறை உ. தொ. நிறுவனம், தெஹிவளை உ. தொ. நிறுவனம், கண்டி உ. தொ. நிறுவனம், வவுனியா உ. தொ. நிறுவனப் பிரிவு | அனைத்து பாடங்களையும் சேர்ந்த விரிவுரையாளர்கள் |
| 6 | பாடத்திட்ட திருத்தக் கூட்டம் - உ. தே. தொ. மு. நி. டி. / உ. தே. தொ. மு. நிதிசார். டி. | 03/04/2018 தலைமை அலுவலகம் | தொழில் முயற்சி நிருவாக / தொழில் முயற்சி நிதிசார் பாடநெறிகளின் பிரிவுத் தலைவர்கள் |
| 7 | உ. தே. தொ. மு. மு. டி. பாடநெறி அபிவிருத்திக் கூட்டம் | 26/04/2018 தலைமை அலுவலகம் | தெரிவு செய்யப்பட்ட பாடங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் வளவாளர்கள் |
| 8 | பாடத்திட்ட திருத்தக் கூட்டம் - உ. தே. தொ. மு. நி. டி. / உ. தே. தொ. மு. நிதிசார். டி. | 11/05/2018 தலைமை அலுவலகம் | தொழில் முயற்சி நிருவாக / தொழில் முயற்சி நிதிசார் பாடநெறிகளின் பிரிவுத் தலைவர்கள் |
| 9 | உ. தே. தொ. மு. நி. டி. பாடநெறி அபிவிருத்திக் கூட்டம் | 16/05/2018 தலைமை அலுவலகம் | தெரிவு செய்யப்பட்ட பாடங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் வளவாளர்கள் |
| 10 | பகுதித் தலைவர்கள் மற்றும் பாடத்திட்ட திருத்தக் கூட்டம் - உ. தே. தொ. உணவு தொ. டி. மற்றும் உ. தே. தொ. டி. | 25/05/2018 தலைமை அலுவலகம் | பிரிவுத் தலைவர்கள் |
| 11 | உ. தே. தொ. டி. (விவசாயம்) பிரிவுத் தலைவர் கூட்டம் | 01/06/2018 தலைமை அலுவலகம் | விவசாயப் பாடநெறி பிரிவுத் தலைவர்கள் |

| | | | |
|---|---|---|---|
| 12 | பிரிவுத் தலைவர் மற்றும் பாடத்திட்ட திருத்தக் கூட்டம் - உ. தே. மு. டி. | 05/06/2018 தலைமை அலுவலகம் | முகாமைத்துவ பாடநெறி பிரிவுத் தலைவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் |

| பாடத் துறை | | திகதி மற்றும் இடம் | இலக்காகக் கொள்ளப்பட்டுள்ள குழுக்கள் |
|---|---|---|---|
| 13 | நிகழ்ச்சித்திட்ட ஆலோசகர் குழுக் கூட்டம் - தகவல் தொழில்நுட்பம் | 13/06/2018 களனிப் பல்கலைக்கழகம் | நிகழ்ச்சித்திட் ஆலோசகர் குழுவின் உறுப்பினர்கள் |
| 14 | உ. தே. தொ. மு. மு. டி. பாடத்திட்ட திருத்தக் கூட்டம் | 04/09/2018 தலைமை அலுவலகம் | தெரிவு செய்யப்பட்ட பாடங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் மற்றும் வளவாளர்கள் |
| 15 | உ. தே. தொ. மு. நி. டி. / உ. தே. தொ. மு. நிதிசார் டி. பாடத்திட்ட திருத்தக் கூட்டம் | 04/09/2018 தலைமை அலுவலகம் | தெரிவு செய்யப்பட்ட பாடங்களின் விரிவுரையாளர்கள் |
| 16 | தொழில் முயற்சி தொடர்பாடல் பாடத்திட்ட திருத்தக் கூட்டம் | 08/10/2018 தலைமை அலுவலகம் | தெரிவு செய்யப்பட்ட ஆங்கில பிரிவுத் தலைவர்கள் மற்றும் விரிவுரையாளர் |

**அட்டவணை 7 : 2018 இல் பாடத்திட்ட அபிவிருத்தி தொடர்பாக நடாத்தப்பட்ட செயலமர்வுகள்**

| 2018 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட செயலமர்வுகள் | | | |
|---|---|---|---|
| 1 | உ. தே. ஆங்கில டி. பாடத் திட்ட திருத்த செயலமர்வு | 22 மற்றும் 23/06/2018 தெஹிவளை உ. தொ. நிறுவனம் | சகல ஆங்கில விரிவுரையாளர்களும் |
| 2 | உ. தே. பொறியியல் டி. பாடத் திட்ட திருத்த செயலமர்வு | 25 மற்றும் 26/06/2018 கொழும்பு உ. தொ. நிறுவனம் | சகல பொறியியல் விரிவுரையாளர்களும் |
| 3 | உ. தே. மு. டி. / உ. தே. தொ. மு. டி. / உ. தே. தொ. மு. நிதிசார். டி. பாடத்திட்ட திருத்த செயலமர்வு | 18 மற்றும் 19/07/2018 தெஹிவளை உ. தொ. நிறுவனம் | சகல முகாமைத்துவ, தொழில் முயற்சி நிருவாக மற்றும் தொழில்முயற்சி நிதிசார் பாடநெறிகளின் விரிவுரையாளர்கள் |



# பாடத்திட்ட அபிவிருத்தி செயலமர்வுகள





**வெளிக்கள பயணம்**

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளை பயிலுகின்ற மாணவர்களின் வகுப்பறைகளிலும் மற்றும் செயல்முறை அறிவுக்கு அப்பாலும் அத்துறையினுள் அச்செயற்பாடுகள் செயல்முறை ரீதியாக இடம்பெறுகின்ற விதம் பற்றிய அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் வெளிக்கள பயணங்களை மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்காக ஒவ்வொரு பாடநெறியினதும் ஒவ்வொரு பாடத்துடன் தொடர்புடையதாக 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் ஒழுங்கு செய்யப்பட்ட வெளிக்கள பயணங்கள் பற்றிய தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

அட்டவணை 8 : மாணவர்களுக்கான வெளிக்கள பயணங்கள்

| இலக்கம் | நிறுவனம் | வெளிக்கள பயணங்கள் | திகதி | யாருக்காக | நோக்கம் | ரூ. செலவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | அம்பாறை | தென்கிழக்கு பல்கலைக்கழகம் - ஒலுவில் | 6/1/2018 | உ. தே. தொ. டி. (விவசாயம்) | வீட்டுத் தோட்ட அலங்காரம், பராமரிப்பு மற்றும் நில முகாமைத்துவம் உள்ளிட்ட செயல்முறை துறைகளை உள்ளடக்கியிருத்தல் | 2,000.00 |
| 2 | அம்பாறை | பிபிலை பண்ணை பயிற்சி நிலையம் | 9/1/2018 | உ. தே. தொ. டி. (விவசாயம்) | தாவர விருத்தி கலை முறைமைகள், விதைகளை தரப்படுத்தல், நாட்டுமேடை முகாமைத்துவ நுட்ப முறைகள் உள்ளிட்ட செயல்முறை துறைகளை உள்ளடக்குதல் | 32,000.00 |
| 3 | அம்பாறை | தேசிய நீரியல் வாழ் உயிரினங்கள் பயிர் செய்தகை அபிவிருத்தி அதிகாரசபை - அம்பாறை | 1/2/2018 | உ. தே. தொ. டி. (விவசாயம்) | செயல்முறை ஆகக் குறினை உள்ளடக்குதல் | 2,000.00 |
| 4 | அம்பாறை | இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம் | 6/2/2018 | உ. தே. த. தொ. டி. | தகவல் தொழில்நுட்ப பாடத்துறைக்கான செயல்முறை அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளல் | 7,000.00 |
| 5 | அம்பாறை | விவசாய அளவீட்டு நிலையம், வலய விவசாய ஆராய்ச்சி நிலையம் - மொனராகலை மற்றும் பண்ணை அபிவிருத்தி நிலையம் - பிபிலை | 20/8/2018 | உ. தே. தொ. டி. (விவசாயம்) | நிறுவனத்தினுள் வளங்கள் மற்றும் உபகரணங்கள் வரையறுக்கப்பட்டுள்ளமையினால் காணப்படாத சில செயல்முறை துறைகளை உள்ளடக்குதல் | 80,000.00 |
| | | | | | | |
| 6 | பதுளை | செம்சன் இறப்பர் உற்பத்தி (தனியார்) கம்பனி - காலி | 3/1/2018 - 4/1/2018 | உ. தே. க. டி. | கணக்கியல் துறையின் செயல்முறை அறிவு மற்றும் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளல் | 150,000.00 |
| | | | | | | |
| 7 | கொழும்பு | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், சபுகஸ்கந்த, களனி | 30/1/2018 | உ. தே. பொ. டி. (இயந்திரவியல்) | இயந்திரவியல் சார் பொறியியல் பாடத்துறைக்கான செயல்முறை அறிவினைப் பெற்றுக் கொள்ளல் | 2,700.00 |

| இலக்கம் | நிறுவனம் | வெளிக்கள பயணங்கள் | திகதி | யாருக்காக | நோக்கம் | ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | செலவு |
| 8 | கொழும்பு | இலங்கை புகையிரத திணைக்களம் - இரத்மலான | 8/2/2018 | உ. தே. பொ. டி. (இயந்திரவியல்) | இயந்திரவியல் சார் பொறியியல் துறையுடன் தொடர்புடைய செயல்முறை அறிவினைப் பெற்றுக் கொள்ளல் | 1,500.00 |
| 9 | கொழும்பு | நெடுஞ்சாலைகள் கருத்திட்டம் - மகநெகும - குளியாப்பிட்டி | 2/2/2018 | உ. தே. அ. டி. | அளவீட்டியில் பாடத்திட்டம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல் | 16,000.00 |
| 10 | கொழும்பு | ஓவர்ஸீஸ் ரியல்டி சிலோன் பிஎல்சி, உலக வர்த்தக நிலையம் | 3/2/2018 | உ. தே. க. நி. சே. நி. டி. (இயந்திரவியல்) | கட்டிட நிர்மாணம் தொடர்பான அறிவினைப் பெற்றுக் கொள்ளல் | 1,200.00 |
| 11 | கொழும்பு | லக்விஜய மின் உற்பத்தி நிலையம் - நுரைச்சோலை | 5/2/2018 | உ. தே. பொ. டி. (இயந்திரவியல்) | மின் உற்பத்தி நிலையங்கள் தொடர்பான அறிவினைப் பெற்றுக் கொள்ளல் | 7,000.00 |
| 12 | கொழும்பு | நீர் மின் உற்பத்தி நிலையம் - கண்டி | 8/2/2018 | உ. தே. பொ. டி. (மின் மற்றும் இலத்திரனியல்) | வலு பயிரிடல் மற்றும் மின் உற்பத்தி பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்ளல் | 10,000.00 |
| 13 | கொழும்பு | கெபிடல் டுவீன் பீக்ஸ் கருத்திட்டம் | 14/2/2018 | உ. தே. பொ. டி. (சிவில்) மற்றும் உ. தே. அ. டி. | சிவில் பொறியியல் மற்றும் அளவீட்டு பாடங்களை பயிலுகின்ற மாணவர்களுக்கான CEC1 மற்றும் சிவில் பொறியியல் சார் மற்றும் பொருட்கள் சார்ந்த பாடங்களுக்கான கட்டாய ஒப்படை | 1,800.00 |
| 14 | கொழும்பு | வருடாந்த அளவீட்டு முகாம் | 23/7/2018 - 28/7/2018 | உ. தே. பொ. டி. (சிவில்) | பயிற்சிக்காக | 1,335,000.00 |
| 15 | கொழும்பு | நீர் சுத்திகரிப்பு நிலையம் - களு கங்கை | 16/8/2018 | உ. தே. பொ. டி. (சிவில்) | செயல்முறை தொழிற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் நிர் சுத்திகரிப்பு நிலையங்கள் பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்ளல் | 3,000.00 |
| 16 | கொழும்பு | அம்பதலே நீர் சுத்திகரிப்பு நிலையம் | 17/8/2018 | உ. தே. பொ. டி. (சிவில்) | செயல்முறை தொழிற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் நிர் சுத்திகரிப்பு நிலையங்கள் பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்ளல் | 1,000.00 |
| | | | | | | |

| இலக்கம் | நிறுவனம் | வெளிக்கள பயணங்கள் | திகதி | யாருக்காக | நோக்கம் | ரூ. செலவு |
|---|---|---|---|---|---|---|
| 17 | தெஹிவளை | நேர்ஷர் பியுடி கிரிஷேன் - ஹொரணை | 19/12/2018 | உ. தே. தொ. மு. டி. | தொழில் முயற்சி சார் தொழிற்பாடுகள் மற்றும் உபாய முறைகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளல் | 2,600.00 |
| | | | | | | |
| 18 | கண்டி | டோக்கியோ சீமேந்து - திருகோணமலை | 24/1/2018 | உ. தே. க. டி. | மனித வளம் பற்றிய செயல்முறை அனுபவ உற்பத்தி, சந்தைப்படுத்தல், மனித முகாமைத்துவம், தொழிற்பாடுகள் மற்றும் டொஜிஸ்டிகல் என்பவற்றினைப் பெற்றுக் கொள்ளல் | 30,000.00 |
| 19 | கண்டி | மில்கோ (தனியார்) கம்பனி - அம்பேவல | 14/2/2018 | உ. தே. தொ. மு. டி. | இயந்திர வடிவமைப்பு மற்றும் பாதுகாப்பு அளவீடு / நிதியீட்டு கணக்கியல் மற்றும் செலவின முறைமை / மனித வளம் மற்றும் சந்தைப்படுத்தல் / ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 30,000.00 |
| | | | | | | |
| 20 | குருணாகல் | ஸ்மார்ட் ஸேர்ச் சென்டர் - மடம்பெல்ல | 9/1/2018 | உ. தே. க. டி. | கணக்கியல் முறை சார்ந்த அறிவு மற்றும் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளல் | 12,000.00 |
| | | | | | | |
| 21 | காலி | டயலொக் எக்ஸியாட்டா பிஎல்சி - கொடஹேன | 22/1/2018 | உ. தே. பொ. டி. (மின் மற்றும் இலத்திரனியல்) | தொலைத் தொடர்பு துறையின் செயன்முறை அறிவு மற்றும் அனுபவம் என்பவற்றினைப் பெற்றுக் கொள்ளல் | 21,000.00 |
| 22 | காலி | இலங்கை மின்சார சபை - படதுவ | 1/2/2018 | உ. தே. பொ. டி. (மின் மற்றும் இலத்திரனியல்) | நிறுவத்தினுள் செயல்முறை வசதிகள் காணப்படாமை காரணமாக | 10,000.00 |
| 23 | காலி | மரக் கூட்டுத்தாபனம் - பூஸ்ஸ | 18/1/2018 | உ. தே. தொ. டி. (விவசாயம்) | மர வகைகள் மற்றும் தொழிற்பாட்டினை இனங்காணல் மற்றும் செயல்முறை திறமைகளை விருத்தி செய்தல் | 10,000.00 |
| 24 | காலி | மூலதன அலகு கருத்திட்டம் - சூரியவெவ | 18/1/2018 | உ. தே. பொ. டி. (சிவில்) | நுண் வடிவமைப்பு சிவில் பொறியியல் சார் நிர்மாணம் மற்றும் கட்டமைப்பு என்பவற்றினை தயாரிப்பதுடன் தொடர்புடைய செயன்முறை அறிவினைப் பெற்றுக் கொள்ளல் | 49,000.00 |

| இலக்கம் | நிறுவனம் | வெளிக்கள பயணங்கள் | திகதி | யாருக்காக | நோக்கம் | ரூ. செலவு |
|---|---|---|---|---|---|---|
| 25 | காலி | றோயல் தாவரவியல் பூங்கா - பேராதனை | 3/1/2018 | உ. தே. தொ. டி. (விவசாயம்) | பூங்கா அலங்காரப்படுத்தல் மற்றும் புல்வெளி முகாமைத்துவம் என்பவற்றுடன் தொடர்புடைய செயல்முறை செயற்பாடுகளுக்கு நிறுவனத்தினுள் வசதி இன்மை காரணமாக | 26,500.00 |
| 26 | காலி | பொருளாதார நிலையம் - தம்புள்ளை | 11/1/2018 | உ. தே. தொ. டி. (விவசாயம்) | விவசாய சந்தைப்படுத்தல் பாடம் பற்றி கற்றுக் கொள்வதற்காக | 36,000.00 |
| 27 | காலி | சமல் ராஜபக்ஷ விவசாயப் பூங்கா - ஹுங்கம | 11/1/2018 | உ. தே. தொ. டி. (விவசாயம்) | பூங்காவியல் மற்றும் மரக்கறி பயிர்செய்கை ஆகிய பாடத் துறைகளின் செயல்முறை சார்ந்த வசதிகள் நிறுவனத்தினுள் காணப்படாமை காரணமாக | 46,000.00 |
| 28 | காலி | லக்ஷபான, கெனியொன், மௌஸாகெலே மின் உற்பத்தி நிலையம் | 6/2/2018 | உ. தே. பொ. டி. (மின் மற்றும் இலத்திரனியல்) | செயல்முறை தொழிற்பாடுகளை மேற்கொள்ளல் | 117,000.00 |
| 29 | காலி | கொழும்பு உலக வர்த்தக நிலையம், இரத்மலான சிங்கர் பிஎல்சி | 7/2/2018 | உ. தே. க. டி. மற்றும் உ. தே. தொ. நி. டி. | பங்குச் சந்தை தொழிற்பாட்டு நடவடிக்கைகள் / உற்பத்தி முறைமைகள் / கையிருப்பு கட்டுப்பாட்டு முறைமைகள் / செலவினக் கட்டுப்பாட்டு முறைமைகள் / கணக்கீட்டு நுட்ப முறைகள் / கம்பனிகளின் பொதுவான நிருவாகம் / உபாய முறைகள் / சந்தைப்படுத்தல் நுட்ப முறைகள் / தேவைக்கு ஏற்ப பொதியிடல் பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்ளல் | 72,000.00 |
| 30 | காலி | மருத்துவமனை கருத்திட்டம் - சீனகம | 8/2/2018 | உ. தே. பொ. டி. (சிவில்) | சிவில் பொறியியல் பாடத்துறை பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்ளல் | 14,000.00 |
| 31 | காலி | தேயிலை தொழிற்சாலை - வரல்ல, குருபேவுல பண்ணை, மொரவக | 9/2/2018 | உ. தே. க. டி. | முகாமைத்துவத் துறையின் செயல்முறை அறிவு மற்றும் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளல் | 44,000.00 |
| | | | | | | |

| இலக்கம் | நிறுவனம் | வெளிக்கள பயணங்கள் | திகதி | யாருக்காக | நோக்கம் | ரூ. |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | செலவு |
| 32 | கம்பஹா | ரத்தொழுவ நீர் சுத்திகரிப்பு நிலையம் | 13/2/2018 | உ. தே. உணவு டி. | சுகநல சுத்திகரிப்பு முறைமைகள் / பயன்படுத்திய கருவிகளை கண்காணித்தல் / நானாவித உணவு உற்பத்திசாலைகளின் உபகரணங்கள் / கழிவுநீர் மீள் சுழற்சி மற்றும் நீர் சுத்திகரிப்பு பற்றி ஆய்வு செய்தல் | 17,000.00 |
| 33 | கம்பஹா | இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் - அகலவத்தை | 31/8/2018 | உ. தே. தொ. டி. (விவசாயம) | இறப்பர் குழோன், இறப்பர் நாட்டுமேடை, இறப்பர் பால் வெட்டும் முறைமை மற்றும் இறப்பர் உற்பத்தி பற்றிய செயல்முறை அறிவினை பெற்றுக் கொள்ளல் | 11,500.00 |
| | | | | | | |

## டிப்ளோமா வழங்கும் விழா

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட உயர் தேசிய டிப்ளொமா பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த கற்கைதாரிகளுக்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் விழா 2018 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் 16, 17 மற்றும் 18 ஆகிய மூன்று தினங்களிலும் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெகு விமரிசையாக நடாத்தப்பட்டது.

இம்முறை டிப்ளோமா வழங்கும் விழாவானது ஏழு கட்டங்களாக நடைபெற்றதுடன், அந்த ஒவ்வொரு தொடரினதும் விசேட விருந்தினராகக் கலந்து கொண்ட விசேட அதிதிகள் பின்வருமாறு.

**2018 திசெம்பர் 16 ஆம் திகதி**

***முதலாவது அமர்வு*** - பேராசிரியர் எம். சுனில் சாந்த, உப வேந்தர், சப்ரகமுவா பல்கலைக்கழகம்

***இரண்டாம் தொடர்*** - சிரேஷ்ட பேராசிரியர் உதித் கே. ஜயசிங்க, விவசாயம் மற்றும் பெருந்தோட்டப் பீடம், வயம்ப பல்கலைக்கழகம்

**2018 திசெம்பர் 17 ஆம் திகதி**

***மூன்றாவது அமர்வு*** - பேராசிரியர் பீ. எஸ். எம். குணரத்ன, உப வேந்தர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

***நான்காவது அமர்வு*** - பேராசிரியர் சீ. எம். பி தெமட்டவெவ,, பணிப்பாளர், விவசாயம் பற்றிய பட்டப்பின் படிப்பு நிறவனம், பேராதனை பல்கலைக்கழகம்

***ஐந்தாவது அமர்வு*** - பேராசிரியர் கே. கபில சீ. கே. பெரேரா, உப வேந்தர், மொரட்டுவை பல்கலைக்கழகம்

**2018 திசெம்பர் 18 ஆம் திகதி**

***ஆறாவது அமர்வு*** - சிரேஷ்ட பேராசிரியர் எம். எம். எம். நாஜிம் , உப வேந்தர், தென் கிழக்கு பல்கலைக்கழகம்

***ஏழாவது அமர்வு*** - சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க , உப வேந்தர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

அவ்வாறே, 2018 ஆம் ஆண்டில் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறியினை வெற்றிகரமான முறையில் பூர்த்தி செய்த 3454 பேருக்கு டிப்யோமா வழங்கப்பட்டது.

**அட்டவணை 9 : 2018 இல் வழங்கப்பட்ட டிப்யோமாக்களின் எண்ணிக்கை**

| டிப்ளோமா வழங்கல் இடம் பெற்ற திகதி | அமர்வு | வழங்கப்பட்ட டிப்ளோமாக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2018 திசெம்பர் **16** | 1 | **501** |
| | 2 | **510** |
| 2018 திசெம்பர் **17** | 3 | **527** |
| | 4 | **498** |
| | 5 | **500** |
| 2018 திசெம்பர் **18** | 6 | **433** |
| | 7 | **485** |

## அட்டவணை 10 : 15 ஆவது டிப்ளோமா வழங்கலின் சாராம்சம்

| | | நிறுவனம் | உ. தே. கணக்கியல் டிப்ளோமா | உ. தே. தொழில் முயற்சி நிருவாக டிப்ளோமா | உ. தே. தொழில் முயற்சி நிதிசார் டிப்ளோமா | உ. தே. கட்டிட சேவைகள் பொறியியல் டிப்ளோமா | உ. தே. பொறியியல் (சிவில்) டிப்ளோமா | உ. தே. பொறியியல் (மின் / இல்) டிப்ளோமா | உ. தே. பொறியியல் (இயந்திரவியல்) டிப்ளோமா | உ. தே. ஆங்கில டிப்ளோமா | உ. தே. உணவு தொழில்நுட்ப டிப்ளோமா | உ. தே. தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா | உ. தே. முகாமைத்துவ டிப்ளோமா | உ. தே. அளவீட்டு டிப்ளோமா | உ. தே. தொழில்நுட்ப (விஞ்ஞான) டிப்ளோமா | உ. தே. சுற்றுலா மற்றும் நலனோம்பல் முகாமைத்துவ டிப்ளோமா | முழு மொத்தம் | சுருக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதலாவது அமர்வு | 1 | அம்பாறை | 40 | | | | | | | 145 | | 27 | 15 | | 35 | | 262 | 501 |
| | 2 | யாழ்ப்பாணம் | 35 | | | | 36 | 29 | | 77 | | 41 | 15 | | | 6 | 239 | |
| இரண்டாவது தொடர் | 3 | கொழும்பு | | | | 21 | 51 | 57 | 42 | | | | | 57 | | | 228 | 510 |
| | 4 | கம்பஹா | 65 | | | | | | | | 42 | 38 | | | 31 | | 176 | |
| | 5 | சம்மாந்துரை | 38 | | | | | | | 68 | | | | | | | 106 | |
| மூன்றாவது தொடர் | 6 | காலி | 93 | 40 | | | 54 | 42 | 35 | 46 | | 58 | 54 | 47 | 28 | 30 | 527 | 527 |
| நான்காவது தொடத் | 7 | கண்டி | 60 | 32 | | | | | | 119 | | 30 | 32 | | | 37 | 310 | 498 |
| | 8 | கேகாலை | 49 | | | | | | | 75 | | 24 | | | | | 148 | |
| | 9 | தங்காலை | 13 | | | | | | | 14 | | 13 | | | | | 40 | |
| ஐந்தாவது தொடர் | 10 | குருநாகல் | 72 | | | | | | | 163 | | 19 | 21 | | | | 275 | 500 |
| | 11 | திருகோணமலை | 27 | | | | | | | 52 | | 35 | | | | | 114 | |
| | 12 | மட்டக்களப்பு | 35 | | | | | | | 76 | | | | | | | 111 | |
| ஆறாவது தொடர் | 13 | பதுளை | 45 | | | | | | | 132 | | 29 | 32 | | | 17 | 255 | 433 |
| | 14 | அநுராதபுரம் | 28 | | | | | | | 62 | | | | | | | 90 | |
| | 15 | இரத்தினபுரி | 19 | | | | | | | 41 | | 8 | | | | | 68 | |
| | | தெஹிவலை | | 1 | 1 | | | | | | | | | | | | 2 | |
| | | கொழும்பு | | | | | 1 | | | | | | | | | | 1 | |
| | | யாழ்ப்பாணம் | | | | | | 1 | | | | 1 | | | | | 2 | |
| | | கண்டி | | | | | | | | 1 | | | | | | | 1 | |
| | | கம்பஹா | 1 | | | | | | | | | | | | | | 1 | |
| | | குருநாகல் | | | | | | | | | | 1 | | | | | 1 | |
| | | காலி | | | | | 5 | 6 | 1 | | | | | | | | 12 | |
| ஏழாவது தொடர் | 16 | தெஹிவலை | 131 | 36 | 32 | | | | | 88 | | 33 | 93 | | | 43 | 456 | 485 |
| | 17 | வவுனியா | | | | | | | | 17 | | 12 | | | | | 29 | |
| | | | | | | | | | | | | | | | | | முழு மொத்தம் | 3454 |

**அட்டவணை 11 : 2018 இல் வழங்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ்களின் எண்ணிக்கை**

| டிப்ளோமா வழங்கல் விழா | டிப்ளோமா சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு தகைமை பெற்ற ஆண்டு | வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 12 ஆவது டிப்ளோமா வழங்கல் விழா - 2015 | 2014 | 2,077 |
| 13 ஆவது டிப்ளோமா வழங்கல் விழா - 2016 | 2015 | 3,088 |
| 14 ஆவது டிப்ளோமா வழங்கல் விழா - 2017 | 2016 | 3,299 |
| 15 ஆவது டிப்ளோமா வழங்கல் விழா - 2018 | 2017 | 3,454 |





டிப்ளோமா வழங்கும் விழா 2018



டிப்ளோமா வழங்கும் விழா 2018 - டிப்ளோமா பட்டதாரிகள்



டிப்ளோமா வழங்கும் விழா 2018 - *முக்கிய உரை*



டிப்ளோமா வழங்கும் விழா 2018 - டிப்ளோமா பட்டதாரிகள்

## 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கல்வி குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள்

**அட்டவணை 12 :கல்விக் குழுக் கூட்டம்**

| இலக்கம் | விபரம் |
|---|---|
| 137.7 | **உயர் தொழில்நுட்ப நிறுவன மட்டத்தில் மற்றும் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவன மட்டத்தில் நடைபெற்ற கூட்டங்கள்** |

**தீர்மானம் 01**

பின்வருவன உயர் தொழில்நுட்ப நிறுவன மட்டத்தில் இடம்பெற்ற கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களாகும்.

| கூட்டம் | வாரம் | அறிக்கை பற்றிய விபரம் |
|---|---|---|
| திணைக்கள கூட்டம் | 1 | அறிக்கை கோப்புக்களை திணைக்களத்தினுள் வைத்தல் வேண்டும். |
| கல்வி பதவியணி | 2 | உயர் தொழில்நுட்ப நிறுவனம் / தாபனப் பிரிவினுள் அறிக்கையின் பிரதி ஒன்றினை வைத்திருத்தல் வேண்டும். மென்பிரதி பி. ப. ந. (க. அ. /தி. மற்றும் ஆ.) மற்றும் திருமதி குமுதினி தர்மகீர்த்திக்கு அனுப்புதல் வேண்டும். |
| கல்விக் குழுக் கூட்டம் | 3 | பி. ப. ந. (க. அ. /தி. மற்றும் ஆ.) உறுதிப்படுத்தப்பட்ட கல்விக் குழு அறிக்கை, சகல உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள்/ பிரிவுகளின் பணிப்பாளர்கள் மற்றும் கல்வி ஒருங்கிணைப்பாளர்களினால் அனைத்து கல்வி பதவியணிக்கும் பகிர்ந்தளித்தல் வேண்டும். |

**தீர்மானம் 2**

**கல்விப் பதவியணி கூட்டங்களின் நிகழ்ச்சி நிரல்**

- கற்கை பிரச்சினைகள் (ஒவ்வொரு பாடநெறிக்கும்)
- பரீட்சை பிரச்சினை
- தரச் சான்றுப்படுத்தல்
- கல்விக் குழு கூட்ட அறிக்கை தொடர்பாக கலந்துரையாடல்
- நிருவாகப் பிரச்சினைகள்
- மாணவர் பிரச்சினைகள் (இட மாற்றம், பாடநெறிகளை மாற்றுதல் என்பன)
- மாணவர் திறன் விருத்தி செயற்பாடுகள்
- ஏனைய பிரச்சினைகள்

கல்விக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் வரவு இடாப்பினை பேணி வருதல் வேண்டும்.

**கல்விக் குழுக் கூட்ட நிகழ்ச்சி நிரல்**

கல்விக் குழுக் கூட்ட நிகழ்ச்சி நிரலுக்கு மேலதிகமாக உள்ள விடயங்கள்

- ஆராய்ச்சி மற்றும் பதவியணி அபிவிருத்தி
- பாடத்திட்ட அபிவிருத்தி, நிகழ்ச்சித்திட்டம், ஆலோசனைக் குழுக் கூட்டம் மற்றும் தொழில்நுட்ப தொடர்புகள்

**தீர்மானம் 3**

**ஆராய்ச்சிக் கொடுப்பனவு**

ஆராய்ச்சிக் கொடுப்பனவினை பெறுகின்ற ஒருவர் சம்பளமற்ற விடுமுறையினை பெற்றுக் கொண்டுள்ள காலத்தினுள் ஆராய்ச்சிக் கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது.

**தீர்மானம் 4**

உள்ளக மற்றும் வெளி கல்விப் பதவியணிக்கு வெளி விரிவுரைகளுக்காக அனுமதிக்கப்பட்ட உச்ச மணித்தியாலங்களின் எண்ணிக்கை

| முன்பு இருந்த முறை | அனுமதிக்கப்பட்ட புதிய முறை |
|---|---|
| உள்ளக<br>வாரம் ஒன்றுக்கு / 8 மணித்தியாலயம்<br>நாள் ஒன்றுக்கு / 6 மணித்தியாலம்<br><br>வெளி<br>வாரம் ஒன்றுக்கு 12 மணித்தியாலம் | உள்ளக<br>வாரம் ஒன்றுக்கு 8 மணித்தியாலம் அல்லது<br>நாள் ஒன்றுக்கு 6 மணித்தியாலம்<br>வெளி<br>வாரம் ஒன்றுக்கு 12 மணித்தியாலம் |

வார நாட்களில் கல்விப் பதவியணி வெளி விரிவுரைகளை நடாத்துவதாயின் பி.ப. 4.00 மணிக்கு பின்னர் அதற்கான அனுமதி உண்டு. (அன்றைய தினம் அவர்களது விடுமுறை நாளாக இல்லாத பட்சத்தில்)

**தீர்மானம் 5**

கலை விரிவுரையாளர்களுக்கு பட்டம் ஒன்று அல்லது NVQ 7 இற்கு சமமான பட்டம் ஒன்று அல்லது தொழில் சார் தகைமைகள் இருப்பின் அவர்களது விடுமுறை நாட்களில் வெளி விரிவுரைகளை நடாத்துவதற்கு அவர்களுக்கு அனுமதி உண்டு.

**7.5 NVQ 6**

பணிப்பாளர் நாயகத்தினால் சகல பணிப்பாளர்கள் / கல்வி ஒருங்கிணைப்பாளர்கள்

138.2 **2.1 அறிக்கையில் எழுகின்ற பிரச்சினைகள்**

**2.1.4 பரீட்சை நிலையத்தில் பல்வேறு அங்கவீனமுற்ற நபர்களுக்கு வழங்கப்படுகின்ற வசதிகள்**

பல்வேறு அங்கவீனமுற்ற நபர்களுக்கு பரீட்சை நிலையத்தினுள் ஏனைய மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற சம வசதிகளை வழங்குதல் வேண்டும். அதற்காக பரீட்சை திணைக்களத்தினால் விதிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளை கடைபிடிக்க முடியும்.

**3.1 பரீட்சைகள் மதிப்பீடு**

138.3

**3.1.1 பரீட்சை மதிப்பீட்டு நிலையங்கள்**

பரீட்சைகள் மதிப்பீடு செய்வது தொடர்பாக பின்வரும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தீர்மானம்**

எந்தவொரு உயர் தொழில்நுட்ப நிறுவனத்திலும்/ தாபனப் பிரிவின் பதவியணிக்கு தமது நிறுவனத்தை பரீட்சை மதிப்பீட்டு நிலையமொன்றாக அமைத்துக் கொள்ள வேண்டுமாயின் கல்விப் பதவியணியின் ஆகக் குறைந்தது அனுமதிக்கப்பட்ட 06 கடிதங்களாவது சமர்ப்பித்தல் வேண்டும். இந்த கல்வி பதவியணியினுள் ஆகக் குறைந்தது ஒரு சிரேஷ்ட கல்வி உறுப்பினராவது உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். (ஆகக் குறைந்தது விரிவுரையாளர் தரத்திலாவது இருத்தல் வேண்டும்.)

**5.1.2 அனுமதிக்கப்பட்ட பாடத்திட்ட பிரதிகள்**

சகல உயர் தொழில்நுட்ப நிறுவனங்களினாலும் நடாத்திச் செல்லப்படுகின்ற சகல பாடநெறிகளுக்கும்
உறுதிப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் ஒன்று இருத்தல் வேண்டும். அதில் ஒரு பிரதியை நூலகத்தில்
138.5 வைத்தல் வேண்டும். பணம் செலுத்தி போட்டோ பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை
நூலகத்தினால் ஒழுங்கு செய்தல் வேண்டும் அல்லது மாணவர்களுக்கு ரூபா. 5,000/- பெறுமதியான

| | |
|---|---|
| 138.6 | பாதுகாப்பு வைப்புத் தொகையொன்று மற்றும் மாணவர் அடையாள அட்டை என்பவற்றினை நூலகத்தில் ஒப்படைத்து பாடத்திட்டத்தை போட்டோ பிரதி செய்வதற்காக எடுத்துச் செல்ல முடியும். அவ்வாறு போட்டோ பிரதியினை பெற்றுக் கொண்ட பாடத்திட்டத்தினை 03 நாட்களுக்குள் ஒப்படைத்தல் வேண்டும்.<br><br>**6.1 கற்கைசார் பிரச்சினைகள்**<br><br>**6.1.1 பாட உள்ளடக்க ஆவணவாளர்கள்**<br><br>பாட உள்ளடக்க ஆவணவாளர்கள் வாரம் ஒன்றுக்கு பணி புரியும் மணித்தியாலங்களில் இருந்து ஒரு மணித்தியாலம் விடுவிக்கப்படுவதுடன் அது மொத்த காலப் பகுதியில் 15 மணித்தியாலத்திற்கு சமமாக இருத்தல் வேண்டும்.<br>குறித்த பிரிவுத் தலைவர்களினால் கற்கைக் காலப் பகுதியின் நடுப்பகுதியில் முன்னேற்றத்தினை உறுதி செய்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு பிரிவுத் தலைவர்களினால் முடியாது போகும் பட்சத்தில் குறித்த பாட உள்ளடக்க ஆவணவாளர்களின் விரிவுரைகளிலிருந்து 15 மணித்தியாலங்களை குறைக்க முடியும். |
| 139.4 | **4.1.1 ஆட்சேர்ப்பு**<br><br>உயர் தொழில்நுட்ப நிறுவனம் / தாபனப் பிரிவுகளில் எந்தவொரு உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிக்கும் புதிய மாணவர்களை சேர்க்கும் போது அதில் ஆகக் குறைந்தது 100 - 50 இடைப்பட்ட மாணவர்கள் இருத்தல் வேண்டும்.<br>139 வது கல்விக் குழு தீர்மானத்தில் எதுவித மாற்றமும் இல்லை. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தேர்ந்தெடுத்தலை பூர்த்தி செய்தல் வேண்டும். யாதேனும் ஒரு பிழையிருப்பின், அதற்காக உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின்/ பிரிவின் பதிவாளர், உதவிப் பதிவாளர், கல்வி ஒருங்கிணைப்பாளர் அல்லது பிரிவுத் தலைவர் பொறுப்புக் கூறல் வேண்டும். எனவே மாணவர்களின் தகைமைகளை பரீட்சிப்பதனை மேற்படி அலுவலர்கள் பொறுப்பு வகித்தல் வேண்டும்.<br><br>**4.1.3 ஆட்சேர்ப்புக்கான தெரிவு செய்தல் நடைமுறை - 2018**<br><br>**தெரிவு செய்வதற்கான பரீட்சை**<br><br>உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா, உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா, உயர் தேசிய சுற்றுலா மற்றும் உபசரணை சேவை முகாமைத்துவ டிப்ளோமா, உயர் தேசிய உணவுத் தொழில்நுட்ப டிப்ளோமா மற்றும் உயர் தொழில்நுட்ப நுகர்வுத் துறை மற்றும் உற்பத்தித் துறை தொழில்நுட்ப டிப்ளோமா ஆகிய பாடநெறிகளுக்கு தேர்ந்தெடுப்பதற்காக பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன.<br><br>**தேர்ந்தெடுப்பதற்கான நடைமுறைகள்**<br><br>ஒவ்வொரு பாடநெறிக்கும் தேர்ந்தெடுப்பதற்கான நடைமுறைகள் பற்றி பத்திரிகை விளம்பரம், வர்த்தமானி அறிவித்தல் மற்றும் இணையத்தளம் என்பவற்றில் பிரசுரிக்கப்படும்.<br><br>**ஆட்சேர்ப்பு நடைமுறையில் ஏற்பட்ட மாற்றம் - 2019**<br><br>ஒரு பாடநெறிக்கு ஒரு விண்ணப்பம் மாத்திரமே அனுப்புதல் வேண்டும். ஒரு பாடநெறிக்கு மேல் விண்ணப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொரு பாடநெறிக்கும் தனித்தனியாக விண்ணப்பித்தல் வேண்டும்.<br><br>**4.1.9 கேகாலை உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு புதிய பாடநெறிகளை அறிமுகம் செய்தல்.**<br><br>கேகாலை உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு வழிகாட்டல் கருத்திட்டம் ஒன்றாக கருத்திட்ட முகாமைத்துவத்தை அறிமுகம் செய்வதற்கு நிருவாக சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது பற்றிய அத்தியவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் வளவாளர்களை தேர்ந்தெடுத்தல் என்பன தொடர்பில் கேகாலை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர், பணிப்பாளர் நாயகத்தினால் பாராட்டப்பட்டார். |
| 141.7 | **7.1.1 பாடத்திட்டத்தை இற்றைப்படுத்தல்**<br><br>**உயர் தேசிய தொழில்முயற்சி நிருவாக டிப்ளோமா பாடநெறி மற்றும் உயர் தேசிய தொழில்முயற்சி நிதி டிப்ளோமா பாடநெறி** |

| | |
|---|---|
| | அனைத்து காலத்திற்குமுரிய பாடத்திட்டங்களின் மாதிரித் திட்டம் கல்விக் குழுவினால் மற்றும் நிருவாக சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>முதலாம் ஆண்டின் முதலாவது காலத்திற்குரிய பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் கல்விக் குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>**உயர் தேசிய கருத்திட்ட டிப்ளோமா பாடநெறி**<br><br>முதலாம் ஆண்டின் முதலாம் காலப் பகுதிக்கான பாடத்திட்டத்தின் மாதிரித்திட்டம் மற்றும் உள்ளடக்கம் என்பன கல்விக் குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>**இறுதிப் பரீட்சையின் போது மாணவரின் செயலாற்றுகை**<br><br>பின்வரும் பாடங்கள் பற்றிய பெறுபேறுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.<br><br>• உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி முதலாம் ஆண்டு முதலாவது காலப் பகுதி - 2017<br>• உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி இரண்டாம் வருடம் முதலாம் காலப் பகுதி - 2017<br>• உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறி (சிவில்) முதலாம் வருடம் முதலாம் காலப் பகுதி - 2017<br>• உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறி (சிவில்) இரண்டாம் வருடம் முதலாம் காலப் பகுதி - 2017<br>• உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறி (சிவில்) நான்காம் வருடம் முதலாம் காலப் பகுதி - 2017<br>• உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறி (மின்னியல்) மூன்றாம் வருடம் முதலாம் காலப் பகுதி - 2017<br><br>மேற்படி பகுப்பாய்வுகள் 141 வது கல்விக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>கல்விப் பதவியணி கூட்டத்தின் போது கலந்துரையாடுவதற்காக ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தினதும் பெறுபேற்று பகுப்பாய்வு மென்பிரதியொன்றை பிரிவுத் தலைவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி) ஆலோசனை வழங்கியுள்ளார். |

| | |
|---|---|
| 142.3 | **3.5 கற்கை பணிகள் பற்றிய வாராந்த முன்னேற்றம்**<br><br>• பிரதான அலுவலகத்தின் பணிப்பாளர் வி.எம்.பீ. இந்திக அவர்களினால் வாராந்தம் கற்கை நடவடிக்கைகளின் முன்னேற்றம் மதிப்பீடு செய்வதற்காக இணையத்தளங்களை அடிப்படையாகக் கொண்ட மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.<br>• தகவல் முறைமைக்கு தகவல்களை உள்ளடக்கும் பணி தகவல் தொழில்நுட்ப உதவியாளர்/ முகாமைத்துவ உதவியாளர் மேற்கொள்ள முடியும்.<br>• உயர் தொழில்நுட்ப நிறுவனம்/ தாபனப் பிரிவுகளின் பதிவாளர்களினால் அதனை கண்காணித்தல் வேண்டும்.<br>• திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் செல்வி பிரகீசாவினால் ஒவ்வொரு வாரத்திற்கு ஒரு முறையும் அறிக்கை தயாரிக்கப்படுகின்றது.<br><br>**7.3 BIT பட்டத்தை விடுவிப்பதில் முன்னேற்றம்**<br><br>திரு. பி.எம்.ரி. சந்திக அவர்கள் பாடத்திட்ட ஒப்பீடு மற்றும் விடுவித்தல் தொடர்பாக கலந்துரையாடும் பொருட்டு தாம் பங்கேற்ற கூட்டத்தின் போது மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பவியலம் பட்டத்தின் மூன்றாம் வருடத்தில் நேரடியாக சேர்த்துக் கொள்வதற்கு இணக்கம் தெரிவித்தார்.<br><br>**8.4 பதவியணி அபிவிருத்தி**<br><br>(அ) கலை முதுமானி அல்லது தொழில்சார் கலாநிதி பட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்காக புலமைப் பரிசில்களைப் பெற்றுக் கொள்வதற்கு கல்விப் பதவியணிக்கு வாய்ப்பளிக்கபபட்டுள்ளது..<br><br>(ஆ) புலமைப் பரிசில்களுக்காக சர்வதேச ஆங்கில மொழிப் பரீட்சித்தல் முறையில் வழங்கப்படுகின்ற புள்ளிகளை 5.5 ஆக திருத்தம் செய்தல் மற்றும் இந்த உயர்கல்வி கருத்திட்டம் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டத்தின் புலமைப் பரிசில்களைப் பெற்றுக் கொள்வது கட்டாயமாகும். மாதத்திற்கு ரூ. 16,000/- பெறுமதியான கொடுப்பனவொன்று இவர்களுக்கு உரித்தாகும். அவ்வாறே எந்தவொரு உயர் தொழில்நுட்ப நிறுவனத்திலும்/ உயர் கல்வி நிறுவனத்திலும் வெளி விரிவுரையாளர்களாக பணியாற்றுவதற்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படுவோருக்கு அனுமதி இல்லை.<br><br>பட்டப் பின் படிப்பு கற்கைகளுக்காக நிதி வழங்கல்; பிணை காலம், உறுதிப்படுத்திய பட்டப் பிரதிகள், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திடம் பெற்றுக் கொடுத்ததன் பின்னர் ஒரு வருட காலத்திற்கு வரையறுக்கப்படும்.<br><br>**8.5 தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தித் திட்டம்**<br><br>பின்வரும் விடயங்கள் பற்றி கவனம் செலுத்தப்பட்டன.<br>• மாணவர்களுக்கு இணையத்தளத்தில் மிகவும் வினைத்திறனான முறையில் நுழைவதற்கு உள்ள வாய்ப்பினை விஸ்தரித்தல்.<br>• மாணவர்களின் தனி பாடநெறிகளுக்கான நுழைவதற்கு வசதியளிக்கும் பொருட்டு வலையமைப்பிற்கு உட்படுத்திய உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.<br>• ஒவ்வொரு உயர் தொழில்நுட்ப நிறுவனங்களிலும் வீடியோ கருத்தரங்கு அலகு வீதம் நிறுவுதல்.<br>• தன்னியக்க மாணவர் நிருவாகம்.<br>• தேர்ந்தெடுக்கப்பட்ட பாடநெறிகள் மற்றும் பாடங்கள் தொடர்பாக இலத்திரனியல் கணிப்பீட்டு முறைகளை மதிப்பீடு செய்தல்.<br>• 5 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய 350 மடி கணினிகளை மீள நிறுவுதல். |
| 142.11 | **11. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் தீர்மானம்**<br><br>**(அ) இடர் கடன்**<br>அரசாங்க ஓய்வூதிய உரித்துடைய அலுவலர்கள் அல்லது அரசாங்க சேவை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செலுத்துவோரை பிணையாளர்களாக ஏற்றுக் கொள்ளல். |

கடன் தொகை ரூ..250,000 / = வரை அதிகரிக்கப்பட்டுள்ளது (புதிய விண்ணப்பதாரர் ஒருவருக்கு இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா தொகை).

**(ஆ) சில்லறைக் காசு**

உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரிவுகளுக்கு சில்லறைக் காசு கட்டுநிதியானது ரூ. 20,000 /= வரை அதிகரிக்கப்படல்.

**(இ) கணக்காளர் சேவை**

உயர் தொழில்நுட்ப பிரிவுகளுக்கு இச்சேவையினை அருகாமையில் உள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். வாரம் ஒரு நாள் (நிலையான திகதி) தலைமை அலுவலகத்தின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் இப்பணி ஒப்படைக்கப்படுவதுடன் அவ்வாறான கணக்காளர் ஒருவருக்கு பிரயாணச் செலவு மற்றும் இணைந்த படிகளுடன் மாதம் ஒன்றுக்கு ரூபா. 1,000/= செலுத்தப்படும்.

**(ஈ) பொருள் கிடைப்பனவு பற்றுச்சீட்டு**

பொருள் கிடைப்பனவு பற்றச்சீட்டு ஒரு வார காலத்தினுள் வழங்குதல் வேண்டும்.

**2018 நவம்பர் மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற 144வது கல்விக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள்**

**9.4 தரச் சான்றிதழுக்காக திறமை மட்ட முறைமை ஒன்றினை அறிமுகம் செய்தல்.**

1. தகைமை பெறுவோர் பட்டியலில் உள்ளடக்கப்படும் ஒவ்வொரு மாணவருக்கும் தேர்ச்சி சித்தி கிடைக்கப்பெறுவதில்லை. ஏனெனில் அது மாணவர் கையேட்டில் விதிமுறைகளின் பிரகாரம் இடம்பெறுவதுடன் மீண்டும் மீண்டும் பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கு இவ்வாய்ப்பு கிடைக்கப் பெறுவதில்லை.
2. வழிகாட்டல் ஒன்றின் பிரகாரம் மாணவர்களுக்கு தேர்ச்சி சித்திகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை ஒழுங்குமுறையொன்றினை தயாரிப்பதற்கு பணிப்பாளருக்கு (பரீட்சைகள்) ஆலோசனை வழங்கப்பட்டது.
3. எதிர்காலத்தில், பரீட்சையில் சித்தி பெற்று பெறுபேறுகளை வெளியிட்டதன் பின்னர் தேர்ச்சி சித்தி இனங்காணப்படுவதுடன் அதன் பிரகாரம் தரச் சான்றிதழ்களை மாணவர்களுக்கு வழங்க முடியும்.
4. மேலும், அத்தகவல்களை பரீட்சைகள் பிரிவிற்கு அனுப்புமாறு பணிப்பாளருக்கு (பரீட்சைகள்) ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மாணவர் செயற்பாடுகள் - கண்டி உயர் தொழில்நுட்ப நிறுவனம்



பிரித் நிகழ்வுகள்



மாணவர்களின் ஆற்றல் வெளிப்படுத்தல்



மாணவர் உபசரணை நிகழ்ச்சித் திட்டங்கள்



மாணவர் இணைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்




கண்காட்சிக்கான உ. தொ.த.தொ.டி. வின் மாணவ பிரதிநிதிகள்



இரத்த தான முகாம்

தெஹிவலை உ.தொ.நி. தில் உ. தே. க. டி. மாணவர்களிடமிருந்து மஹரகம அபேக்ஷா மருத்துவமனைக்கு நன்கொடைகள்





## திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

ஆராய்ச்சிக் கொடுப்பனவு

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் பதவி நிலை தரத்தைச் சேர்ந்த பதவியணிக்கு தமது ஆராய்ச்சி கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கான அடிப்படையாக ஆராய்ச்சிக் கொடுப்பனவொன்றினை செலுத்துவதற்கு 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஆராய்ச்சியாளர்களுக்கு ஆராய்ச்சிக் கொடுப்பனவு 2011 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க மற்றும் 2014 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் செலுத்தப்படுகின்றது.

முக்கியமாக பிரதான ஐந்து (05) துறைகளை மையமாகக் கொண்டு இந்த ஆராய்ச்சிக் கொடுப்பனவினை வழங்குவதற்கு முன்மொழிவுகளை சமர்ப்பிக்க முடியும். அவை முகாமைத்துவம் மற்றும் கணக்கியல், ஆங்கிலம், பொறியியல், தகவல் தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் உணவியல் உள்ளிட்ட பாடத்துறைகளை உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட ஒன்றாக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட துறைகளுடன் தொடர்புடையதாக சமர்ப்பிக்கப்படுகின்ற ஆராய்ச்சி முன்மொழிவுகளை அரையாண்டிற்கு ஒரு முறை ஒன்று திரட்டி ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுவின் சிபாரிசு மற்றும் ஆராய்ச்சி கண்காணிப்புக் குழுவின் அனுமதி என்பன பெறப்பட்டதன் பின்னர் மீளாய்விற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது. இதன் போது உள்ளக மீளாய்வாளர்களாக இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் கல்விசார் பதவியணியின் உறுப்பினர்களை உள்ளடக்கிய நேர்முக பரிசோதகர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் ஆராய்ச்சி பற்றிய அறிவுடைய ஒரு பிரிவினரும் வெளி மீளாய்வாளர்களாக இலங்கையின் பல்கலைக்கழக முறைமையின் ஆராய்ச்சி பற்றிய சிறந்த அறிவுடைய ஒரு தரப்பினரின் உதவியும் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

தற்போது அமுலில் உள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் ஆராய்ச்சியாளர்களினால் குறித்த ஆராய்ச்சி முன்மொழிவுகளை சமர்ப்பித்ததன் பின்னர் அவை அனுமதிக்கப்படும் பட்சத்தில் அதனை ஒப்படைத்த தினத்திற்கு பின்னரான திகதியிட்டு ஆராய்ச்சிக் கொடுப்பனவினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**அட்டவணை 13 : ஆராய்ச்சி கொடுப்பனவு பற்றிய தகவல்கள் 2018**

| | ஆராய்ச்சியாளரின் பெயர் | நிறுவனம் | பாடத்துறை | ஆராய்ச்சிக் கொடுப்பனவு செலுத்தும் கால எல்லை |
|---|---|---|---|---|
| 1 | சி. ஐ. ஈ. ஜயசூரிய | தெஹிவளை | தகவல் தொழில்நுட்பம் | ஜுலை 2018 - ஜுன் 2021 |
| 2 | என். ஆர். மெத்தகே | தெஹிவளை | தகவல் தொழில்நுட்பம் | மே 2018 - ஏப்ரல் 2021 |
| 3 | வை. எம். கிரிமுதுகொட | காலி | தகவல் தொழில்நுட்பம் | ஆகஸ்ட் 2017 - ஜுலை 2020 |
| 4 | பி. கஜசிங்க | பதுளை | தகவல் தொழில்நுட்பம் | டிசம்பர் 2017 - நவம்பர் 2020 |
| 5 | ஏ. வீ. எல். சந்திமா | கம்பஹ | தகவல் தொழில்நுட்பம் | ஜுன் 2017 - மே 2020 |
| 6 | எல். ஏ. எம். டப்ளியு. ஐ. சமரசேகர | குருணாகல் | தகவல் தொழில்நுட்பம் | ஒக்டோபர் 2017 - செப்டெம்பர் 2020 |
| 7 | என். டி. குணசேகர | தெஹிவளை | தகவல் தொழில்நுட்பம் | ஒக்டோபர் 2017 - செப்டெம்பர் 2020 |
| 8 | எஸ். தசீனா | அம்பாறை | விவசாயம் | மே 2018 - ஏப்ரல் 2021 |

| | ஆராய்ச்சியாளரின் பெயர் | நிறுவனம் | பாடத்துறை | ஆராய்ச்சிக் கொடுப்பனவு செலுத்தும் கால எல்லை |
|---|---|---|---|---|
| 9 | எம். சோமதாசன் | திருகோணமலை | ஆங்கிலம் | மே 2018 - ஏப்ரல் 2021 |
| 10 | டப்ளியு. ஏ. நிஹால் | பதுளை | ஆங்கிலம் | ஏப்ரல் 2017 - மார்ச் 2020 |
| 11 | எஸ். சுபாகரன் | தெஹிவளை | ஆங்கிலம் | மே 2017 - ஏப்ரல் 2020 |
| 12 | எச். எம். யு. கே. ஹேரத் | தெஹிவளை | ஆங்கிலம் | யூன் 2017 - மே 2020 |
| 13 | வை. அச்சுதன் | வவுனியா | ஆங்கிலம் | ஒக்டோபர் 2017 - செப்டெம்பர் 2020 |
| 14 | பி. கம்சத்வனி | வவுனியா | ஆங்கிலம் | ஒக்டோபர் 2017 - செப்டெம்பர் 2020 |
| 15 | ஆர். ஜே. மொஹான் குரூஸ் | மன்னார் | ஆங்கிலம் | ஒக்டோபர் 2017 - செப்டெம்பர் 2020 |
| 16 | கே. பீ. பீ. பி. ஜயசிங்க | கேகாலை | ஆங்கிலம் | ஒக்டோபர் 2017 - செப்டெம்பர் 2020 |
| 17 | எஸ். ரீ. சத்தியதுமா | வவுனியா | ஆங்கிலம் | பெப்ரவரி 2018 - சனவரி 2021 |
| 18 | ரீ. கார்திகா | யாழ்ப்பாணம் | ஆங்கிலம் | நவம்பர் 2017 - ஒக்தோபர் 2020 |
| 19 | எச். எம். எச். பீ. தயாரத்ன | கேகாலை | ஆங்கிலம் | ஆகஸ்ட் 2017 - ஜுலை 2020 |
| 20 | ஏ. எஸ். டப்ளியு. குணவர்தன | கேகாலை | ஆங்கிலம் | ஆகஸ்ட் 2017 - ஜுலை 2020 |
| 21 | டீ. எல். தம்மிகா | காலி | ஆங்கிலம் | ஜுலை 2018 - மே 2021 |
| 22 | எஸ். சுமங்கலா | யாழ்ப்பாணம் | ஆங்கிலம் | ஜுலை 2018 - யூன் 2021 |
| 23 | எஸ். கரிகரகனபதி | யாழ்ப்பாணம் | ஆங்கிலம் | ஜுலை 2018 - யூன் 2021 |
| 24 | வீ. சிவகுமார் | யாழ்ப்பாணம் | ஆங்கிலம் | ஜுலை 2018 - யூன் 2021 |
| 25 | ரீ. அபிராம் | யாழ்ப்பாணம் | ஆங்கிலம் | ஜுன் 2018 - மே 2021 |
| 26 | எல். ஆர். எஸ். பண்டார | அம்பாறை | ஆங்கிலம் | ஆகஸ்ட் 2018 - ஜுலை 2021 |
| 27 | எஸ். சிவசங்கர் | யாழ்ப்பாணம் | ஆங்கிலம் | ஜுன் 2018 - மே 2021 |
| 28 | பீ. ஜி. எஸ். உதேனி | தங்காலை | ஆங்கிலம் | ஜுன் 2018 - மே 2019 |
| 29 | எம். ஏ. சி. என். பெரேரா | தெஹிவலை | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | மே 2018 - ஏப்ரல் 2021 |
| 30 | டீ. ஏ. அகுரெடிய | தெஹிவலை | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | மார்ச் 2018 - பெப்ரவரி 2021 |
| 31 | என். பீ. விக்கிரமசேகர | காலி | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | நவம்பர் 2017 - ஒக்தோபர் 2020 |
| 32 | டப்ளியு. ஜி. ஜி. சந்திரா | காலி | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | நவம்பர் 2017 - ஒக்தோபர் 2020 |
| 33 | ஏ. நிசான்தினி | வவுனியா | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | ஜுலை 2018 - யூன் 2021 |
| 34 | டீ. எம். எஸ். பி. திசாநாயக்க | கண்டி | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | மார்ச் 2018 - பெப்ரவரி 2021 |
| 35 | எஸ். ஏ. ஜுட் லியோன் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | ஜுலை 2018 - யூன் 2021 |
| 36 | ஏ. எல். ஏ. ரஹ்மான் | சம்மந்துரை | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | நவம்பர் 2017 - ஒக்தோபர் 2020 |
| 37 | ஏ. ஆர். அக்ரம் | அம்பாறை | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | ஒக்டோபர் 2017 - செப்டெம்பர் 2020 |
| 38 | எஸ். பீ. ஜி. எம். அபேரத்ன | கேகாலை | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | திசெம்பர் 2017- நவம்பர் 2020 |
| 39 | யு. டீ. பி. பிரியசாந்த | இரத்தினபுரி | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | ஒக்டோபர் 2017 - செப்டெம்பர் 2019 |
| 40 | பிரதீபா கைலைநாதன் | திருகோணமலை | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | மே 2018 - ஏப்ரல் 2021 |

| | ஆராய்ச்சியாளரின் பெயர் | நிறுவனம் | பாடத்துறை | ஆராய்ச்சிக் கொடுப்பனவு செலுத்தும் கால எல்லை |
|---|---|---|---|---|
| 41 | எச். கே. சி. பி. பெரேரா | பதுளை | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | பெப்ரவரி 2018 - சனவரி 2021 |
| 42 | எஸ். எம். சி. பீ. கே. சமரதுங்க | கொழும்பு | பொறியியல் | மார்ச் 2017 - பெப்ரவரி 2020 |
| 43 | திருமதி. டப்ளியு. ஏ. சுஜீவனி | கொழும்பு | பொறியயல் | ஒக்டோபர் 2017 - செப்டெம்பர் 2019 |
| 44 | ஆர். எம். ஆர். எஸ். டீ. ரத்நாயக்க | கொழும்பு | பொறியயல் | மார்ச் 2017 - பெப்ரவரி 2020 |
| 45 | சீ. ஆர். ரவீந்திரன் | யாழ்ப்பாணம் | பொறியயல் | சனவரி 2017 - திசெம்பர் 2019 |
| 46 | கலாநிதி எஸ். ஜே. எம். சபாயன் | தலைமை அலுவலகம் | பொறியயல் | சனவரி 2017 - மே 2018 |

3 வருட உச்ச கொடுப்பனவு ஒன்றின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற இந்த ஆராய்ச்சிகளின் முன்னேற்றத்தை அறிந்து கொள்வதற்காக சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியாளர்களினால் அரையாண்டிற்கு ஒரு முறை தமது முன்னேற்றத்தை குறிப்பிடுவதற்காக அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஆராய்ச்சி முகாமையாளர் குழு மற்றும் ஆராய்ச்சி கண்காணிப்பு குழு என்பவற்றினால் குறித்த அறிக்கைகளை பரீட்சித்து கொடுப்பனவுகளை தொடர்ச்சியாக எதிர்வரும் காலங்களுக்கு செலுத்துவதற்கான சிபாரிசு மற்றும் அனுமதி என்பன வழங்கப்படுகின்றன. அதற்கு ஏற்ப மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அவ்வாறு ஆராய்ச்சி முகாமைத்துவக் குழு மற்றும் ஆராய்ச்சி கண்காணிப்பு குழு என்பன 2018 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட கால எல்லைகள் பின்வருமாறு.

**அட்டவணை 14 : ஆராய்ச்சி முகாமைத்துவக் குழு**

| திகதி | துறை | மொத்த செலவு (ரூ.) |
|---|---|---|
| 3 சனவரி, 2018 | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | 6,840 |
| 13 யூலை, 2018 | பொறியியல் | 8,010 |
| 24 யூலை, 2018 | தகவல் தொழில்நுட்பம் | 7,790 |
| 25 யூலை, 2018 | ஆங்கிலம் | 7,070 |
| 26 யூலை, 2018 | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | 8,830 |
| 30 யூலை, 2018 | விவசாயம் மற்றும் உணவியல் | 5,730 |
| | | 44,270 |

**அட்டவணை 15 : ஆராய்ச்சி கண்காணிப்புக் குழு**

| திகதி | துறை | மொத்த செலவு (ரூ.) |
|---|---|---|
| 5 சனவரி, 2018 | தகவல் தொழில்நுட்பம் | 16,910 |
| 25 சனவரி, 2018 | விவசாயம் மற்றும் உணவியல் | 17,040 |
| 29 சனவரி, 2018 | ஆங்கிலம் | 17,750 |
| 1 பெப்ரவரி , 2018 | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | 16,830 |
| 13 ஆகஸ்ட், 2018 | பொறியியல் | 12,720 |
| 14 ஆகஸ்ட், 2018 | தகவல் தொழில்நுட்பம் | 12,230 |
| 20 ஆகஸ்ட், 2018 | விவசாயம் மற்றும் உணவியல் | 12,695 |
| 21 ஆகஸ்ட், 2018 | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | 12,620 |
| | | 118,795 |

அட்டவணை 15 : ஆராய்ச்சி கண்காணிப்புக் குழு

| | ஆராய்ச்சியாளரின் பெயர் | உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பெயர் | துறை | பின்னணி தேதி / தொடங்கிய தேதி | ஆராய்ச்சி தலைப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | சி. ஐ. ஈ. ஜயசூரிய | தெஹிவளை | தகவல் தொழில்நுட்பம் | ஜூலை 2018 - யூன் 2021 | தொழில் தேவைகளுடன் கூடிய தொழில்நுட்ப மற்ற திறன்களின் தகுதியை மதிப்பிடுவதற்கான ஆய்வு: இலங்கை உயர் தொழில்நுட்பக்கல்வி நிறுவன தகவல் தொழில்நுட்பக் டிப்ளோமா மாணவர்கள் |
| 2 | என். ஆர். மெத்தகே | தெஹிவளை | தகவல் தொழில்நுட்பம் | மே 2018 - ஏப்ரல் 2021 | மாணவர்களின் சமூக நடத்தை மீது முகப்புத்தகத்தின் தாக்கத்தை ஆராய்தல் |
| 3 | எஸ். தசீனா | அம்பாறை | விவசாயம் | மே 2018 - ஏப்ரல் 2021 | உள்ளூர் மற்றும் ஐரோப்பிய இனங்களில் கால்நடை நோய்களின் பரவல்: கிழக்கு மாகாணம் (உலர் மண்டலம்) ஆகியவற்றில் அதன் ஆதிக்க காரணிகள் மற்றும் அதன் தாக்கங்கள் |
| 4 | எம். சோமதாசன் | திருகோணமலை | ஆங்கிலம் | மே 2018 - ஏப்ரல் 2021 | இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் ஆங்கில டிப்ளோமா பயிலும் மாணவர்களின் வாசிப்பு புரிதல் அறிவை மேம்படுத்துவதற்கான ஒரு புதுமை மற்றும் முறையான கணிப்பீட்டு கருவியை உருவாக்குதல் |
| 5 | எஸ். ரீ. சத்தியதுமா | வவுனியா | ஆங்கிலம் | பெப்ரவரி 2018 - சனவரி 2021 | ஆங்கிலத்தில் மாணவர்களின் செயல்திறனை பாதிக்கும் காரணிகள்: வவுனியா மாவட்டத்தில் கல்வி சாதாரண தர பிரிவு மாணவர்கள் தொடர்பான ஆய்வு |
| 6 | டீ. எல். தம்மிகா | கால | ஆங்கிலம் | யூன் 2018 - மே 2021 | ஆங்கிலத்தில் எழுதுவதை மேம்படுத்துவதற்கான இலக்கியத்தை கற்பதன் தன்மைகள்: காலி உயர் தொழில் நுட்ப கல்வி ஆங்கில டிப்ளோமா மாணவர்கள் தொடர்பான ஆய்வு |
| 7 | எஸ். சுமங்கலா | யாழ்ப்பாணம் | ஆங்கிலம் | ஜூலை - 2018 யூன் 2021 | ஒத்திசைவான கணினி மத்தியஸ்த தொடர்பு மூலம் இரண்டாம் மொழி கற்றல் செயல்முறையை உருவாக்குவது பற்றிய ஆராய்ச்சி |
| 8 | எஸ். கரிகரகனபதி | யாழ்ப்பாணம் | ஆங்கிலம் | ஜூலை - 2018 யூன் 2021 | ஒத்திசைவான கணினி மத்தியஸ்த தொடர்பு மூலம் இரண்டாம் மொழி கற்றல் செயல்முறையை உருவாக்குவது பற்றிய ஆராய்ச்சி |
| 9 | வீ. சிவகுமார் | யாழ்ப்பாணம் | ஆங்கிலம் | ஜூலை - 2018 யூன் 2021 | ஒத்திசைவான கணினி மத்தியஸ்த தொடர்பு மூலம் இரண்டாம் மொழி கற்றல் செயல்முறையை உருவாக்குவது பற்றிய ஆராய்ச்சி |

| | ஆராய்ச்சியாளரின் பெயர் | உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பெயர் | துறை | பின்னணி தேதி / தொடங்கிய தேதி | ஆராய்ச்சி தலைப்பு |
|---|---|---|---|---|---|
| 10 | ரீ. அபிராம் | யாழ்ப்பாணம் | ஆங்கிலம் | யூன் - 2018 மே2021 | ஆங்கில எழுதும் திறனில் பொருள் மற்றும் வினை ஒப்பந்தம் தொடர்பான பிழைகள் பகுப்பாய்வு: யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவன டிப்ளோமா மாணவர்கள் தொடர்பான ஆய்வு |
| 11 | எல். ஆர். எஸ். பண்டார | அம்பாறை | ஆங்கிலம் | ஆகஸ்ட் 2018 - ஜுலை 2021 | உயர் தொழிநுட்ப நிறுவனங்களில் ஆங்கில மொழி திறன் கற்றல்/ கற்பித்தல் செயல்பாட்டில் கணினி தொடர்புடைய வளங்களின் பொருத்தமும் செயல்திறனும் விசாரிக்க ஒரு ஆய்வு |
| 12 | எஸ். சிவசங்கர் | யாழ்ப்பாணம் | ஆங்கிலம் | யூன் - 2018 மே2021 | ஆங்கில எழுதும் திறனில் பொருள் மற்றும் வினை ஒப்பந்தம் தொடர்பான பிழைகள் பகுப்பாய்வு: யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவன டிப்ளோமா மாணவர்கள் தொடர்பான ஆய்வு |
| 13 | பீ. ஜி. எஸ். உதேனி | தங்காலை | ஆங்கிலம் | யூன் 2018 - மே 2021 | அறிக்கையிடப்பட்ட பேச்சு கட்டமைப்புக்களை கற்பிப்பதற்கான தாய் மொழியை பயன்படுத்துவதன் செயல்திறன் தங்காலை உயர் தொழில்நுட்ப நிறுவனம் தொடர்பான ஆய்வு |
| 14 | எம். ஏ. சி. என். பெரேரா | தெஹிவலை | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | மார்ச் 2018 - பெப்ரவரி 2021 | இலங்கை உற்பத்தி நிறுவனத்தில் தர மேலாண்மை நடைமுறைகளை நிறுவனமயமாக்குதல் தொடர்பாக புரிந்துணர்வை உருவாக்கல் குறித்த ஆய்வு |
| 15 | டீ. ஏ. அகுரெடிய | தெஹிவலை | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | மே 2018 - ஏப்ரல் 2021 | மாணவர்களின் சமூக நடத்தை மீது முகப்புத்தகத்தின் தாக்கத்தை ஆராய்தல் |
| 16 | ஏ. நிசான்தினி | வவுனியா | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | ஜுலை 2018 - யூன் 2021 | இலங்கையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் கோப்பறேற் ஆளுமை மற்றும் ஆபத்தை எடுக்கும் நடத்தை |
| 17 | டீ. எம். எஸ். பி. திசாநாயக்க | கண்டி | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | மார்ச் 2018 - பெப்ரவரி 2021 | நிதி செயல்திறனில் நிதி பிறழ்வின் தாக்கம் : கொழும்பு பங்கு சந்தையில் உற்பத்தித் துறை மற்றும் பெருந்தோட்டத் துறை சார்ந்த நிறுவனங்கள் தொடர்பான ஆய்வு |
| 18 | எஸ். ஏ. ஜுட் லியோன் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | ஜுலை - 2018 யூன் 2021 | வாடிக்கையாளர் திருப்தியில் தயாரிப்பு மாற்றத்தின் தாக்கம்: யாழ்குடாநாட்டில் நொக்கியா மற்றும் சம்சங் தொடர்பான ஆய்வு |
| 19 | பிரதீபா கைலைநாதன் | திருகோணமலை | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | மே 2018 - ஏப்ரல் 2021 | இருமொழிக் கல்வியைப் பாதிக்கும் காரணிகள்: திருகோணமலை பிரிவு தொடர்பான ஆய்வு |
| 20 | எச். கே. சி. பீ. பெரேரா | பதுளை | முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் | பெப்ரவரி 2018 - சனவரி 2021 | அரச உயர் கல்வி நிறுவனங்களில் விருந்தோம்பல் முகாமைத்துவ பாடநெறி மாணவர்களுக்கான தொழில் பார்வைகள். |

## பதவியணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவகத்துடன் இணைந்த உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் பணியாற்றுகின்ற கல்விசார் பதவியணியின் உதவி விரிவுரையாளர்களின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் (SOR) பிரகாரம் 100 மணித்தியாலங்கள் உள்ளடக்குகின்ற பதவியணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றில் கலந்து கொள்ளல் வேண்டும். முக்கியமாக இந்த தகைமைகள் தமது பதவியணியை நிரந்தரமாக்குவதற்கு கட்டாயமாக பூர்த்தி செய்ய வேண்டிய பிரதான தேவை ஒன்றாகும். பதவியணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்பதற்கு பிரிவுத் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர்கள்/ கல்வி ஒருங்கிணைப்பு அலுவலர்கள் ஊடாக தலைமை அலுவலகத்திற்கு செய்யப்படுகின்ற வேண்டுகோளை அடிப்படையாகக் கொண்டு தலைமை அலுவலகத்தினால் குறித்த பல்கலைக்கழகத்தின் பதவியணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டப் பிரிவிற்கு எழுத்து மூலம் சம்பந்தப்பட்ட உதவி விரிவுரையாளர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுவதாக அறிவிக்கப்படும். இதற்கான நிதி சார் ஏற்பாடுகளும் கடமை லீவுகளும் குறித்த தரப்பினரின் வேண்டுகோளின் பிரகாரம் வழங்கப்படும். நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததன் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற சான்றிதழின் உறுதிப்படுத்திய பிரதி ஒன்றுடன் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட கடிதத்தை தலைமை அலுவலகத்திடம் ஒப்படைப்பதன் மூலம் தேவை பூர்த்தி செய்யப்படுவதாக கருதப்படும்.

**2018 ஆம் ஆண்டினுள் பதவியணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் பயிலுவதற்காக அனுமதி வழங்கப்பட்ட பதவியணியின் உறுப்பினர்கள் பற்றிய விபரம்**

**அட்டவணை 16 : பதவியணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2018**

| தொடர் இல. | பெயர் | பதவி | உயர் தொழில்நுட்ப நிறுவன / பிரிவு பெயர் | நிலையத்தின் பெயர் | செலவான தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1 | எச். ஜி. பிரகீத் சிந்தக | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. பி. சம்மாந்துரை | கிழக்குப் பல்கலைக்கழகம் | 35,000.00 |
| 2 | பி. எம். எஸ். எஸ். பாலசூரிய | சிரேஷ்ட விரிவுரையாளர் | உ. தொ. நி. குருநாகல் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 40,000.00 |
| 3 | எம். எச். டி. ஏ. எஸ். எஸ். என். மாஸக்கார | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. குருநாகல் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 40,000.00 |
| 4 | ரீ. எம். ஏ. பீ. தென்னகோன் | சிரேஷ்ட விரிவுரையாளர் | உ. தொ. நி. குருநாகல் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 40,000.00 |
| 5 | டப்ளியு. பீ. பி. வர்ணகுலசூரிய | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. குருநாகல் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 40,000.00 |
| 6 | டீ. பீ. கலங்சூரிய | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. காலி | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 40,000.00 |
| 7 | கே. டி. ஏ. பிரணாந்து | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. காலி | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 40,000.00 |
| 8 | கெ. ஜி. தமரி | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. காலி | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 40,000.00 |
| 9 | எம். ஜே. ஆர். எஸ் பிரணாந்து | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. காலி | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 40,000.00 |
| 10 | எஸ். எஸ். வர்ணகுலசூரிய | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. காலி | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 40,000.00 |
| 11 | ஜே. எம். அஸ்ரப் | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. கொழும்பு | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 40,000.00 |

| தொடர் இல. | பெயர் | பதவி | உயர் தொழில்நுட்ப நிறுவன / பிரிவு பெயர் | நிலையத்தின் பெயர் | செலவான தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 12 | ஏ. எச். எப். ஸத்தார் | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. கொழும்பு | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 40,000.00 |
| 13 | துலானி குணரத்ன | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. பி. தங்காலை | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 40,000.00 |
| 14 | எச். ஏ. பீ. அனுசா | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. பி. தங்காலை | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 40,000.00 |
| 15 | ஐ. எச். பீ. என். சேனாதீர | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. பி. இரத்தினபுரி | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 40,000.00 |
| 16 | டீ. எம். ஆர். எல். எஸ். புஷ்பகுமார | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. பதுளை | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 40,000.00 |
| 17 | ஏ. எச். எம். அஸாம் | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. பி. மட்டக்களப்பு | கிழக்குப் பல்கலைக்கழகம் | 35,000.00 |
| 18 | யு. எல். எம். முபாரக் | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. அம்பாறை | கிழக்குப் பல்கலைக்கழகம் | 35,000.00 |
| 19 | வி. எம் .ஹரீந்திர | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. பி. மட்டக்களப்பு | கிழக்குப் பல்கலைக்கழகம் | 35,000.00 |
| 20 | எஸ். டேலிமா | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. பி. மட்டக்களப்பு | கிழக்குப் பல்கலைக்கழகம் | 35,000.00 |
| 21 | பீ. பிரபுராஜ் | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. பி. மட்டக்களப்பு | கிழக்குப் பல்கலைக்கழகம் | 35,000.00 |
| 22 | யோஹராஜா அச்சுத்தன் | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. பி. வவுனியா | யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் | 33,000.00 |
| 23 | ஜே. சத்தியத்துமா | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. பி. வவுனியா | யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் | 33,000.00 |
| 24 | ஏ. நிஷாந்தினி | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. பி. வவுனியா | யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் | 33,000.00 |
| 25 | பி. கம்சத்வதி | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. பி. வவுனியா | யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் | 33,000.00 |
| 26 | ஆர். ஜே. மொஹான்குரூஸ் | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. பி. மன்னார் | யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் | 33,000.00 |
| 27 | எஸ். வாசுகீ | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் | 33,000.00 |
| 28 | எம். கீதனன் | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் | 33,000.00 |
| 29 | எஸ். ஏ. ஜூட்லியோன் | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் | 33,000.00 |
| 30 | எம். பி. நௌசாட் | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. பி. சம்மாந்துரை | இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம் | 25,000.00 |
| 31 | எஸ். வில்பட் | உதவி விரிவுரையாளர் | உ. தொ. நி. திருகோணமலை | களனி பல்கலைக்கழகம் | 40,000.00 |

## உயர் தேசிய டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்கு NVQ 6 மட்டத்தை அடைந்து கொள்ளல்

உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிகளுக்கு NVQ 6 வது மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா, உயர் தேசிய தொழில்நுட்ப (விவசாய) டிப்ளோமா, உயர் தேசிய உணவுத் தொழில்நுட்ப டிப்ளோமா மற்றும் உயர் தேசிய பொறியியல் (சிவில்/ இயந்திரவியல்/ மின் மற்றும் மின் அணு) டிப்ளோமா பாடநெறிகளின் கற்பித்தல் பணிகளில் ஈடுபடுகின்ற கல்விசார் பதவியணி, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு என்பவற்றுடன் அடிக்கடி தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டு நானாவிதக் கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் என்பன நடாத்தப்பட்டன. அதன் பயனாக மேற்குறிப்பிட்ட அனைத்து பாடநெறிகளுக்கும் 2018 ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி NVQ - 6 மட்டத்தினை வழங்குவதற்கு தேசிய பயிலுநர் மற்றும் தொழில்பயிற்சி அதிகார சபையின் சிபாரிசு கிடைக்கப் பெற்றுள்ளது.

## மஹபொல புலமைப் பரிசில்

மஹபொல புலமைப் பரிசில் வழங்கல் – 2016/ 2017

உயர் தேசிய டிப்ளோமா பாடநெறியை பயிலுவதற்காக முழு நேர மாணவர்களாக இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் கீழ் காணப்படுகின்ற உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் மற்றும் பிரிவுகளில் பதிவு செய்து கொண்டுள்ள சகல மாணவர்களும் மஹபொல புலமைப் பரிசிலுக்காக விண்ணப்பிப்பதற்கான உரிமை பெறுகின்றனர். தற்போது மஹபொல புலமைப் பரிசிலாக எமது நிறுவனத்திற்கு ஒதுக்கியுள்ள தொகையானது வருடம் ஒன்றுக்கு 1500 ஆகும். ஒரு தவணைக்கு ரூ. 1500 வீதம் தகைமை பெறுகின்ற மாணவ மாணவிகள் 1500 பேருக்கு இது வழங்கப்படுகின்றது. மேலும் ஒரு கல்வியாண்டிற்கு தொடர்ச்சியாக 9 தவணைகள் மஹபொல புலமைப் பரிசில் வழங்கப்படும்.

மஹபொல புலமைப் பரிசிலுக்கு தகைமை பெறுகின்ற மாணவ மாணவிகள் பற்றிய தகவல்களின் இறுதி ஆவணமானது இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் தயாரிக்கப்படும். 2017 ஆம் ஆண்டு வரை மஹபொல பரிசில் பெற்றுக் கொள்வதற்காக தகைமை பெறுவோரை தெரிவு செய்யும் முறையானது, தேவை குறிகாட்டியின் தேர்ந்தெடுத்தல் நடைமுறைக்கு அமையவாகும். எனினும் அந்த தெரிவு செய்தல் முறைமையானது தற்காலத்திற்கு பொருத்தமற்றதாக காணப்படுவதனால் 2018 பெப்ரவரி 14 ஆம் திகதி மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நிதியத்துடன் நடைபெற்ற குழுக் கூட்டத்தின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பின்பற்றுகின்ற நடைமுறையை அவ்வாறே இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் மாணவர்களுக்கும் பயன்படுத்துவதாக தீர்மானிக்கப்பட்டது.

இதன் போது உள்ளகக் குழுவொன்றை நியமித்து உரிய அனுமதியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் உரிய நடைமுறையினை அடிப்படையாகக் கொண்டு 2018 ஆம் ஆண்டு முதல் அமுலுக்கு வரும் வகையில் புதிய முறைமை இனங்காணப்பட்டுள்ளது. அவ்வாறே தற்போது அதாவது, 2018 ஆண்டு முதல் மஹபொல தகவல்கள் தன்னியக்க முறையில் கணனி மயப்படுத்தி பெற்றுக் கொள்ளப்படுகின்றது. அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் தரவுகளின் பிரகாரம் குறைந்த வருமானம் பெறும் மாணவர்கள் 1500 பேரிற்கு இப்புலமைப் பரிசிலைப் பெற்றுக் கொடுப்பதற்கு தயாரிக்கப்பட்ட ஆவணம் மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நிதியத்திடம் ஒப்படைக்கப்படும்.

2018 ஆம் கல்வியாண்டினுள் மஹபொல புலமைப் பரிசில் பெறுவதற்கு தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் பாடநெறிகள் மற்றும் நிறுவன அடிப்படையில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அட்டவணை 17 : மஹாபொல சுருக்கத் தகவல்கள் - 2018

| | | உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா | உயர் தொழில் முயற்சி அபிவிருத்தி டிப்ளோமா | உயர் தேசிய தொழில்முயற்சி நிதிசார் டிப்ளோமா | உயர் தேசிய கட்டிட சேவைகள் பொறியியல் டிப்ளோமா | உயர் தேசிய நுகர்வியல் மற்றும் உற்பத்தித் தொழில்நுட்பப் டிப்ளோமா | உயர் தேசிய பொறியியல் (சிவில்) டிப்ளோமா | உயர் தேசியபொறியியல் (மின் மற்றும் மின்னியல்) டிப்ளோமா | உயர் தேசிய பொறியியல் (இயந்திரவியல்) டிப்ளோமா | உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா | உயர் தேசிய உணவு தொழில்நுட்ப டிப்ளோமா | உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா | உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா | உயர் தேசிய கருத்திட்ட முகாமைத்துவ டிப்ளோமா | உயர் தேசிய அளவையியல் டிப்ளோமா | உயர் தேசிய தொழில்நுட்பம் (விவசாயம்) டிப்ளோமா | உயர் தேசிய சுற்றுலா நலனோம்பல் முகாமைத்துவ டிப்ளோமா | புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அம்பாறை | 55 | | | | | | | | 43 | | 58 | 39 | | | 47 | 25 | 267 |
| 2 | அநுராதபுரம் | 15 | | | | | | | | 10 | | 13 | | | | | 2 | 40 |
| 3 | பதுளை | 18 | | | | | | | | 12 | | 7 | 20 | | | | 13 | 70 |
| 4 | மட்டக்களப்பு | 14 | | | | | | | | 9 | | 9 | | | | | 7 | 39 |
| 5 | கொழும்பு | | | | 8 | | 38 | 27 | 22 | | | | | | 13 | | | 108 |
| 6 | தெஹிவலை | 32 | 35 | 29 | | | | | | 18 | | 29 | 29 | | | | 32 | 204 |
| 7 | காலி | 28 | 15 | | | | 35 | 25 | 26 | 13 | | 32 | 30 | | 23 | 27 | 18 | 272 |
| 8 | கம்பஹா | 6 | | | | 18 | | | | | 16 | 5 | | | | 7 | | 52 |
| 9 | யாழ்ப்பாணம் | 21 | | | | | 26 | 31 | | 4 | | 9 | 11 | | 22 | | 2 | 126 |
| 10 | கண்டி | 7 | 8 | | | | | | | 5 | | 3 | 8 | | | | 12 | 43 |
| 11 | கேகாலை | 10 | | | | | | | | 3 | | 5 | | 11 | | | | 29 |
| 12 | குருநாகல் | 14 | | | | | | | | 7 | | 6 | 15 | | | | 5 | 47 |
| 13 | மன்னார் | | | | | | | | | 4 | | 7 | | | | | | 11 |
| 14 | நாவலப்பிட்டி | | | | | | | | | 8 | | | 1 | | | | 3 | 12 |
| 15 | இரத்தினபுரி | 12 | | | | | | | | 10 | | 13 | | | | | | 35 |
| 16 | சம்மாந்துரை | 9 | | | | | | | | 8 | | 6 | | | | | | 23 |
| 17 | தங்காலை | 18 | | | | | | | | 10 | | 7 | | | | | | 35 |
| 18 | திருகோணமலை | 10 | | | | | | | | 14 | | 8 | | | | | 4 | 36 |
| 19 | வவுனியா | 22 | | | | | | | | 13 | | 16 | | | | | | 51 |
| | | 291 | 58 | 29 | 8 | 18 | 99 | 83 | 48 | 191 | 16 | 233 | 153 | 11 | 58 | 81 | 123 | 1500 |

## நூலக அலுவல்களின் முன்னேற்றம்

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவுனத்தின் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் அனைத்து உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் என்பவற்றில் நூலக வசதிகளை ஏற்படுத்துவதற்காக புதிய வேலைத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டது. அதன் போது நூலக தன்னியக்க முறைமையை அமுல்படுத்துவதற்கு தேவையான வசதிகள் மற்றும் மனிதவள அபிவிருத்தி என்பவற்றுடன் பௌதீக வளங்களை கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் நூலக தன்னியக்க முறைமை “ KOHA” கருத்திட்டம் எனும் பெயரில் இயங்கி வருவதுடன் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் உள்ள மொத்த நூல்களின் எண்ணிக்கையில் சுமார் 60% அளவில் இம்முறைமையினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. தற்போது பல நிறுவனங்கள் மாணவர் அடையாள அட்டையினை பார்கோர்ட் இலக்கத்துடன் வழங்கி வருகின்றன. மேலும், 2018 ஆம் ஆண்டிலே தன்னியக்க முறைமையினை செயற்படுத்துவதற்காக நூலக வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு கணினிகள், கணினி கதிரைகள் மற்றும் மேசைகள் என்பவற்றினை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 2019 ஏப்ரல் 30 க்குள் இருக்கின்ற நூலக புத்தகங்கள்

| உயர் தொழில்நுட்ப நிறுவனம் / பிரிவு | இருக்கின்ற நூலக புத்தகங்கள் | KOHA கணினியில் செருகப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| காலி | 13563 | 11478 |
| மட்டக்களப்பு | 2750 | 1532 |
| கொழும்பு | 10877 | 10796 |
| திருகோணமலை | 3021 | 3021 |
| கேகாலை | 3985 | 3557 |
| கண்டி | 11582 | 11425 |
| குருநாகல் | 7908 | 6960 |
| பதுளை | 9465 | 9184 |
| அநுராதபுரம | 1874 | 1665 |
| இரத்தினபுரி | 1765 | 1765 |
| நாவலப்பிட்டி | 473 | 463 |
| கம்பஹா | 5523 | 5523 |
| அம்பாறை | 8606 | 8606 |
| தெஹிவலை | 7600 | 5963 |
| யாழ்ப்பாணம் | 7637 | - |
| தங்காலை | 1232 | 1130 |
| வவுனியா | 475 | 470 |
| சம்மாந்துரை | 1765 | - |

## பரீட்சைகள் பிரிவு

பரீட்சைகள் நிருவாகம்

1995 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவன சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் 2018 ஆம் ஆண்டிலே பரீட்சைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் மதிப்பீடு ஆகிய பணிகள் பரீட்சைகள் பிரிவினால் தயாரிக்கும் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

2018 தொழிற்பாட்டு திட்டத்தின் பிரகாரம் 2018 செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி 2018 ஒக்டோபர் 12 ஆம் திகதி வரையில் அனைத்து பாடநெறிகளுக்குமுரிய பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 18: நடாத்தப்பட்ட பரீட்சைகள் பற்றிய விபரம்**

| | பாடநெறியின் பெயர் | மொழி மூலம் | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா | ஆங்கிலம் | 16 |
| 2 | உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா | | 8 |
| 3 | உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா | | 17 |
| 4 | உயர் தேசிய தொழில்முயற்சிகள் நிருவாக டிப்ளோமா | | 3 |
| 5 | உயர் தேசிய தொழில்முயற்சிகள் நிதியியல் டிப்ளோமா | | 1 |
| 6 | உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா | | 17 |
| 7 | உயர் தேசிய தொழில்நுட்ப (விவசாயம்) டிப்ளோமா | | 3 |
| 8 | உயர் தேசிய உணவு தொழில்நுட்ப டிப்ளோமா | | 1 |
| 9 | உயர் தேசிய சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ டிப்ளோமா | | 12 |
| 10 | உயர் தேசிய நுகர்வோர் அலுவல்கள் மற்றும் உற்பத்தி தொழில்நுட்ப டிப்ளோமா | | 1 |
| 11 | உயர் தேசிய கருத்திட்ட முகாமைத்துவ டிப்ளோமா | | 1 |
| 12 | உயர் தேசிய பொறியியல் (சிவில்) டிப்ளோமா | | 3 |
| 13 | உயர் தேசிய பொறிறயியல் (மின்னியல் / இலத்திரனியல்) டிப்ளோமா | | 3 |
| 14 | உயர் தேசிய பொறியியல் (இயந்திரவியல்) டிப்ளோமா | | 2 |
| 15 | உயர் தேசிய கட்டிட சேவைகள் பொறியியல் சார் டிப்ளோமா | | 1 |
| 16 | உயர் தேசிய அளவையியல் டிப்ளோமா | | 3 |

முதல் அரையாண்டின் மதிப்பீட்டு செயற்பாடுகள் 04 வாரத்தினுள் பூர்த்தி செய்யப்பட்டு பெறுபேறுகளை 02 மாதங்களில் வெளியிடுவதற்கு பரீட்சைகள் பிரிவினால் முடிந்துள்ளது.

சுருக்கமாக எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் 2018 ஆண்டிற்காக வெளியிடப்பட்ட வேலைத்திட்டத்தின் பிரகாரம் பரீட்சைகள் பிரிவானது தமது இலக்கை அடைந்துள்ளது.

## பரீட்சை பெறுபேறுகளின் சுருக்கம்

**அட்டவணை 19: 1 ஆவது அரையிறுதி பரீட்சை பெறுபேறுகளின் சுருக்கம் (1 ஆவது முறையாகத் தோற்றுதல்)**

| ஆண்டு | முழு நேர/ பகுதி நேர | மொத்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | பரீட்சைக்குத் தோற்றியோர் எண்ணிக்கை | சகல பாடங்களிலும் சித்தி பெற்றவர்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யாத | வருகைத் தராத | சித்தி வீதம் % |
|---|---|---|---|---|---|---|---|
| உயர் தேசிய கணக்கியல் டிப்ளொமா | | | | | | | |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 1479 | 1372 | 860 | 512 | 107 | 62.68 |
| | பகுதி நேர | 1134 | 997 | 390 | 607 | 137 | 39.12 |
| | **மொத்தம்** | **2613** | **2369** | **1250** | **1119** | **244** | **52.76** |
| 2 ஆம் வருடம் | முழு நேர | 1669 | 1553 | 1101 | 452 | 116 | 70.9 |
| | பகுதி நேர | 1084 | 905 | 423 | 482 | 179 | 46.74 |
| | **மொத்தம்** | **2753** | **2458** | **1524** | **934** | **295** | **62** |
| 3 ஆம் வருடம் | முழு நேர | 1077 | 981 | 490 | 491 | 96 | 49.95 |
| | பகுதி நேர | 540 | 437 | 156 | 281 | 103 | 35.7 |
| | **மொத்தம்** | **1617** | **1418** | **646** | **772** | **199** | **45.56** |
| 4 ஆம் வருடம் | முழு நேர | 736 | 713 | 563 | 150 | 23 | 78.96 |
| | பகுதி நேர | 227 | 218 | 152 | 65 | 9 | 69.72 |
| | **மொத்தம்** | **963** | **931** | **715** | **215** | **32** | **76.8** |
| **மொத்தம்** | | **7946** | **7176** | **4135** | **3040** | **770** | **57.62** |
| உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா | | | | | | | |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 746 | 708 | 273 | 435 | 38 | 36.4 |
| 2 ஆம் வருடம் | முழு நேர | 713 | 688 | 356 | 332 | 25 | 49.1 |
| 3ஆம் வருடம் | முழு நேர | 405 | 392 | 243 | 149 | 13 | 54.6 |
| **மொத்தம்** | | **1864** | **1788** | **872** | **916** | **76** | **48.77** |
| உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா | | | | | | | |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 1474 | 1405 | 559 | 846 | 69 | 39.79 |
| | பகுதி நேர | 1079 | 998 | 335 | 663 | 81 | 33.57 |
| | **மொத்தம்** | **2553** | **2403** | **894** | **1509** | **150** | **37.2** |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 1442 | 1347 | 771 | 576 | 95 | 57.24 |
| | பகுதி நேர | 1038 | 949 | 510 | 439 | 89 | 53.74 |
| | **மொத்தம்** | **2480** | **2296** | **1281** | **1015** | **184** | **55.79** |
| **மொத்தம்** | | **5033** | **4699** | **2175** | **2524** | **334** | **46.29** |

| ஆண்டு | முழு நேர/ பகுதி நேர | மொத்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | பரீட்சைக்குத் தோற்றியோர் எண்ணிக்கை | சகல பாடங்களிலும் சித்தி பெற்றவர்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யாத | வருகைத் தராத | சித்தி வீதம் % |
|---|---|---|---|---|---|---|---|
| உயர் தேசிய தொழில்முயற்சிகள் நிருவாக டிப்ளோமா | | | | | | | |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 230 | 223 | 92 | 131 | 7 | 38.5 |
| 2 ஆம் வருடம் | முழு நேர | 191 | 185 | 120 | 65 | 6 | 64.3 |
| **மொத்தம்** | | **421** | **408** | **212** | **196** | **13** | **51.96** |
| உயர் தேசிய தொழில்முயற்சிகள் நிதியியல் டிப்ளோமா | | | | | | | |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 109 | 104 | 59 | 45 | 5 | 56.73 |
| 2 ஆம் வருடம் | முழு நேர | 88 | 86 | 65 | 21 | 2 | 75.58 |
| **மொத்தம்** | | **197** | **190** | **124** | **66** | **7** | **65.26** |
| உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா | | | | | | | |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 1343 | 1249 | 408 | 841 | 94 | 32.67 |
| | **மொத்தம்** | 449 | 342 | 69 | 273 | 107 | 20.18 |
| | **එකතුව** | **1792** | **1591** | **477** | **1114** | **201** | **29.98** |
| 2 ஆம் வருடம் | முழு நேர | 1131 | 1062 | 255 | 807 | 69 | 24 |
| | **மொத்தம்** | 330 | 283 | 50 | 233 | 47 | 18 |
| | **மொத்தம்** | **1461** | **1345** | **305** | **1040** | **116** | **23** |
| **மொத்தம்** | | **3253** | **2936** | **782** | **1230** | **1241** | **26.63** |
| உயர் தேசிய தொழில்நுட்ப (விவசாயம்) டிப்ளோமா | | | | | | | |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 284 | 264 | 60 | 204 | 20 | 23.27 |
| 2 ஆம் வருடம் | முழு நேர | 327 | 312 | 107 | 205 | 15 | 38.08 |
| **மொத்தம்** | | **611** | **576** | **167** | **409** | **35** | **28.99** |
| உயர் தேசிய உணவு தொழில்நுட்ப டிப்ளோமா | | | | | | | |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 77 | 70 | 39 | 31 | 7 | 55.71 |
| 2 ஆம் வருடம் | முழு நேர | 59 | 52 | 24 | 28 | 7 | 46.15 |
| **மொத்தம்** | | **136** | **122** | **63** | **59** | **14** | **51.64** |
| உயர் தேசிய சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ டிப்ளோமா | | | | | | | |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 644 | 574 | 108 | 461 | 70 | 18.7 |
| 2 ஆம் வருடம் | முழு நேர | 525 | 501 | 230 | 266 | 24 | 48.42 |
| 3 ஆம் வருடம் | முழு நேர | 180 | 177 | 139 | 38 | 3 | 77.69 |
| **மொத்தம்** | | **1349** | **1252** | **477** | **765** | **97** | **38.10** |

| ஆண்டு | முழு நேர/ பகுதி நேர | மொத்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | பரீட்சைக்குத் தோற்றியோர் எண்ணிக்கை | சகல பாடங்களிலும் சித்தி பெற்றவர்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யாத | வருகைத் தராத | சித்தி வீதம் % |
|---|---|---|---|---|---|---|---|
| உயர் தேசிய நுகர்வோர் அலுவல்கள் மற்றும் உற்பத்தி தொழில்நுட்ப டிப்ளோமா | | | | | | | |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 98 | 98 | 20 | 78 | 0 | 20.41 |
| 2 ஆம் வருடம் | முழு நேர | 41 | 41 | 20 | 21 | 0 | 48.78 |
| **மொத்தம்** | | **139** | **139** | **40** | **99** | **0** | **28.78** |
| உயர் தேசிய கருத்திட்ட முகாமைத்துவ டிப்ளோமா | | | | | | | |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 63 | 61 | 2 | 59 | 2 | 3.28 |
| **மொத்தம்** | | **63** | **61** | **2** | **59** | **2** | **3.28** |
| உயர் தேசிய பொறியியல் (சிவில்) டிப்ளோமா | | | | | | | |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 275 | 259 | 61 | 198 | 16 | 23.55 |
| 2 ஆம் வருடம் | முழு நேர | 276 | 257 | 138 | 119 | 19 | 53.7 |
| 4 ஆம் வருடம் | முழு நேர | 255 | 255 | 224 | 31 | 0 | 87.84 |
| **மொத்தம்** | | **806** | **771** | **423** | **348** | **35** | **54.86** |
| உயர் தேசிய பொறிறயியல் (மின்னியல் / இலத்திரனியல்) டிப்ளோமா | | | | | | | |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 274 | 255 | 96 | 159 | 19 | 37.65 |
| 2 ஆம் வருடம் | முழு நேர | 243 | 220 | 70 | 150 | 23 | 31.82 |
| 4 ஆம் வருடம் | முழு நேர | 233 | 231 | 175 | 56 | 2 | 75.76 |
| **மொத்தம்** | | **750** | **706** | **341** | **365** | **44** | **48.3** |
| உயர் தேசிய பொறியியல் (இயந்திரவியல்) டிப்ளோமா | | | | | | | |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 163 | 153 | 19 | 134 | 10 | 12.42 |
| 2 ஆம் வருடம் | முழு நேர | 177 | 173 | 64 | 109 | 4 | 36.99 |
| 4 ஆம் வருடம் | முழு நேர | 157 | 157 | 145 | 12 | 0 | 92.36 |
| **மொத்தம்** | | **497** | **483** | **228** | **255** | **14** | **47.2** |
| உயர் தேசிய கட்டிட சேவைகள் பொறியியல் சார் டிப்ளோமா | | | | | | | |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 30 | 28 | 4 | 24 | 2 | 14.29 |
| 2 ஆம் வருடம் | முழு நேர | 37 | 36 | 19 | 17 | 1 | 52.78 |
| 4 ஆம் வருடம் | முழு நேர | 37 | 37 | 34 | 3 | 0 | 91.89 |
| **மொத்தம்** | | **104** | **101** | **57** | **44** | **3** | **56.44** |
| உயர் தேசிய அளவையியல் டிப்ளோமா | | | | | | | |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 183 | 166 | 75 | 91 | 17 | 45.18 |
| 1 ஆம் வருடம் | முழு நேர | 182 | 173 | 83 | 90 | 9 | 47.98 |
| **மொத்தம்** | | **365** | **339** | **158** | **181** | **26** | **46.61** |

## முகாமைத்துவ தகவல் முறைமை பிரிவு

### அறிமுகம்

தகவல் முறைமையானது, தற்போது வர்த்தக உலகில் சக்திமிக்க ஒன்றாக காணப்படுகின்றது. நிறுவனம் ஒன்றினை மிகவும் வினைத்திறனாக இயக்குவதற்கு முகாமைத்துவ தகவல் முறைமை இன்றியமையாததாக காணப்படுகின்றது. முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் அதனூடாக வழங்கப்படுகின்ற தகவல்கள் என்பன பொதுவாக வினைத்திறனான மற்றும் நியாயமான நிறுவனசார் தீர்மானங்களுக்கு அத்தியவசியமான ஒன்றாக அறிமுகப்படுத்தப்படுகின்றது.

### இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் முகாமைத்துவ தகவல் முறைமைப் பிரிவின் வரைவிலக்கணம்

நிறுவனத்தின் தொழிற்பாடு, முகாமைத்துவம் மற்றும் துறை சார் பணிகளுக்கு உதவும் பொருட்டு கணனிமயப்படுத்திய உள்ளீட்டு மற்றும் வலயமைப்பு முறைமை என்றழைக்கப்படுகின்றது.

### முகாமைத்துவ தகவல் முறைமைகள் பிரிவின் நோக்கு

அரச துறையின் சிறந்த CMMI / ISO தரச் சான்றிதழைப் பெற்ற முகாமைத்துவ தகவல் முறைமைகள் திணைக்களம்/ அலகு ஆக மாறுதல்

### முகாமைத்துவ தகவல் முறைமைகள் பிரிவின் செயற்பணி

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தினுள் உயர் நற்தன்மைமிக்க தொழிற்பாடுகள், முகாமைத்துவம், ஆராய்ச்சி மற்றும் கல்விசார் இயலுமையை விருத்தி செய்வதற்காக தொழில்நுட்ப சேவைகள் மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றினை பெற்றுக் கொடுப்பதற்கு முகாமைத்துவ தகவல் முறைமைகள் பிரிவு எப்போதும் அர்ப்பணித்துள்ளது.

### முகாமைத்துவ தகவல் முறைமைகள் பிரிவின் நோக்கம்

இப்பிரிவின் பிரதான நோக்கமாக அமைவது, இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தை திட்டமிடல், ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் நற்தன்மைமிக்க, சரியான, காலத்திற்கு பொருத்தமான கணனி மயப்படுத்திய தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதாகும். முகாமைத்துவ தகவல் முறைமைகள் பிரிவானது, இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தகவல்கள் மற்றும் தரவுகள் என்பவற்றையும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பரந்தளவிலான செலவிடும் தொகைக்கு பயன்மிக்க முறையில் அறிக்கையிடல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் உள்ளிட்ட பொறுப்புக்களுக்கு கட்டுப்பட்டு இயங்கி வருகின்றது.

## <u>2018 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட பிரதான தொழிற்பாடுகள்</u>

- இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் இணையத்தளத்திற்கு நுழைகின்ற மில்லியன் கணக்கானவர்களுடன் புதிய முறையொன்றினை நோக்கி




- பேஸ்புக், யூ டியுப், லின்க் டின், டுவிட்டர் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களை உள்ளடக்குதல்



➢ பரீட்சை பெறுபேறுகள் தயாரிப்பு முறைமை










➢ இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் விரிவுரைகளை பிரசுரிக்கும் முறைமையினை அபிவிருத்தி செய்தல்



➢ இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் மாணவர் முகாமைத்துவ முறைமையை செயற்படுத்துதல் (இணைய முகவரி - http://student.sliate.ac.lk)




➢ கூகுள் மேக பிரதேசத்தில் G-Suit இன் கீழ் புதிய மின்னஞ்சல் சேவை வழங்கல்

➢ இணையம், நூலகம் மற்றும் கற்றல் முகாமைத்துவ முறைமையை மேக பிரதேசத்தினுள் நுழையச் செய்தல்.

➢ இலங்கையின் உயர்கல்வி கற்கைத் துறையில் முதல் முறையாக இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் இணையத்தளத்தில் விளம்பரப்படுத்தல்களை மேற்கொள்ளல்.

➢ மஹபொல புலமைப் பரிசிலுக்கான விண்ணப்பிக்கும் முறையொன்றினை தயாரித்தல்.

➢ டிப்ளோமா வழங்கும் விழாவின் போது மாணவர்களின் பெயர்களை டிஜிட்டல் திரையில் காட்சிப்படுத்தும் வகையில் வரிசை முகாமைத்துவ உள்ளீட்டினை நிர்மாணித்தல்.

➢ கூகுள் உள்ளீடுகளைப் பயன்படுத்துவதற்காக 160 நபர்களுக்கு அது பற்றிய செயலமர்வு ஒன்றின் ஊடாக பயிற்சி வசதியளித்தல்.

(ஆவணம், புரஜெக்டர், பயணி, மாதிரி என்பன) வழங்கல்.

➢ இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற ஆராய்ச்சி செயலமர்வுகளுக்கான ஆராய்ச்சிப் பத்திரங்களை ஒன்றுதிரட்டும் பொருட்டு இணையத்தளம் ஒன்றினை உருவாக்குதல். (sliate.ac.lk/s2018)

**முகாமைத்துவ தகவல் முறைமைகள் பிரிவில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தொழிற்பாடுகள்**

- பதவியணியின் அந்தரங்கக் கோப்புக்களை முகாமைத்துவம் செய்யும் முறைமை ஒன்றினை அபிவிருத்தி செய்தல்.
- இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திற்கு சொத்துக்கள் முகாமைத்துவத்தை உருவாக்குதல்.

## நிருவாகப் பிரிவு

**பிரிவின் நோக்கம்**

நிருவாகப் பிரிவின் நோக்கமாக அமைவது, வலுவாதார அபிவிருத்திக்காக இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் பௌதீக மற்றும் மனிதவள முகாமைத்துவத்தை மேற்கொள்வதாகும்.

**அறிமுகம்**

இலங்கையின் நானாவிதப் பிரதேசங்கள் உள்ளடக்கப்படும் வகையில் தற்போது 11 உயர் தொழில்நுட்ப நிறுவனங்களும் மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரிவுகள் 08 உம் நாடளாவிய ரீதியில் இயங்கி வருவதுடன் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் அனைத்து உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரிவுகள், உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கீழான முறைமைக்கு தரம் உயர்த்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இதுவரையில் ஏறத்தாழ 30,000 மாணவ மாணவிகளுக்கு இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனமானது பல்வேறு பாடநெறிகளை பயிலுவதற்கு ஒத்துழைப்பை வழங்கியுள்ளது.

அனைத்து உயர் தொழில்நுட்ப நிறுவனக் கட்டிடங்கள், வாகனங்கள், செயலமர்வுகள், ஆய்வுகூடங்கள், பண்ணைகள், கணனி மற்றும் ஏனைய வசதிகளை உள்ளடக்கியுள்ளது.

உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவனப் பிரிவுகள் என்பவற்றின் ஒத்துழைப்புடன் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் நிருவாகப் பிரிவானது சகல பௌதீக மற்றும் மனிதவள முகாமைத்துவப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. சகல விதமான பராமரிப்புப் பணிகள், புனர்வாழ்வு, பழுதுபார்த்தல், நிர்மாணம், பெறுகை பணிகள் மற்றும் ஏனைய தொடர்புடைய செயற்பாடுகள் இப்பிரிவின் பணிகளில் அடங்கும்.

மனித வள முகாமைத்துவமானது, எந்தவொரு நிறுவனத்தினதும் வெற்றித் தன்மைக்கு தாக்கம் செலுத்துகின்ற முக்கிய ஒரு விடயமாகும். பதவியணி உறுப்பினர்களின் எண்ணிக்கை 625 ஆகக் காணப்படுகின்ற இந்நிறுவனத்தின் முறைமையானது சிரேட்ட முகாமையாளர்கள்/ கல்வி மற்றும் கல்விசாரா பதவியணி, சிற்றூழியர் பதவியணி என்றவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| (3) | **<u>வருகை குறிப்புக்கள்</u>**<br><br>பரீட்சை காலப் பகுதியில் விரிவுரையாளர்களின் வருகை பற்றிய குறிப்புக்களை பதிவதற்கான பொதுவான முறைமை ஒன்று காணப்படாமை தெரிய வந்தது. ஒரு சில நிறுவனங்களில் வருகை பற்றிய குறிப்புக்களை பதிவதற்காக விரல் அடையாள இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதுடன் மேலும் சில நிறுவனங்களில் நாட்குறிப்பு முறைமை பயன்படுத்தப்படுகின்றது.<br><br>இது பற்றி கல்விக் குழுவிலே கலந்துரையாடி பொதுவான முறை ஒன்றினை கடைபிடித்தல் வேண்டும் என கூறப்பட்டது. நாட்குறிப்பினை பயன்படுத்துவதாயின் அது வெளிப்படையாக இருத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டது. பணிப்பாளரினால் (பரீட்சைகள்) முறையான வருகை பற்றிய ஆவணம் ஒன்றை ஈடுபடுத்துவதாக இணக்கம் தெரிவிக்கப்பட்டது.<br><br>எவ்வாறாயினும், விரல் அடையாள குறிப்புக்களை கொடுப்பனவிற்காக கட்டாயமாக்கப்படுதல் வேண்டும் எனவும் நாட்குறிப்பு முறை பரீட்சை பணிகளுக்காக கட்டாயம் எனவும் குறிப்பிடப்பட்டது. | 2018/03(79)<br>2018/02(78)<br>2018/01(77) |

| இலக்கம் | கணக்காய்வு விசாரணைகள் | கலந்துரையாடிய குழுக் கூட்டங்கள் |
|---|---|---|
| (4) | **<u>விரிவுரை அறிக்கைகள்</u>**<br><br>அதிகமான உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் விரிவுரை அறிக்கைகளை உரியவாறு பிரிவுத் தலைவர்களினாலும் பணிப்பாளர்களினாலும் பரீட்சிக்கப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக அதிகமான கணக்காய்வு விசாரணைகள் எழுந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது.<br><br>குழுவின் தலைவர் பொருத்தமான முறைமையொன்றினை இதற்காக பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்கினார். மேலும் இதற்காக மென்பொருள் பெகேஜ் ஒன்றினை பயன்படுத்துமாறும், அனைத்துப் பணிப்பாளர்களும் மற்றும் பதிவாளர்களும் இதில் பங்கேற்க வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கினார். | 2018/03(79)<br>2018/02(78)<br>2018/01(77) |
| (5) | **<u>நூலக தன்னியக்க முறைமை</u>**<br><br>2016 ஆம் ஆண்டு முதல் நிறுவனமானது இந்த நூலக தன்னியக்க முறைமைக்கான தரவுகளை உள்ளீடு செய்து வருவதுடன் இது வரையில் அப்பணி பூர்த்தி செய்யப்படவில்லை என தெரியவந்தது.<br><br>குழுவினால் அடுத்துவரும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பான அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்குமாறு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டது.<br><br>தற்போது அதில் ஏறத்தாழ 60% அளவிலான செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | 2018/03(79)<br>2018/02(78)<br>2018/01(77) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | HED/A/SLIATE/FA/18 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2019 யூன் 28 |

பணிப்பாளர் நாயகம்,

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம்.

**இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1995 இன் 29 ஆம் இலக்க இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவன அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க

உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை புலப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) 2017/2018 ஆம் ஆண்டின் போது 4 ஒப்பந்தங்களுக்குரிய ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 203,175,119 தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணத் தொகையில் ரூபா 105,480,744 தொகை 2018 ஆம் ஆண்டின் பட்டியல்கள் மூலம் தீர்க்கப்பட்டிருந்ததுடன், தொடர்ந்தும் தீர்க்கப்பட்டிருந்த தொகை ரூபா 97,694,375 ஆகும். எவ்வாறெனினும், நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய தொகை ரூபா 97,694,375 ஆகும். எவ்வாறெனினும், நிதிக்கூற்றுகளினுள் தொடர்ந்தும் தீர்க்கப்பட வேண்டிய தொகை நடைமுறை சொத்துக்களின் கீழ் ரூபா 145,970,967 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஒப்பந்ததாரர்களுக்க வழங்கிய முற்பணமாக நடைமுறை சொத்துக்களின் கீழ் ரூபா 48,276,592 தொகையான பணம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன, அந்த அளவினாலேயே நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழுள்ள நடைமுறையல்லாத சொத்துக்களினுள் உள்ள நடைமுறையல்லா சொத்துக்களில் உள்ள நடைமுறை வேலைகள் கணக்கின் மீதியானது குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மற்றும் நிறுவனத்தின் 06 பிரிவுகளுக்காக சுத்திகரிப்பு சேவையை பெற்றுக்கொள்வதற்குரியதாக 2017 ஆம் ஆண்டிற்காக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ரூபா 6,835,320 தொகையான பணம் மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால் அந்த அளவினால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அதிகரித்திருந்தது.

(இ) கண்டி உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் நடாத்திச் செல்லப்படும் கட்டிடம் 2017 ஆம் ஆண்டின் போது மதிப்பீட்டு திணைக்களத்தினால் ரூபா 105,563,000 பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், எனினும் அதனை சொத்துக்களாக இனங்காணல் 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கமைய 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 5,278,150 தொகையான காலக்கழிவுப் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 03 நிலையான வைப்புகளுக்குரிய 2018 ஆம் ஆண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 202,974 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 257,445 ஆக

காண்பிக்கப்பட்டிருந்தமையால் நடப்பாண்டின் பற்றாக்குறை ரூபா 54,471 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) ஒவ்வொன்றும் ரூபா 5,472 படி கொள்வனவு செய்யப்பட்ட விரிவுரைக் கதிரைகள் 3,210 இற்காக வரியுடன் செலுத்தப்பட வேண்டிய பெறுமதி ரூபா 20,199,888 ஆகும். எனினும் நிதி நிலமைக்கூற்றினுள் தளபாடம் மற்றும் கடன்பட்டோராக பெறுமதி சேர் வரி நீங்கலாக ரூபா 16,798,630 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தளபாடம் மற்றும் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 3,401,258 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) சூரிய சக்திக் கட்டமைப்பினை பொருத்துவதற்காக ஒப்பந்ததாரர் ஒருவர் செலுத்த வேண்டி பெறுமதி பெறுமதி சேர் வரியுடனான நிதிக்கூற்றுக்களினுள் ரூபா 3,220,979 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், சூரிய சக்திக் கட்டமைப்பு தொடர்பிலான ஒப்பந்தத்திற்காக வற் வரி விலக்களிக்கப்பட்டிருந்தமையால் ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 2,800,185 ஆகும். இதன் பிரகாரம் நிதி நிலமைக்கூற்றினுள் கடன்பட்டோர் மற்றும் கட்டிடப் பெறுமதி ரூபா 420,794 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) ஒப்பந்தப் பெறுமதி ரூபா 166,614,856 தொகையான ஒப்பந்தத்திற்குரிய செலுத்த வேண்டிய தொகை ரூபா 12,956,179 ஆன போதிலும், நடைமுறை வேலைக் கணக்கு மற்றும் கடன் கொடுத்தோர் கணக்கின் செலுத்த வேண்டிய பணமாக ரூபா 39,008,253 குறிப்பிடப்பட்டிருந்தமையால் கடன் கொடுத்தோர் மற்றும் நடைமுறை வேலைப் பெறுமதி நிதி நிலமைக்கூற்றினுள் ரூபா 26,052,074 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கட் 17 இன் 14 (அ) மற்றும் (ஆ) பிரகாரம் சொத்து உருப்படிகள் மற்றும் தொடர்புடைய எதிர்கால நலன்கள் இல்லது சேவை சாத்தியவளங்கள் நிறுவனத்தை நோக்கிவரும் சாத்தியப்பாடு உள்ளபோது மற்றும் சொத்தின் கிரயம் அல்லது நியாயப் பெறுமதியை நம்பகத்தன்மையுடன் அளவீடு செய்யும் போது சொத்தொன்றாக இனங்காணப்பட வேண்டும்.

இது தொடர்பில் பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(I) பணிகள் நிறைவு செய்யப்பட்டிராத அம்பாறை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனப் பிரிவின் கட்டிட நிர்மாணத்திற்குரியதாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,878,533 தொகை நடைமுறை வேலையாக

கணக்கு வைக்கப்படாது கட்டிடமாக நிதி நிலமைக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(II) வவுனியா உயர் தொழில்நுட்பவியல் கலவி நிறுவனப் பிரிவின் 2016 ஆம் ஆண்டில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்குரிய ரூபா 58,360 தொகையான பிடிகாசு செலுத்தப்பட்டிருந்த 2018 ஆம் ஆண்டின் போது சொத்தொன்றாக இனங்காணப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

------------------------------------------------------------------------------------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்கூகளை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற் அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாக மற்றும் நியாயமாக உள்ளடக்கப்பட்டுள்ளதாக.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்படுகின்ற முக்கியமான கணக்காய்வு காண்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான பிரதான குறைபாடுகள் அற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புடைய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையில் முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு பல்கலைக்கழகத்தினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருந்தன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**2.1** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே நிறுவனத்தினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நிறுவகத்தின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.

**2.2** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் பல்கலைக்கழகம் இணங்கியொழுகாதுள்ளமையை.

(அ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டிய போதிலும்,

இலங்கை உணர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தெளிவாக இனங்காணப்படக்கூடிய வகையில் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2018 யூன் 08 ஆந் திகதிய MIF/1/1/11 (2015/2016) ஆம் இலக்க மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தினால் ஒவ்வொரு மாதமும் 15 ஆந் திகதிக்கு முன்னர் ஒரு மாதத்திற்குரிய தவணைப் பணங்கள் கோருதல் அந்த மாதத்தின் 31 ஆந் திகதிக்கு முன்னர் மாணவர்களுக்கு பணம் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வாறெனினும், கண்டி உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனப் பிரிவின் 2018 ஆம் ஆண்டின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்களுக்கு கிடைக்க வேண்டிய மஹாபொல தவணைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், நிறுவனத்தின் அனைத்து நுழைவு ஆண்டுகளினதும் மாணவர்களுக்குரிய (2015-2018) மஹாபொல புலமைப்பரிசில் தவணை செலுத்தும் போது ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமான தாமதமொன்று அவதானிக்கப்பட்டது.

2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய நிறுவனத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளுக்கு இணங்காத முறையில் செயற்பட்டுள்ளதாக.

2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய பின்வரும் அவதானிப்புகளை தவிர நிறுவனத்தின் வளங்கள் சிக்கனமாக செயற்திறனாக மற்றும் ஆக்கபூர்வமானதாக கால எல்லைகளினுள் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கமைய கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என.

தேசிய பெறுகைகள் முகவர் நிறுவன சுற்றறிக்கை இலக்கம் 8 இன் 8.9.1 பந்தி (அ) பிரிவின் பிரகாரம் ரூபா 500,000 விஞ்சும் பொருள் ஒப்பந்தங்களுக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திடல் 6.2.2 பந்திக்கமைய தேசிய போட்டி அடிப்படையிலான விலைக்கேள்வி கோரலுக்காக 21 நாட்களான குறைவான விலைக்கேள்வி காலம் வழங்கப்பட்டிருந்தமை மற்றும் சுற்றறிக்கையின் 5.3.11 பந்தியின் பிரகாரம் விலைக்கேள்வி பிணைமுறியொன்றை சமர்ப்பித்தல் போன்றன இலங்கை உயர்

தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் மாணவர் அடையாள அட்டை கொள்வனவுக்குரியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. ஏனைய அவதானிப்புகள்

(அ) கம்பஹா உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் விவசாயப் பிரிவிற்காக 2015 செப்தம்பர் 09 ஆந் திகதி ரூபா 760,000 செலவிடப்பட்டு Biological Microscope உபகரணத்தினை கொள்வனவு செய்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த உபகரணங்கள் பொருத்தமான முறையில் பொருத்தப்பட்டு செய்முறை பயிற்சிகளுக்காக பயன்படுத்தப்பட்டிராததுடன், 2017 செப்தம்பர் 09 ஆந் திகதி அளவில் அந்த உபகரணங்களின் உத்தரவாதக் காலம் நிறைவடைந்திருந்தது.

(ஆ) கம்பஹா உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தினுள் 2015 ஆம் ஆண்டின் போது விலங்கு பட்டிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 365,295 செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் விற்பனை செய்யப்பட்டிருந்த விலங்குகளுக்காக புதிய விலங்குகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கமையால் விலங்குப் பட்டிகள் இனைத்தும் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(இ) செயற்பாட்டு மூலதனத் தேவைப்பாட்டினை விஞ்சியுள்ள மிகை பண மீதிகள் சேமிப்பு கணக்குகளில் நிறுத்தி வைப்பதனால் கிடைக்கும் வட்டியை விட கூடிய நலன் கிடைக்கும் நிலையான வைப்புகள், திறைசேரி உண்டியல்கள் போன்ற முதலீட்டு வகையொன்றில் முதலீடு செய்யப்படாது 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய முறையே ரூபா 277.9 மில்லியன் மற்றும் ரூபா 256.9 மில்லியன் மீதியொன்று சேமிப்பு கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டின் போது இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 4,778 அல்லது 71 சதவீத அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டின் போது இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்ட அளவினை விட அந்த வருடத்தில் உள்ளபடியாக இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 624 அல்லது 5.7 சதவீத அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

(உ) நிறுவனத்திற்காக 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 04 நிறுவன பிரிவுகளின் கீழ் மீளாய்வாண்டினுள்

19 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் ரூபா 154.65 மில்லியனான நிதி இலக்கினை அடைவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் திட்டமிடப்பட்டிருந்த எந்தவொரு செயற்திட்டமும் மீளாய்வாண்டினுள் நடைமுறைப்படுத்த நிறுவனம் தவறியிருந்தது

(ஊ) நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படும் 08 பாடநெறிகளுக்காக NVQ VI தரத்தினை பெற்றுக்கொள்வதற்காக தேசிய பயிலுநர் மற்றும் பயிற்சி அதிகாரசபைக்கு ரூபா 02 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 06 பாடநெறிகளளுக்காக NVQ VI தரம் பெற்றுக்கொள்ளல் 2018 மார்ச் மாதத்தின் இறுதி வரையிலும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த தரத்தினை பெற்றுக்கொள்ள தவறியிருந்தது.

(எ) உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் பல்வேறு பாடநெறிகளுக்காக முதலாவது வருடத்தில் முழு நேர மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்ட பின்னர் ஒவ்வொரு கல்வியாண்டிலும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கருத்திற்கொள்ளப்படக்கூடிய அளவிலான மாணவர்களின் எண்ணிக்கை பாடநெறிகளை கைவிட்டுச் செல்லும் நிலமையை காணக்கூடியதாக இருந்தது. இதற்கமைய 05 பாடநெறிகளுக்குரிய கம்பஹா, அனுராதபுரம், கண்டி மற்றும் காலி போன்ற உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் மீளாய்வாண்டு மற்றும் கடந்த 03 வருடங்களனி 2,989 எண்ணிக்கையான மாணவர்கள் பாடநெறிகளை கைவிட்டுச் சென்றுள்ளனர்.

(ஏ) கம்பஹா உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் நிரந்தர விரிவுரையாளர்கள் 11 கேரால் தமது நாளாந்த கடமை நேரத்தினுள் வெளிவாரி விரிவுரையாளர்களாக விரிவுரைகளை நடாத்துதல் இடம்பெற்றிருந்ததுடன், நிரந்தர விரிவுரையாளர்கள் அவர்களின் சாதாரண கடமை நேரத்தினுள் வெளிவாரி விரிவுரைகளை நடாத்துவதற்கு நேர அட்டவணையில் விரிவுரைகள் நடாத்தப்படும் நேரங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் நிரந்தர விரிவுரையாளர்கள், நிறுவனத்தின் வெளிவாரி விரிவுரையாளர்களாக விரிவுரைகளை நடாத்துவதற்கு ரூபா 539,240 தொகை மீளாய்வாண்டினுள் அவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், விரிவுரையாளர்குளுக்குரிய கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் நடாத்தக்கட வேண்டிய விரிவுரைகளின் எண்ணிக்கையும் பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ஏ) கம்பஹா உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் நடாத்திச் செல்லப்படும் விவசாய உயர் தேசிய டிப்ளோமாவிற்காக முதலாவரு மற்றும் இரண்டாவுது

வருட மாணவர்களுக்காக முறையே 56 மணித்தியாலங்கள் மற்றும் 70 மணித்தியாலங்கள் படி செயற்முறைப் பயிற்சிகளை வழங்க வேண்டிய போதிலும், அவ்வாறு நடைமுறைப் பயறிசியை வழங்குவதற்காக 2017 ஆம் ஆண்டு வரையிலும் அதில் நடாத்தப்பட்ட விலங்கு கட்டுப்பாட்டு பிரிவின் விலங்குகள் விற்பனை செய்யப்பட்டிருந்தமையால் அந்த அலகு செயலற்றிருந்தது. அதன் பின்னர் புதிய விலங்குகள் கொள்வனவு செய்யப்பட்டு அந்த அலகினை செயற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன், செய்முறைப் பயிற்சியை பெற்றுக்கொள்வதற்காக நிறுவனத்திலிருந்து சுமார் 16 கிலோ மீட்டர்கள் தொலைவில் அமைந்துள்ள தனியார் பண்ணையொன்றிற்கு மாணவர்களை கொண்டு செல்ல நேர்ந்துள்ளது.

(ஐ) மாணவர்களின் செய்முறை பயிற்சிகளை மேற்கொள்வதற்காக பாதுகாப்பு வீடொன்றினை (Protected House) நிர்மாணிப்பதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 388,914 செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டளவில் அந்த வீட்டினை பயன்படுத்தல் தொடர்பான தளப் பிரச்சினைகள் உருவாகியிருந்தமையால் இது வரையில் வீட்டின் அனைத்து உபகரணங்களும் செயலற்ற நிலையில் காணப்பட்டதுடன், பொருத்தமான இடமொன்றில் நிறுவி செய்முறை பயிற்சிகளில் ஈடுபடுத்துவதறகு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவையை பெற்றுக்கொள்ளல் தொடர்பில் அந்த விரிவுரைகளுக்குரிய முன் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அநுராதபுரம் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் மீளாய்வாண்டிற்காக நடாத்தப்பட்டிருந்த விரிவுரைகளுக்குரிய அங்கீகாரம் 2018 யூலை 01 ஆந் திகதி மற்றும் யூலை 12 ஆகிய திகதிகளில் தலைமை அலுவலகத்தினால் கோரப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் நவம்பர் இறுதி வரையிலும் உரிய அங்கீகாரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அங்கீகாரமின்றி வெளிவாரி விரிவுரையாளர்களின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், வெளிவாரி விரிவுரையாளர்கள் நடாத்தியிருந்த விரிவுரைகளுக்குரிய படிகளாக ரூபா 2,311,118 தொகையான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த கொடுப்பனவுகளை மேற்கொள்வதிலான சிக்கல்கள் நிலவின.

(ஓ) உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தில் ரூபா 65,089 பெறுமதியான 261 புத்தகங்கள் காணாமற் போயிருந்ததுடன், அந்த உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின 2007 முதல் 2017 வரையிலுமான வருடாந்த இருப்பு

மெய்மையாய்வு மூலம் ரூபா 64,655 பெறுமதியான 233 புத்தகங்கள் காணாமற் போயிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. மேலும் இந்த நிறுவனத்தின் நூலகத்தில் ரூபா 35,897 பெறுமதியான 181 சிதைவடைந்த புத்தகங்கள் கைதவிர்ப்புச் செய்யப்படாமல் வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறே அநுராதபுரம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் இவ்வாறான 56 சிதைவடைந்த புத்தகங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) நூலகத்திற்காக புத்தகங்களை கொள்வனவு செய்யும் போதும் நன்கொடையாக பெற்றுக் கொள்ளும் போதும் நூலகக் குழுவிடமிருந்தும் நூலகரிடமிருந்தும் விசாரித்து தேவைப்பாடு இனங்காணப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் அத்தேவைப்பாடுகளை நிறைவேற்றாமல் ரூபா 578,950 பெறுமதியான 290 புத்தகங்கள் கண்டி உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் நூலகத்தில் பயன்பாடின்றி வைக்கப்பட்டிருந்தன.

(கா) அநுராதபுரம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 1300 மாணவர்களுக்கு அண்மித்த அளவிலான மாணவர்கள் கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதிலும் அம்மாணவர்களுக்காக போதியளவு நூலகமொன்று ஸ்தாபிக்கப்பட்டு மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் அதனைப் பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(கி) நூலகத்திற்கு தேவையான அளவில் பதவியணியினர் இல்லாமையால் தற்போது நூலகர் மற்றும் உதவி நூலகர் பதவியில் சேவை புரியும் பதவியணியினருக்கு உரித்தாகும் சம்பள அளவு மற்றும் பதவி உயர்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் நூலக நடவடிக்கைகளை செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் மேற்கொள்ள முடியாதிருந்த நிலைமையொன்று உருவாகியிருந்தது.

(கீ) யாழ்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்திலற்கு நான்கு மாடி கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக நிறுவனத்தினால் தனியார் நிர்மாணக் கம்பனிக்கு 2016 நவம்பர் 10 ஆந் திகதி ரூபா 36,988,498 ஆன வேலை ஆரம்பிப்பு முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் 2017 யூலை 24 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த செயற்பாடுகளுக்குரியதாக ரூபா 12,956,179 ஆன பட்டியலொன்றும் பொறியியலாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இக்காணி வேறு தனியால் ஒருவருக்கு உரித்தானதென காணி உரித்தாளரினால் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நிறுவனத்திற்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தின் அடிப்படையில் 2017 மார்ச் 09 திகதி முதல் குறித்த இடத்திற்குள் நுழைவதனையும் நீதிமன்றம் தடைசெய்திருந்தது. மேலும் கண்டி (அம்பிட்டி காணி), அம்பாறை, அநுராதபுரம், மட்டக்களப்பு, வவுனியா,

பதுளை (புதிய காணி), இரத்தினபுரி (புதிய காணி), நாவலப்பிட்டி மற்றும் திருகோணமலை (புதிய காணி) ஆகிய உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களை நடாத்திச் செல்லும் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், இக்காணிகளின் சட்டரீதியான உரித்தினை உரிய வகையில் நிறுவனத்திற்கு கையேப்பதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) கம்பஹா உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் மின்சார செலவினத்தை குறைக்கும் நோக்கில் முறையான சாத்தியவள ஆய்வொன்றில்லாமல் ரூபா 13.1 மில்லியன் செலவு செய்து ஸ்தாபிக்கப்பட்டிருந்த சூரிய மின்சக்தி அலகினை பொருத்தும் நடவடிக்கைகள் 2018 மே 08 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் முறைமையை செயற்படுத்துவதற்காக மொத்த மின்சார இணைப்பு பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு உருவாகியதால் இம்முறைமையை நபொருத்தியதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(கூ) இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம் மற்றும் நிறுவன பிரிவுகளின் மாணவர்கள் மற்றும் பதவியணியினர்களுக்கு அவர்களின் விரிவுரைகளுக்குரிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய இணையத்தள வசதிகளை வழங்குவதற்காக Lanka Education and Research Network (LEARN) நிறுவனத்திற்கு மீளாய்வாண்டில் ரூபா 2.7 மில்லியன் தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட இணையத்தள சேவையில் காணப்பட்ட குறைந்த வேகம் காரணமாக மேலதிக பணம் செலவிடப்பட்டு ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்திடமிருந்தும் இணையத்தள வசதிகள் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் LEARN நிறுவனத்திற்கு மீளாய்வாண்டில் செலுத்திய பணம் விளைவற்றதாக இருந்தது.

(கெ) பெறுமதி சேர் வரிக்காக பதிவுசெய்யப்படாத ஒப்பந்தக்காரரொருவருக்கு பெறுமதி சேர் வரி (VAT) தொகைக்குரிய விடுவிப்பு சான்றிதழ் பெற்றுக்கொண்டுள்ளதாக உறுதிப்படுத்தாமல் பெறுமதி சேர் வரியாக ரூபா 13 மில்லியன் தொகை பட்டியல் தீர்வின் போது நிறுவனத்தினால் வரியாக அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(கே) சுத்திகரிப்பு சேவை பெறுகைக்குரிய பெறுகை சட்ட திட்டங்'கள் மற்றும் நிதிப்பிரமாணம் என்பன மீறப்பட்டமை தொடர்பாக நிறுவனத்தில் இதற்கு முன் இருந்த பணிப்பாளர் நாயகத்திற்கு குற்றச்சாட்டிக்கு உள்ளாகியிருந்தார் எவ்வாறாயினும் அந்த உத்தியோகத்தரை அப் பதவியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அவருக்கு எதிராக ஒழுக்காற்று செயற்பாடுகளை எடுப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கொ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 134 நிறுவனங்களில் ஊழியர் வெற்றிடங்க்ள காணப்பட்டதுடன் அந்த அளவினை தீர்மானிக்கும் செயற்பாட்டிற்கு நேரடியாக தொடர்புறும் சிரேஷ்ட நிலையிலான உத்தியோகத்தரிடமிருந்து 25 சதவீதம் அளவிலும் மூன்றாம் நிலையிலுள்ள ஊழியர் தேவைப்பாட்டில் 32 சதவீதமான அளவொன்றும் கல்விசார் உதவி பதவியணியின் 30 சதவீதமான அளவும் வெற்றிடங்களாக இருந்ததுடன் இந்நிலைமை கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதில் பாரிய தடையொன்றாக இருந்தது.

(கோ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வது தொடர்பாக 2030 "நிகழ்ச்சிநிரல்" தொடர்பாக நிறுவனத்தினால் அறிந்திருந்த போதிலும் அச்செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகள் நோக்கி அடையப்பட வேண்டிய மைல்கல் உட்பட அது தொடர்பாக வேலைத்திட்டமொன்றை பாதீட்டில் உள்ளடக்கி இலக்கை மதிப்பிடுவதற்கான சுட்டிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

## கணக்காளர் நாயக அறிக்கைக்கான பதில்கள்

1.2

(அ) நீங்கள் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 48,276,592 பணம் நடைமுறை அல்லாத சொத்துக்கள் பட்டியல்படுத்துவதற்கு பதிலாக நடைமுறை சொத்தாக குறிப்பிடப்பட்டிருந்ததை ஏற்றுக்கொள்ளுகின்றேன். அது தவறுதலாக இடம்பெற்றுள்ளது.

(ஆ) நீங்கள் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 6,835,320 பணம் சரியாக அட்டுறு கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் தவறுதலாக அது மீளாய்வாண்டிலே செலவொன்றாக கணக்கு வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றேன்.

(இ) கண்டி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடைமுறை வருடத்திலே கட்டிட பெறுமதிக்கு உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு உரிய மதிப்பீட்டு அறிக்கை பிரதான காரியாலயத்திற்கு கிடைக்கப்பெற்றது இறுதிக் கணக்கு நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யும் வேலையில் என்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன்.

(ஈ) யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நிலையான வைப்புக்கு உரிய ரூபா 54,471 கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ளுகின்றேன். தவறுதலாக உரிய கணக்கீடுகள் சரியாக முன்வைக்க முடியாதுபோனதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன்.

(உ) நீங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் 11 க்காக தளபாடங்கள் கொள்வனவு செய்யும்போது குறைவாக கணக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் காரணமாக கடன்கொடுத்தோர் மீதி மற்றும் தளபாட மற்றும் காரியாலய உபகரண கணக்கு மீதிகள் குறைவாக கணக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ளுகின்றேன்.

(ஊ) தவறுதலாக வவுனியா, இரத்தினபுரி, மற்றும் அனுராதபுரம் ஆகிய உயர் தொழில்நுட்ப நிறுவன பிரிவுக்காக சூரிய மின்சக்தி கட்டமைப்பு கண்டுபிடிப்புக்காக வெட் வரி கணக்கீடு செய்வதற்கு ஏற்பட்டதாக ஏற்றுக்கொள்கின்றேன். சூரிய மின்சக்தி பெற்றுக்கொள்வதற்கு தவறுதலாக வெட் வரி அறவிடுதலை காரணம் காட்டி நீங்கள் சுட்டிக்காட்டியதன்படி கடன்கொடுத்தோரின் பெறுமதி கூடுதலாக காட்டப்பட்டுள்ளன. ஏற்றுக்கொள்ளுகின்றேன். அதன்படி வெட்வரி கணக்கீடு மேற்கொண்டதனால்

ஒட்டுமொத்த நிறுவன கட்டமைப்பின் கட்டிட கிரயம் அதிகமாக காட்டப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றேன்.

(எ) யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரரினால் முன்வைக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த பணத்தை அடிப்படையாக வைத்து உரிய கணக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பின்னர் இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பொறியியலாளர் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட குறைப்பு சம்பந்தமாக உரிய ஒப்பந்தக்காரர் இதுவரை இணக்கப்பாட்டிற்கு வரவில்லை என்பதை நினைவூட்டுகின்றேன். அதன்படி உரிய ஒப்பந்தக்காரர் நீங்கள் குறிப்பிடப்பட்டதன் படி இலங்கை உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் பொறியியல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட குறைப்பு மற்றும் இணக்கப்பாட்டிற்கு வருவதாக இருந்தால் அல்லது அதில் ஒருசில மாற்றங்களை மேற்கொள்வதாக இருந்தால் அதற்கு உரிய தகைமையோடு சீர்செய்வதற்கு எதிர்பார்க்கின்றேன்.

(i) உங்களின் அவதானிப்புக்கு உள்ளான அம்பாறை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 3,878,533 பணம் கட்டிட புனர்நிர்மாண கணக்காக குறிப்பிடப்பட்டிருந்தாலும் அது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வேலையாக குறிப்பிடப்பட வேண்டுமென ஏற்றுக்கொள்ளுகின்றேன்.

(ii) 2017 வருடத்திலே முறையாக உரிய உயர் தொழில்நுட்ப நிறுவனத்திடம் அதிகாரபகிர்வு இடம்பெற்றிருக்கவில்லை. ஓரளவு அதிகாரப்பகிர்வாக இடம்பெற்றிருக்குமானால் முழுமையாக ஆவணங்களினூடாக உரிய சொத்து பகிர்வு இடம்பெற்றிருப்பது 2018 வருடத்திலேயாகும். அதன்படி சரியான உரிய சொத்துக்களாக 2018 ஆம் வருடத்திலே தேவையான கணக்குகள் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

2.2

(அ) இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டு வந்தாலும் அங்கு, உள்ளக தொழில்நுட்ப குறைபாடுகள் முழுமைப்படுத்தப்பட்டு முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) 2018 வருடத்திற்கு உரிய செயற்பாடு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ஒவ்வொரு பிரிவிற்குமுரிய செயற்பாடு திட்டம் வெவ்வேறாக இரண்டு பகுதிகளாக தயாரிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், 2019 ஆம் வருடத்திற்கு உரிய செயற்பாட்டுத் திட்டம் இந்த குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு 2014 பெப்ரவரி

17 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

(இ) 2018 ஆம் வருடத்தின் முதலாம் வருட மாணவர்கள் 2018 மார்ச் மாதத்தில் உள்வாங்கப்பட்டதுடன் அந்த மாணவர்களுள் மஹபொல புலமைப்பரிசுலுக்குரிய மாணவர்களை தெரிவு செய்வதற்காக உரிய மாணவர்களினால் ழுடெiநெ மூலம் மஹாபொல புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மஹபொலவுக்காக விண்ணப்பித்துள்ள மாணவர்களின் தரவுகள் பிரதான காரியாலயத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் பிரதான காரியாலயத்தினால் மஹாபொல புலமைப்பரிசிலுக்கு உரியவர்களை தெரிவு செய்தல் இடம்பெறுவதுடன் கணக்காய்வு தினத்தில் உரிய தெரிவு இடம்பெற்றிருக்கவில்லை என்பதுடன் வருடாந்த பணத்தை விண்ணப்பிப்பதற்கு முடியாதிருந்தது.

2.4 ரூபா 500,000 இற்கு அதிகமாக கொள்வனவின் போது செயற்திறனான பிணையின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், அப்படி செயற்படாமல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்ததை ஏற்றுக்கொள்ளுகின்றேன். உயர் தொழில்நுட்ப நிறுவனம் இணையத்தளம் மூலமாக கொள்வனவு செய்வதற்கு விலைமனு கோரப்பட்டிருந்தது. அதன்படி உரிய காலம் போதுமானதாக இல்லை என்பதை ஏற்றுக்கொள்ளுகின்றேன். கணக்காய்வினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள காரணங்களுடன் இணங்குகின்றேன். எதிர்காலத்தில் அப்படியான குறைபாடுகள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ளுகின்றேன்.

3.

(அ) அப்போதைய பிரிவுத் தலைவரின் ஊடாக பணிப்பாளருக்கு அவசியமான வசதிகள் (மென்பொருள், கணனி இயந்திரம், உள்வாங்கும் இயந்திரம், வாயுக்குளிரேற்றி) பெற்றுத்தருமாறு கலைஞர்கள் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) மீண்டும் கால்நடை பண்ணை முகாமையாளரினால் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், புதிய விடுதி கட்டிடத்திற்கு அண்மையில் மாட்டுப்பட்டி ஸ்தாபிக்கப்பட்டதன் காரணமாக சுற்றாடல் சமூக பிரச்சினைகள் உருவாவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்ற. அதனால் மாட்டுப்பட்டி வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டும்.

(இ) இலங்கை தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் சேமிப்புக் கணக்கின் மீதியை உபயோகப்படுத்தி கீழ் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் 03 நிலையான வைப்புக் கணக்குகள் தற்போது திறக்கப்பட்டுள்ளதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன்.

| | | |
|---|---|---|
| 025-60-02-00006239-7 | 100,000,000 | 2020.05.22 |
| 025-60-02-00006239-8 | 50,000,000 | 2019.08.22 |
| 025-60-02-00006239-9 | 50,000,000 | 2019.08.22 |

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டதை போன்று 2017 ஆம் வருடத்தில் குறிப்பிட்ட அளவு மாணவர்கள் உள்வாங்கப்படுதல் அதிகரித்திருப்பது 2017 ஆம் வருடத்திற்காக 2015 மற்றும் 2016 ஆகிய 02 வருடங்களுக்குரிய க.பொ.த உயர்தரத்தில் பயிலும் மாணவர்களை உள்வாங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இந்த உள்வாங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை உள்வாங்குவதற்கு எதிர்பார்த்த எண்ணிக்கையிலும் பார்க்க அதிகரித்து உள்ளது.

(உ) நிறுவனத்தின் அன்றைய பணிப்பாளர் நாயகத்தின் சேவை காலம் 2018 யூலை கட்டுப்பாட்டு அதிகாரியின் வழிகாட்டலின் கீழ் முடிவுக்கு வரப்பட்டது. அதற்குப் பின் வருகைதந்த வேலைபார்க்கும் பெண் பணியாளர் நாயகத்தினால் அனைத்து செயற்திட்டங்களையும் நிறுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதற்கு காரணம் செயற்திட்ட பெறுமதி ரூபா 400, மில்லியன் ஆக இருந்ததுடன் நிதி அமைச்சின் நிதி ஏற்பாடுகள் வழங்கப்படும் போது ஏற்படுகின்ற தாமதமும் காரணமாகும்.

(ஊ) அட்டவணையாக சமர்ப்பிக்கின்றேன்.

(எ) பாடக்கோப்பினை விட்டுச் செல்வதை தவிர்ப்பதற்காக

- நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி
- பாடக்கோப்பின் தரத்தை அதிகரிக்க பாடத்திட்டத்தை நாளதுவரையாக்குதல்.
- எவ்விதமான கட்டணங்களும் இல்லாமல் மேற்கொள்ளப்படும் பாடக்கோப்பை கற்கின்ற மாணவர்களைத் தவிர ஏனைய மாணவனுக்கு உரிய கிரயத்தை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

(ஏ)

- வெளிவாரியான விரிவுரைகளை மேற்கொள்கின்ற நிரந்தர விரிவுரையாளர்கள் நிறுவனத்தின் உள்ளக சுற்றறிக்கைகளின் அவசியத்தன்மையை நிரப்புவதற்கு ஏற்றவகையில் உரிய விரிவுரைகள் இடம்பெற்றுள்ளது. கணக்குப் பிரிவின்

சிரேஷ்ட விரிவுரையாளர், திருமதி பீ.ஆர் பிரனாந்து மற்றும் உதவி விரிவுரையாளர் திருமதி. என்.எம். தமரசிங்க உரிய விரிவுரைகள் மணித்தியால கணக்கில் முறையே 17 மற்றும் 21 ஆக அந்த தேவை வழங்கப்பட்டிருந்தது. சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி புளத்சிங்களகே கணக்குப் பிரிவின் பிரிவுத் தலைவராக 04 மணித்தியாலமும் மாணவர் பயிற்சி பிரிவின் இணைப்பாளராக (Internship Coordinator) 01 மணித்தியாலமும் நிரந்தர விரிவுரைகளில் இருந்து விடுபடுகின்றனர். அப்படி விடுபடுகின்ற மணித்தியாலங்கள் உரிய நேரசூசியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி அந்த மணித்தியால அளவு சேர்க்கப்படும் போது முழு மணித்தியால கணக்கு 17 ஆகும்.

- நிரந்தர விரிவுரையாளர்கள் வெளிவாரி விரிவுரைகளுக்கு உரிய மணித்தியால கணக்கு பூர்த்தியாகியிருப்பது உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளரின் அனுமதியுடன் வெளியாகும் சுற்றுநிருபங்களின் பரிந்துரைகளுக்கு அமையவேயாகும். அதன்படி அனைத்து வெளிவாரி விரிவுரைகளுக்கு பணிபுரியும் விரிவுரையாளர்களும் உரிய நிரந்தர மணித்தியால கணக்கு 05 தினங்களுக்குள் பூர்த்தி செய்து மேலதிக இன்னுமொரு தினத்தை 06 ஆவது நாளாக நிறுவனத்திற்குள் வருகை தந்து வெளிவாரி விரிவுரையை பூரணப்படுத்தி உள்ளனர்.

- அறு மாதங்கள் முடிவடையும் போது அனைத்து மணித்தியால கணக்கும் மற்றும் பூரண விடய பரிந்துரைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறியத்தருகின்றேன். விரிவுரை பதிவுப்புத்தகத்தில் அனைத்து விரிவுரைகளையும் உள்ளடக்குவதற்கு முடியாமைக்கான தவறுக்கு மனவருத்தத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். எப்படியாக இருப்பினும் எதிர்காலத்தில் இப்படியான தவறுகள் இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஐ) இப்போதைக்கு தற்சமயம் பண்ணை முகாமைளாளர் சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் பண்ணை சிறிய அளவில் மாணவர்கள் பிரயோக பயிற்சிக்கு தேவையான முறையில் மிருகங்களை மீண்டும் ஈடுபடுத்தி தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்கு பண்ணை குழுவில் மீண்டும் ஈடுபடுத்தி தொடர்ச்சியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இடங்கள் வரையறுக்கப்பட்டிருந்ததுடன் பெரிய அளவில் மிருகங்களை நடைமுறைப்படுத்துவதற்கு செயற்பாட்டு ரீதியாக வசதியீனங்கள் காணப்படுகின்றன.

(ஒ) விடயத்திற்கு பொறுப்பான விரிவுரையாளரினால் பாமுகாப்பு அரணை மீண்டும் நிறுவுதல் மற்றும் நவீனமயப்படுத்தவதற்காக செயற்திட்ட யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. காணப்படுகின்ற வசதிகளுக்கு மத்தியில் நடைமுறை பிரயோகத்திற்குட்பட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

(ஓ) தவணையின் (ளுநஅநளவநச) ஆரம்பத்தில் வெளிவாரியான விரிவுரையாளர்களுக்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக கற்கையின் ஆரம்பித்தலுக்கு ஆகக் குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்னர் நேர அட்டவணை அனுப்பப்பட வேண்டிய போதிலும், எவ்வித நேர அட்டவணைகளும் எந்தவொரு நிறுவனங்களினாலும் அவ்வாறான அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், பட்டியல்களினை பரீட்சிப்பதில் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வடிவங்களினை அங்கீகரிப்பதில் தாமதமொன்று காணப்படுகின்றது. ஒவ்வொரு தவணையினதும் அனைத்து பணிப்பாளர்கள் ∴ கல்விசார் ஒருங்கிணைப்பாளர்களுக்கு இது அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

(ஔ) மாணவர்களினால் இழக்கப்பட்டிருந்த 261 புத்தகங்கள் தொடர்பில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வு அறிக்கை குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அந்த 261 புத்தகங்கள் மாணவர்களினால் நூலகத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. நூலக புத்தகங்களினை கையளித்திராத அனைத்து மாணவர்களுக்கும் ஞாபகமூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தது. இந்த மாணவர்கள்ன தனிநபர் கோவை உள்ளடக்கியிருந்த சான்றுப்பத்திரங்களும் பெறுபேற்று ஆவணங்களும் நூலகரின் பரிந்துரையின் பேரில் விநியாகிக்கப்பட்டு காணப்பட்டது.

- இதற்காக அங்கீகாரத்தை அளிப்பதில் தலைமை அலுவலகத்தில் தாமதமொன்று காணப்படுகின்றமையை நான் ஏற்றுக்கொள்ளுகின்றேன். வருடாந்த பொருள் அளவைச் சபை மற்றும் நிறுவன முறைமையின் இருப்பு கணக்கெடுப்பு தற்போது செயன்முறையில் காணப்படுகின்றதுடன் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் இந்த விடயத்தை குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(க) புத்தகங்கள் தலைமை அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யப்படுகின்றதுடன் ஒவ்வொரு நிறுவகத்திலும் காணப்படும் நூலகத்திற்கு விநியோகிக்கப்படுகின்றன. வாசகர்களின் பயன்பாட்டிற்கு வேண்டப்படாத எவ்வித முறைமையும் காணப்படாமையினால், நூலக செயற்பாடு பதிவு செய்த பின்னர் அலுமாரிகளில் களஞ்சியப்படுத்துவதற்கு வேண்டப்படுகின்றது.

(கா) அனுராபுர உயர் தொழில்நுட்ப நிறுவகத்திற்காக ஒரு கட்டிடம் மாத்திரம் காணப்படுகின்றதுடன் அனைத்து இடங்களும் விரிவுரையாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றதுடன் நூலகத்திற்காக இடமொன்றை ஒதுக்குவது சாத்தியமற்றதாகக் காணப்படுகின்றது. இது தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், நூலகத்தை அமைப்பதற்கு முடியாது காணப்படுகின்றது. தற்போது, நூலகத்தின் தொழிற்பாடுகள் மிகவும் கடினமான நிலைமைகளின் கீழ் கணனி ஆய்வுகூடமொன்றின் வரையறுக்கப்பட்ட இடைவெளியொன்றில் பராமரிக்கப்படுகின்றது. இதற்கான தீர்வொன்றாக, இந்த நிறுவகம் தற்காலிக கட்டிடமொன்றில் வழங்கப்படுமாகயிருந்தால், நூலகமொன்றிலுள்ள பிரதான கட்டிடத்தில் விரிவுரைகளினை நடாத்த மற்றும் விரிவுரை மட்டமொன்றாக மாற்ற முடியுமென நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

(கி) நூலகர் பதவி தற்போது வெற்றிடமாகக் காணப்படுகின்றதனால், திருமதி. உதேனி ரத்நாயக்க, உதவி நூலகரின் பங்குபற்றுதலுடன் நூலகத்தினை அபிவிருத்தி செய்வதற்கான செயற்பாடுகள் கல்விசார் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், உதவி நூலகரின் பொறுப்பின் கீழ் நூலகக் குழுவொன்று அமைக்கப்படும்.

- நூலகர் பதவியை ஆஆ வகைக்கும் உதவி நூலகர் பதவியை துஆ வகைக்குமான பதவியணியினராக பதவி உயர்த்துவதற்கு ஆளுகை சபையின் அங்கீகாரத்தைப் சபை பெற்றிருந்தது. அதற்காக, உயர்கல்வி அமைச்சின் செயலாளரினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டிருக்கின்றது.

(கீ) யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவகம் சார்பில் தற்போது நிர்மாணிக்கப்படுகின்ற காணியின் தீர்ப்பனவொன்று தொடர்பில் தீர்மானிப்பதற்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு யாழ்ப்பாண மேன்முறையீட்டு நீதிமன்றம் கால அவகாசம் அளித்திருந்தது. தீர்ப்பனவு தொடர்பான முன்மொழிவின் பிரகாரம், யாழ்ப்பான பிரதேச செயலாளர் தனியார் உரிமையாளர்களுக்கு மற்றுமொரு காணியை வழங்குவதற்கு இணங்கியிருந்தார். மேன்முறையீட்டு நீதிமன்றம் இறுதி தீர்ப்பனவொன்றிற்காக ஆகஸ்ட் 9 2019 இல் விசாரணையை பட்டியல்படுத்தப்பட்டிருந்தது.

(கு) இந்த செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு முன்னர் எவ்வித சாத்தியவள அறிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் செயன்முறை தொடர்பான

கஷ்டங்கள் காரணமாக இந்த தாமதங்கள் ஏற்பட்டிருந்தது என்பதை நான் ஏற்றுக்கொள்ளுகின்றேன்.

(கூ) இணைய சேவையின் வேகம் பயன்படுத்துவதற்கு (5 ஆடிிள) மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு உகந்ததற்றதாகவும், போதுமானதாகவும் காணப்படாமையினால், அதனை (20 அடிிள இற்கு) அதிகரிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. தற்போது இந்த வசதிகள் பதுள்ள உயர் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

(கெ) எம்.்.எஸ் ஒகன்டா கென்ஸ்ரக்சன் பெறுமதிசேர் வரியை செலுத்துவதற்காக பதிவு செய்திருந்ததுடன் வற் இலக்கம் 409385397-70000 ஆக உள்ளது என இலங்கை உயர்தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்திற்கு அறிவித்திருந்த போதிலும், இவ் இலக்கம் வலை ரெஅடிநச ஆக காணப்பட்டதை நாங்கள் சரிபார்த்திருந்தோம். தங்களது தகவலிற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட 2015.02.20 ஆம் திகதிய கடிதத்தின் பிரதியொன்றும் 2015.02.25 ஆந் திகதிய கடிதமும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. தங்களது தகவலிற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட 2015.02.20 ஆந் திகதிய கடிதத்தின் பிரதியொன்றும் 2015.02.25 ஆந் திகதிய கடிதமும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

தற்போது எம்.்.எஸ் ஒகண்டா கென்ஸ்ரக்சனிற்கு செலுத்தவேண்டிய தொகை ரூபா 28 மில்லியனானதுடன் ரூபா 13 மில்லியன் தொகையான வற் மேலதிக கொடுப்பனவு தொகை ஏற்கனவே கழிக்கப்பட்டிருந்ததென்பதை நான் தெரிவிக்கின்றேன். அத்தகைய குறைபாடுகளை தடுப்பதற்காக எதிர்காலத்தில் வற் பதிவு சரிபார்க்கப்பட வேண்டும் என கணக்குகள் பிரிவிற்கு ஆளுகை சபை அறிவுறுத்தியிருந்தது.

(கே) கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையின் கண்டுபிடிப்புக்கள் இதனை உறுதிப்படுத்துவதால் ஆளுகை சபையின் அறிவுரை தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. உயர்கல்வி அமைச்சின் செயலாளரிற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

(கை) அனைத்து உத்தியோகத்தர்களினதும் ஆட்சேர்ப்புக்கள் தற்போது பூர்த்தியடைந்துள்ளன.

- பிரதிப் பணிப்பாளர்கள் இருவரும் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

- பணிப்பாளர் தரம் I இன் பதவிகள் அனைத்தும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் சில சபையின் அங்கீகாரத்திற்காக பணிப்புரை செய்யப்பட்டிருந்தன.
- 2019 யூன் 19 இல் உள்ளவாறு பணிப்பாளர் தரம் II இற்காக வெற்றிடங்கள் எவையும் காணப்படவில்லை.

அதற்கிணங்க ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**மூன்றாம் நிலை**

---------------------------

வெற்றிடங்களிற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

- கல்விசார் பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்காக முன்னர் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், நாட்டின் ஸ்திரமற்ற நிலைமை காரணமாக இது இரத்துச் செய்யப்பட்டிருந்தது. மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததுடன் இது இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும்.
- பத்திரிகை விளம்பரத்திற்கான காலம், தெரிவு செய்து, நிரப்பித் தரவுகளை கணனிமயப்படுத்துவதற்கான காலம், நேர்முகப் பரீட்சைகளிற்கான காலம், இரண்டு சபைகளை வழிநடாத்தி நியமனம் செய்வதற்கான காலம் என்பன காரணமாக நியாயமான காலப்பகுதியொன்று எடுக்கப்படுகின்றது.

போதியளவு சம்பளம் வழங்கப்படாததன் காரணமாக பதவியணியினர் புரள்வு சாதாரண விடயமொன்றாக உள்ளது.

(கொ) அதற்கிணங்க, இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனமானது அதற்கிணங்க நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களிற்காக ஐக்கிய நாடுகள் 2030 நிகழ்ச்சி நிரலின் தந்திரோபாய இலக்குகளை இணங்கண்டிருந்தது.

(i) இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கான அணுகுமுறைகள் மற்றும் வாய்ப்புக்களை உருவாக்குதல்.

(ii) டிப்ளோமா கல்வியாளர்களின் தரம் மற்றும் தொழில்வாய்ப்பை முன்னேற்றுதல்.

(iii) ஆராய்ச்சி அபிவிருத்திக்குத் தேவையான நிபந்தனைகளை

**<u>சூழல் நிலைத்திருப்பதற்கான எதிர்கால திட்டம்</u>**

இலங்கை உயர் தொழிநுட்ப நிருவாகம், ஒரு உயர் கல்வி நிறுவனமாக இருப்பதால் அழகான ஒரு சுற்றுப்புற சூழலை மாணவர்களுக்கு உருவாக்கி கொடுப்பது இன்றியமையாததாகும். அதனால் ஒவ்வொரு நிறுவனத்திலும் மரங்கள் நடுவதற்கும், பொருத்தமான நிலப்பரப்பை அமைத்துக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சில உயர் தொழிநுட்ப நிறுவனங்கள் ஏற்கனவெ சூரிய மின்சாரத்தை பயன்படுத்துகின்றன. எதிர்காலத்தில் இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனம் சூரிய மின்சாரத்தை அனைத்து உயர் தொழிநுட்ப நிறுவனத்துக்கும் வழங்கி மாணவர்களுக்கு நல்ல ஒரு வசதியான சுற்றுப்புற சூழலை உருவாக்க தீர்மானித்துள்ளது. இதன் மூலம் தேசிய மின்சார சபையால் வழங்கப்படும் மின்சார பயன்பாகுறைவடையடு வாய்ப்புக்கள் உண்டு.

அத்துடன் கழிவு முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்துவதன் மூலம், குப்பைகளை மீன் சுழற்சி முறைக்கு உட்படுத்துவதன் மூலமும் சுற்றுப்புற சூழலை பாதுகாப்பதற்கு உயர் தொழிநுட்ப நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

மேலும் புதிய நிறுவனங்களை அமைக்கும் போது சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கட்டிடங்களை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சூழல் நேயமான இரு- வாலி மின் குமிழ்களை பயன்படுத்துவதன் மூலம் மின்சாரம் சேமிக்கும் திட்டத்தையும் இலங்கை உயர் தொழில்நுட்ப நிருவகம் முன்னெடுத்துள்ளது.